# வளநூல்

# செயல்வழிக்கல்வி
# தொடக்கநிலை வகுப்புகள்

## Work Education
## Source Book
## L.P.Level

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (SCERT), கேரளம்.
2015

State Council of Education Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala.

website : www.scert.kerala.gov.in
email : scertkerala@gmail.com
phone : 0471-2341883, Fax : 0471-2341869
First Edition : 2014
Printed at : KBPS, Kakkanad, Kochi

நண்பரே,

கல்வி உரிமைச்சட்டப்படிச் செயல்வழிக்கற்றல் பிறபாடப் பகுதிகளின் அதே முக்கியத்துவத்துடன் நடைமுறையில் வருகிறது. ஒன்றாம் வகுப்பு முதல் முறைப்படுத்தப்பட்ட பாட ஏற்பாடு வடிவமைக்கப் பட்டுள்ளது. இதற்கு ஏற்ப வகுப்பறையின் கற்றல் செயல்பாடுகளுக்குப் பயன்படும் முறையில் ஆசிரியர்களுக்கு உரிய கருத்து வளநூல்களை எஸ்.சி.இ.ஆர்.டி தயாராக்கியுள்ளது.

குழந்தைக்கும் சமூகத்துக்கும் தேவையான அடிப்படை வாழ்க்கைக் கூறுகளான உணவு, பயிர்த்தொழில், உடல்நலம், உடல்நலப்பராமரிப்பு, உடை, உறைவிடம், பொழுதுபோக்கு, சேவை, பயன்பாட்டுப் பொருட்களின் உருவாக்கம் எனும் மண்டலங்களை உட்படுத்தியே பாட ஏற்பாடு அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒவ்வொன்றினுடையவும் கற்றல் அடைவுகள், கருத்துகள், திறன்கள், கற்றல் செயல்பாடுகள், மதிப்பீடுகள் செய்தலின் முறைகள் என்பன இதில் விளக்கமாக விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஒன்று முதல் நான்கு வரை, ஐந்து முதல் ஏழு வரை என மூன்றாக வகைப்படுத்தி மூன்று கருத்து வளநூல்கள் தயாராக்கப்பட்டுள்ளன.

நமது பொதுப்பள்ளிக்கூடங்களில் செயல்வழிக்கற்றல் பயன்மிக்க தாகச் செயல்பட இது மிகவும் துணைபுரியும் என நம்புகிறோம்.

வாழ்த்துகளுடன்...

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குனர்
எஸ்.சி. இ. ஆர்.டி.

## Participants

- Dr. C. Gohul dhasan Pillai ( Rtd) Asst.Pro. SCERT
- Sri. V.S.Mohan, (Rtd) Principal, DIET, Pathanamthitta
- Dr. Padmanabhan, Senior Lecture, DIET, Malappuram
- Sri. M.C. Sugunan, HSA ( St. Ignasious, HSS, Kanjiramattom, Ernakulam
- Sri. M.C. Hareendran, UPSA, Palathayi UPS, Kadavathoor P.O, Kannur
- Sri. Gopala Krishna Pillai ( Rtd) kollam
- Sri. Latha kumari, HSA, NSSHSS, Madavoor, Trivandram
- Sri. E.K. Aravindhan, UPSA, ( Tricottor UPS, Piyoly, Calicut
- Sri. T.K. Baburaj, UPSA, Eannoor, UPS, Calicut
- Sri. M. Sunil Kumar, UPSA, No.1. Karthika palli UPS, Vadakara, Calicut.
- Sri. Sreejith, UPSA Malapuram
- Sri. Asohan, UPSA Kannur
- Smt. Haleena Bevi, Govt. HSS, Pattazhi, Kollam
- Smt. Usha Bhai, HSA, GGHS, Malappuram
- Smt. Alice, HSA, Wayanad
- Sri. G. Stalin, (Rtd) Senior Lecture, DIET, Pathanamthitta

## Accademic Co-Ordinator

Dr. N. Gopala Krishna Pillai, Research Officer, SCERT, Kerala.

# உள்ளடக்கம்

## அலகு 1

கேரளப் பள்ளிக்கூடப் பாட ஏற்பாடு - 2013 - பொதுஅணுகுமுறை

## அலகு 2

**செயல்வழிக்கற்றல்**

- செயல்வழிக்கல்வி என்றால் என்ன? எதற்காக?
- செயல்வழிக்கற்றலின் இலக்குகள்
- செயல்வழிக்கல்வியின் பாட ஏற்பாட்டின் உள்ளடக்கம்
- பாடப்பொருள் மண்டலங்கள்
- செயல்வழிக்கல்வி-அணுகுமுறை
- வாழ்க்கைத்திறன்கள், மனப்பான்மைகள், மதிப்புகள்
- பரிமாற்ற முறை
- செயல்நாட்குறிப்பின் மாதிரி

## அலகு 3

**செயல்வழிக்கற்றல் - மதிப்பீடு**

- மதிப்பீடு என்றால் என்ன?
- மதிப்பீடு எவ்வாறு?
- வகுப்பறை செயல்வழிக்கல்வி மதிப்பீடு (தொடர்மதிப்பீடு –CE)
- வெளிப்படுத்துதல் செயல்படுத்துதலில் மதிப்பீடும் அறிவியல்சார் மதிப்பீடும் (பருவ மதிப்பீடு - TE)
- மதிப்பீட்டிற்குரிய படிவம்
- தரம் குறிப்பதன் முறை

## அலகு 4

**செயல்வழிக்கற்றல் தொடக்கப்பள்ளி வகுப்புகள்**

- செயல்வழிக்கல்வியின் மண்டலங்களும் / கற்றல் அடைவுகளும்
- செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகள் வகுப்பு 1 - பாடத்திட்ட வலைச்சட்டம்
- செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகள் வகுப்பு 2 - பாடத்திட்ட வலைச்சட்டம்
- செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகள் வகுப்பு 3 - பாடத்திட்ட வலைச்சட்டம்
- செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகள் வகுப்பு 4 - பாடத்திட்ட வலைச்சட்டம்

**செயல்பாட்டின் நாட்காட்டி**

**பின்னிணைப்பு (கூடுதலான செயல்பாடுகள்)**

**துணைநூல் பார்வை**

# 1 கேரளப் பள்ளிப் பாடஏற்பாடு 2013 பொது அணுகுமுறை

## 1.1. முன்னுரை

இந்தியாவில் வாழ்க்கைத் தரத்தில் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் மாநிலம் கேரளமே. பொதுக்கல்வி, பொது மக்களின் சுகாதாரம் இவற்றின் மேன்மைகளே கேரளத்தின் இச்சிறப்புக்குக் காரணம். சமூகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்திருந்தாலும் அவர்களுக்குத் தரமான கல்வி அளித்தல் என்பது கல்வித்துறை எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலாகும். 1986-இல் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி தரமான கல்வியை நோக்கமாகக் கொண்டு அடிப்படை வசதிகளும், ஆசிரியர் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. இத்துடன் பாடத்திட்டத்தைக் குழந்தை மையமாகவும், செயல்பாட்டுவழியிலும், செயல்முறை அடிப்படையிலும், காலத்திற்கேற்ப மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தன. இதன் பயனாக அறிவுருவாக்கம் குழந்தைகளிடம் சுயமாக நடக்கும் செயல் என்பதை நாம் கண்டடைந்தோம். இதன்மூலம் குழந்தையை மையமாகக் கொண்ட புதிய கற்றல் செயல்முறையை நடைமுறைப்படுத்த நம்மால் இயன்றது..
வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் அன்றாடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கேற்பக் கற்பிக்கும் முறை, கற்றல் உளவியல், கற்றல் துணைக்கருவிகள், கற்றல் அனுபவப் பரிமாற்றம், மதிப்பீடு போன்றவற்றிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அனைத்துப் பிரிவு குழந்தைகளின் கற்றல் வளர்ச்சியை நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

வேறுபட்ட சமூக, பொருளாதாரச் சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கும் வேறுபட்ட உடல், உளத் திறனுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கும் பள்ளிக் கல்வியில் வெற்றிப் பெறுவதற்குமான வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆண்,பெண், சாதி, மொழி, பண்பாடு, மதம், உடற்குறைகள் இவை மூலம் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்கொள்ளக் கொள்கைகளும் சட்டங்களும் மட்டும் போதாது. மாறாகக் குழந்தைப் பருவம் முதலே பொருத்தமான கற்றல் நோக்கங்களையும், கற்பித்தல் முறைகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைக்க வேண்டும். (2005 **NCF** பக்கம் 27)

- பல தரப்பட்ட சமூக, பொருளாதாரச் சூழலை உடையவர்கள்
- பல தரப்பட்ட உடல், உளத் திறனுடையவர்கள்.

இவ்வாறு எல்லாப் பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற கற்றல் செயல்முறைகளின் எல்லா மண்டலங்களிலும் நுட்பமாகவும் நுணுக்கமாகவும்

மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென **NCF** கூறுகிறது. காலத்திற்கேற்பப் பாடத்திட்டத்தைச் சீரமைத்து கல்வியைச் செயல்படுத்தும் அமைப்புகள் சீராகச் செயல்பட்டால் மட்டுமே இந்த நோக்கத்தை அடைய முடியும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் தற்போது பாடப்புத்தகம் சீரமைக்கப்படுகிறது. கல்வித் தொடர்பாக செயல்படும் வல்லுனர்களின் அனுபவங்களையும் கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இச்சீரமைப்பு நடைபெறுகிறது. சரியிலிருந்து மிகச் சரியானவற்றிற்கு என்ற அணுகுமுறையே இங்குக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

## 1.2 பாடஏற்பாடு சீரமைப்பின் முக்கியத்துவம்

கடந்த 5 வருட காலமாகக் கல்வித்துறையில் ஏராளம் நவீன கொள்கைகள் உருவாகி உள்ளன. இந்தியாவில் 2009-இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி உரிமைச் சட்டம் குழந்தைகளுக்குத் தரமான கல்வி அவர்களின் உரிமை என உறுதிசெய்கிறது. உரிமை அடிப்படையிலான பள்ளிக்கூடம் **(Right Based Educational Institution)** என்ற நோக்கத்தை அடைய முழுப் பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நமது பாட ஏற்பாட்டைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும். சர்வதேச தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டின் நிலையல்ல. மாறாக ஒரு குறிப்பிட்ட கால அளவைக் கடந்து செல்லும் குழந்தை உலகில் எங்கிருந்தாலும் காலத்திற்கேற்ற அறிவுகளையும், கற்றல் அனுபவங்களையும் பெற வேண்டும். ஆகவே உலகளாவிய நிலையில் செயல்படுத்தப்பட்ட நவீனமான சிறந்த கற்றல் கற்பித்தல் உத்திகள் கேரளக் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும்.

கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பாட ஏற்பாடு, மதிப்பீடு ஆகியவை தொடர்பான சட்டங்களைப் பாடத்திட்ட சீரமைப்பிற்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

### கல்வி உரிமைச்சட்டம் - 2009
### பிரிவு - 29 (அத்தியாயம் 5)
### பாடஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்

*(1)* *ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப் பட வேண்டும்.*

(2) *கல்வி அதிகாரநிலை 1-ம் துணை பிரிவின்படி பாடத்திட்டத்தையும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும்போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.*

*(a)* *அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்கு பொருத்தமாக அமைதல்.*

*(b)* *குழந்தையின் பன்முக வளர்ச்சி.*

*(c)* *குழந்தையின் அறிவும் திறனும் புலமையும் படிப்படியாக வளரச் செய்தல்.*

*(d)* *உடல் உளத் திறமைகளின் முழு வளர்ச்சி.*

*(e)* *குழந்தைக்கு நெருக்கமானதும் குழந்தை மையமானதுமான செயல்பாடுகள்,*

*கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.*

f) கற்பிக்கும் மொழி குழந்தையின் தாய்மொழியில் அமைய வேண்டும்.

(g) பயம், மனதைத் தாக்கும் சூழல், ஆதங்கம் போன்றவற்றிலிருந்து குழந்தையை விடுவித்து, சுதந்திரமாகக் கருத்தை வெளியிடக் குழந்தைக்கு உதவ வேண்டும்.

(h) குழந்தை பெற்றுக்கொண்ட அறிவு அதைச் செயல்படுத்தும் திறமை இவற்றை மதிப்பீடு செய்தல்.

---

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை நடத்துவது நமது தலையாய கடமையாகும். இதை உறுதி செய்யும் வகையில் பாடத்திட்டத்தைச் சீரமைப்பது இன்றியமையாதது. இந்தச் சூழலின் அடிப்படையில்தான் நாம் பாடத்திட்டச் சீரமைப்பை நோக்க வேண்டும்.

### கேரளப் பள்ளிப் பாடத்திட்டம் (2013)இன் தனித்தன்மைகள்

1. குழந்தை மையமானதும் செயல்முறைகளுடன் இணைந்ததும் சிறந்த செயல்பாடுகளுடையதும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டதுமான பாட ஏற்பாட்டை அமைக்க வேண்டும்
2. பௌதீக நிலையிலும் செயல்முறையிலும் மனநிலையிலும் மதிப்புகள் நிலையிலும் குழந்தைகளைச் சென்றடைய வேண்டிய கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்
3. அறிவாக்கம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.
4. கல்விப் பரிமாற்றச் செயல்களில் பலவிதமான யுக்தி பூர்வமான கற்றல் உத்திகளைக் கையாளவும் பயன்படுத்தவும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.
5. கற்றல் அடைவு, பொருளடக்கத் தன்மை, குழந்தைகளின் பல்வேறு தரம் போன்றவற்றைப் பிரித்தறிந்து பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகளைச் செயல்படுத்த வேண்டும். கண்டுபிடித்துக் கற்றல், கருத்தைப் பெற்றுக் கொள்ளும் முறை, விதிவரு சிந்தனை முறை, சிந்தனையைக் குறித்துச் சிந்திக்கும் திறன்களை வளர்த்தல், ஒருங்கிணைந்த கற்றல், இணைந்த கற்றல், பிரதிபலிக்கும் சிந்தனை வளர்த்தல், தனியாகவும், குழுவாகவும் செய்ய வாய்ப்பு அளித்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
6. இலவசமாக அனைவருக்கும் கல்வி அளித்தல் என்பது போலவே அனைத்துக் குழந்தைகளின் கற்றல் அடைவுகளை உறுதிசெய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.
7. மழலைப் பள்ளி முதல் மேனிலைப் பள்ளி வரை ஒன்றாகக் கருத்திற்கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.
8. ஒவ்வொரு வகுப்பிலும் வெவ்வேறு பாடங்களின் உள்ளடக்கம், தேசிய அளவில் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கு இணையாகக் கேரளத்திலும் புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்.
9. தேசிய அளவிலுள்ளதைப் போன்று ஒன்று, இரண்டு வகுப்புகளில் தாய்மொழி (சுற்றுச்சூழல் – கல்வியை உட்கொண்டு) கணிதம், ஆங்கிலம் என மூன்று பாடப்புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.
10. 1 முதல் 4 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆங்கிலவழி புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.
11. செம்மொழி என்ற நிலையிலும் தாய்மொழி என்ற நிலையிலும் தமிழ்மொழிக் கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

## இலவசக் கட்டாயக் கல்வி - குழந்தைகளின் உரிமைகள் கேரளச் சட்டங்களும் பிரிவுகளும் - 2011

### அதிகாரம் பெற்ற கல்வி மையம்

1. 29-வது பிரிவின் அமலாக்கத்திற்கு மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அதிகாரம் பெற்ற கல்வி மையமாகும்.

2. பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறைகளைத் தயாரிக்கும்போது இந்தச் சட்டத்தின் 29-வது பிரிவின் (2)-ஆம் உபப்பிரிவு (a) முதல் (f) வரையிலான உட்பிரிவின் நிபந்தனைக்கு ஊறு ஏற்படாதவாறு (1)-ஆம் உபச்சட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற கல்வி மையம் இயங்கும்.

    (a) வயதிற்கேற்ற சிறப்பம்சம் உடைய பாடத்திட்டம், பாடநூல் இவற்றில் அடிப்படை வாழ்வியல் கருத்துகளைப் பகிர்ந்தளிக்கத் தேவையான கற்றல் கருவிகளை உருவாக்குதல்.

    (b) ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் தேவையான குறைந்தபட்சக் கற்றல் அடைவுகளை நிர்ணயித்துக் குழந்தைகளுக்கான வளர்ச்சிக் குறிப்புகள் தயாரிப்பதுடன் அவர்கள் பெற வேண்டிய கற்றல் அடைவுகளை அடைய ஆசிரியர் ஆற்ற வேண்டிய கடமைகளை வடிவமைத்தல்.

    (c) கற்பித்தல், கற்றல் அடைவுகளின் அடிப்படையில் ஆசிரியர் களுக்கான பணியிடைப் பயிற்சிக் கருவிகள் உருவாக்குதல்.

    (d) 1995 மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுச் சட்டத் தீர்மானப்படி (சம உரிமைகள், உரிமைகளின் பாதுகாப்பும் பங்களிப்பும்) மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதற்காக ஆசிரியர்களுக்கும் பணிமுன்பயிற்சி, பணியிடைப்பயிற்சித் திட்டங்கள் உருவாக்குதல்.

    (e) தொடர் மற்றும் பன்முக மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிமுறைகள் உருவாக்குதல்.

    (f) கொள்கை நிகழ்ச்சிகள், திட்டங்கள், பாடத்திட்டம், குழந்தைகளின் கற்பித்தல் பலன்கள் இவை பற்றிய ஆய்வுகளும், கற்றல்களும் ஏற்றெடுத்து நடைமுறைப்படுத்துதல்.

12. மழலைப்பள்ளிக் கல்விக்காக ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கி, மழலைப் பள்ளியை அங்கீகரிக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் பகுதியாக மாற்றவேண்டும்.

13. தகவல் தொழில் நுட்பத்தை (ICT) ஒரு தனியான பாடம் என்பதற்கு மேலாக, பிற பாடங்களின் பரிமாற்றத்திற்கான கருவியாகவும் உபயோகிக்க வேண்டும்.

14. தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வெவ்வேறானதும் புதியதுமான கற்றல் உத்திகளை உருவாக்கிச் செயல்படுத்துவதுடன் வெவ்வேறு மதிப்பீட்டுச் செயல்பாடுகளையும் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

15. கற்றல் அடைவுகளின் அடிப்படையிலான தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை (CCE) உறுதி செய்யவேண்டும்.

16. சுகாதார உடற்கல்வி, கலைக்கல்வி, பணி அனுபவக் கல்வி போன்ற பாடங்களைக் கட்டாயப்

பாடப்பகுதிகளாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

7. மேனிலைப் பிரிவில் காலத்திற்கேற்ற பாடப்புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்.

18. தேசியக் கல்விச் சட்டத்தின்படி கல்வி பெறும் உரிமையை உறுதி செய்ய வேண்டும்

19. எல்லா ஆசிரியர்களும் ஒரு நெறியாளர் (Mentor) என்ற நிலையில் உயர்ந்து செயல்பட்டுத் தேவையான வாய்ப்புகளையும் வசதிகளையும் பள்ளிக்கூடத்திலும் வகுப்பறையிலும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தவேண்டும்.

20.ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிச் சட்டங்களுக்கு (Code of Professional Ethics for School Teachers) முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

21. 21-ம் நூற்றாண்டிற்கு ஏற்ற முறையில் கற்றல் திறன்களை (21st Century Learning Skills) காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும்.

22. நற்பண்புகளைக் கடைபிடிக்கும் தலைமுறையை உருவாக்கத்தக்க வகையில் பாடஏற்பாடு அமைய வேண்டும்.

23. சமவாய்ப்பும் சமத்துவமும் (Equity and Equality) கிடைக்கும் வகையில் பாடஏற்பாடு அமைய வேண்டும்.

இயல்பான கற்றலை உறுதிப்படுத்தக் குழந்தைகளின் உடல் மன அளவிலும் செயல்பாட்டுமுறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம், செயல் இவற்றிற்கேற்ற பாட ஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) அமைய வேண்டும். எனில், பாடஏற்பாடு அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும்? அதன் கொள்கையும் நடைமுறையும் எவ்வாறு இருக்க வேண்டும்?

## 1.3. பாடஏற்பாடு- அணுகுமுறை

ஐம்புலன்களை உபயோகித்துச் சூழ்நிலையிலிருந்து சுயமாகவே கற்கும் திறமைகளுடன் ஒரு குழந்தை பிறக்கிறது. உலகத்தைப் புதிய நோக்கில் காண்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் செயல்படுவதற்கும் மதிப்பிடுவதற்குமான வாய்ப்புகள் முறைசார்ந்த கல்வி மூலம் குழந்தைக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கிடைக்க வேண்டும்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைச் சூழல்களுக்குத் தீர்வு காண்பதன் வழியா கவே கற்றல் நடைபெறுகிறது. பாடத்திட்டப் பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்பி யல்புகள் எவ்வாறு இருக்க வேண்டும்?

- செயல்பாட்டு அடிப்படையிலானது.
- செயல்முறை தொடர்பானது.
- கற்றலை உறுதிப்படுத்தும் விதம்.
- கற்றல் அடைவுகளை அடைய உகந்தது.
- சூழலுக்கு ஏற்றது.
- வளர்ச்சி மண்டலங்களை உட்படுத் தியது.
- கற்பவரின் விருப்பத்திற்குப் பொருத்த மானது.
- கற்றலுடன் மதிப்பிடலும் ஒருங்கி ணைந்து அமைந்தது.

அறிவு உருவாக்கக் கோட்பாட்டின் அடிப் படையிலான கற்றல் முறையே பாட ஏற்பாட்டின் அடிப்படை. குழந்தையின் அறிவு, கருத்து, சூழல் இவற்றைக் கருத்தில் கொண்டு சிறந்த கற்றல் செயல்பாடுகள் உருவாக்குவதன் மூலம் இயல்பாக அறிவு பெற இயலும் என்பதே இதன்

சிறப்பு.

### கற்றல் அனுபவங்கள்

வெவ்வேறு வாழ்க்கைச் சூழலிலிருந்து வரும் குழந்தைகளின் அறிவு, திறமை ஆர்வம் போன்றவை வேறுபட்ட தல்லவா? தனிநபர் வேறுபாட்டையும் பன்முக அறிவையும் கருத்தில்கொண்டு கற்றல் அனுபவங்களை உருவாக்கு வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

### கற்றல் சூழல்

குழந்தைகளின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வேறுபட்ட கற்றல் செயல்பாடுகளில் பங்கேற்க இயலும் வகையில் வகுப்பறைச் செயல்பாட்டை அமைக்க வேண்டும். குழந்தை மையமான கற்றல் செயல்பாடுகளைச் செயல்படுத்த எவ்வாறு கற்றல் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என அறிந்துள்ளோமல்லவா?

### கற்றல் செயல்முறை

- குழந்தைகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய முன்னறிவு களுடன் தொடர்பு படுத்தி அறிவு உரு வாக்கம் (Knowledge construction) நடத்து கின்றனர்.
- அறிவு உருவாக்கத்தைத் தனி நபர் நிலையிலும் சமூக நிலை யிலும் பார்க்க வேண்டும்.
- பலவித கற்றல் முறைகளைக் (Learning Styles) கருத்தில் கொண்டு ஐம்புலன்கள் மூலம் பன்முக அனுபவங்களைக் (Multisensory experiences) கொடுப்பது மூலம் கற்றல் சிறப்படைகிறது.
- குழுச்செயல்பாடுகளும் கலந் துரையாடலும் நடை பெறும் போது கற்றல் கூடுதல் மேன் மையடைகிறது.
- கற்றல் வேகத்தைக் கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்கள் அளிப்பதன் மூலம் குழந் தை யின் கற்றல் மேம்படுகிறது.
- பாடப்பொருள்கள் ஆர்வத்தைத்

குழந்தைகளின் அறிவு உருவாகும் கட்டத்தில் ஆசிரியர் சிறந்த முறையில் செயல்பட்டால், அது குழந்தைகளுக்குக் கிடைக்கும் அறி வினை உறுதிபடச் செய்யும். கற்றலில் ஈடுபடும் குழந்தை தனது அறிவைச் சுயமாகவே உருவாக்குகிறது. தனது பள்ளியில் கற்கும் கருத்துகளை வெளியில் நடக்கும் காரியங்களுடன் தொடர்புபடுத்தத் தேவை யான கேள்விகளைக் கேட்கக் குழந்தை களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மனப் பாடம் செய்து ஒரு சரியான விடையை அளிப்பதற்குப் பதிலாக, தனது அனுபவங்கள் வாயிலாகத் தனது வாக்கியங்களில் விடை அளிக்க ஊக்குவிக்க வேண்டும். இவை யாவும் குழந்தைகளின் அறிவை வளரச் செய்ய உதவும் முக்கியமான படிகளாகும். அறிவுபூர்வமாக ஊகித்தல் என்பது ஒரு கற்றல் உத்தியாகும். இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். பல வேளைகளிலும் குழந்தை களின் அன்றாட அனுபவங்களிலிருந்தும், ஊடகங்களிலிருந்தும் அவர்களின் மனதில் சில கருத்துகள் உருவாகி இருக்கலாம். ஆனால், ஆசிரியர் எதிர்பார்க்கும் வாக்கியங் களில் அவர்களால் கூற இயலாது. அறிந்த அறிவிற்கும் அறியப் போகும் அறிவிற்கும் இடையில் தான் புதிய அறிவு உருவாக்கப் படுகிறது. பலவேளையிலும் பள்ளிக்கு வெளியிலோ, வீட்டிலோ அல்லது சமூகத் திலோ புதிய அறிவு உருவாகிறது. இவ்வாறு உருவாகும் எல்லா அறிவுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அறிவும் பொறுமையும் உடைய ஆசிரியை இதைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். குழந்தை யின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் செயல்பாடுகள் அளித்தும் கேள்விகள் கேட்டும் குழந்தையை ஆசிரியரால் வழி நடத்திச் செல்ல முடியும்.

தேடல்கள், கேள்விகள் கேட்டல், விவாதங்கள், கொள்கைகள் உருவாக்குதல், கருத்துகள், நிலைபாடுகள், இவைகளின் உருவாக்கத்திற்கு வழி நடத்தும் செயல்களும், சிந்தையும் ஆசிரியர்களின் பங்கேற்பினால் ஏற்படு கின்றன. பள்ளிக்கூடங்கள் கேள்விகள் கேட் கவும், விவாதங்கள் செய்யவும், தேடல்களுக்கு ஊகித்து புதிய கருத்துகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

(NCF - 2005, பக்கம் 41, 42)

தூண்டுவதும் பொருள் உடையதுமாக அமைவதன் மூலம் கற்றல் மேலும் சிறப்பாக அமையும்.

- கற்றல் அனுபவங்களைச் சுழற்சி முறையில் (Spiriling) அமைப்பதன் மூலம் கற்றல் கூடுதல் சிறப்புடையதாக மாறுகிறது.
- கற்றல் செயல்பாடுகளை நெகிழ்வு (Flexibility), கற்றல் செயல்பாடுகளில் எளியமுறையில் அமைத்தல் (Adaptations), கற்றல் செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்தல் (Selection) ஆகியவற்றின் மூலம் வேறுபட்ட கற்றல் தேவையுள்ள வர்களையும் விருப்பம் உள்ளவர்களையும் கருத்தில் கொள்ள முடியும்.
- போதுமான கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும்போது மட்டுமே கற்றல் அடைவு (Learning outcome) உறுதிப்படுத்தப்படுகிறது.
- கற்றலும் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து நடைபெறவேண்டும்.
- பாடத்தோடு தொடர்புடைய உள்ளடக்கமும் (content) குழந்தைகளின் கற்றல் தேவைகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் கற்பித்தல் செயல் முறைகளும் உத்திகளும் உபயோகிக்கும்போது எல்லாக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளை (Learning Outcomes) அடைய முடியும்.
- ஒவ்வொரு குழந்தையின் பன்முக வளர்ச்சியையும் (All round development) நோக்கமாகக் கொண்டு கற்றல் செயல்முறைகள் திட்டமிடப்பட வேண்டும்.

## 1.4. கற்றல் அடைவுகள் (Learning Outcomes)

பலவித பாடங்களின் கற்றல் செயல்முறைகளின் மூலம் அறிவு, திறன்கள், மனநிலைகள் / கருத்துகள் என்பவை குழந்தையிடம் உருவாகின்றன. இவற்றுள் சில குறுகிய காலஅளவிலும் சில நீண்ட காலத்திலும் கிடைப்பவை ஆகும். இவ்வாறு குழந்தையிடம் உருவாக வேண்டிய மாற்றங்களை முன்னரே நம்மால் தீர்மானிக்க முடியும். பாடத்திட்டம் உருவாக்கும் போது பள்ளிக்கூடக் கல்வியின் வாயிலாகப் பல நிலைகளில் குழந்தை அடைய வேண்டிய இலட்சியங்களே கற்றல் அடைவுகள் ஆகும். கற்றல் செயல்பாடுகளின் வாயிலாக ஒவ்வொரு அலகிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகள் வளர்ச்சி அடைந்து ஒரு வகுப்பின் இறுதியில் கற்றல் அடைவுகளாக மாறுகின்றன. கல்வி கற்கும் கட்டத்தில் குறிப்பிட்ட கால அளவில் கற்றல் அடைவுகளாக வளர்ச்சி அடைகின்றன. கற்றல் அடைவுகளின் முக்கியத்துவம் என்னவென்றால் அவற்றை உற்று நோக்கவும் (Observable) அளவிடவும் (Measurable) இயலும். ஒவ்வொரு அலகிற்கும் பருவத்திற்கும் வகுப்பிற்கும் முடிவில் குழந்தை அடைய வேண்டிய அறிவு, திறன்கள், கருத்துகள், மனப்பான்மை போன்றவைகளை மதிப்பிடக் கற்றல் அடைவுகளைப் பகுத்தாய்ந்தால் போதும். பாடஏற்பாட்டைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனைத்துக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்த வேண்டும்.

*கற்றல் அடைவுகளின் சிறப்பியல்புகளை இவ்வாறு தொகுக்கலாம்*

- பாடத்தோடு தொடர்புடைய கற்றல் வழியாகக் குழந்தை பெறவேண்டிய அறிவு (knowledge), திறன்கள் (Skills), மனப்பாங்குகள் (Attitudes), மதிப்புகள் (Values) என்பவையே கற்றல் அடைவுகள்.
- கற்றல் அடைவுகள் உற்று நோக்கக் கூடியதும் (Observable) அளவிடக் கூடியதுமாக (Measurable) அமைய வேண்டும்.
- குறுகிய, நீண்ட காலங்களில் பெறும் கற்றல் அடைவுகள் உள்ளன.

## 1.5. கற்றல் ஆதாரங்களும் கற்றல் அமைப்புகளும்

பாடத்திட்டத்தைப் பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பல நிலைகளே கற்றல் உறைவிடங்கள். கற்றல் செயல்முறை முழுமைபெற பலதரப்பட்ட கற்றல் உறைவிடங்களைப்

பயன்படுத்த வேண்டும்.

- நூலகம்
- ஆய்வுக்கூடம் (கணிதம், அறிவியல்)
- கற்றல் துணைக்கருவிகள்
- அறிவிப்புப் பலகைகள்
- கணினி ஆய்வுக்கூடம்
- தகவல் தொடர்புக் கருவிகள்
- 

இதற்கு மேலாகக் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள். பள்ளிக்கூடங்களில் உண்டல்லவா? அவற்றையும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

- சிறுவர் மன்றம்
- காலைக்கூட்டம் (Assembly)
- மன்றங்கள் (Clubs)
- விவாத மேடை
- கல்விச் சுற்றுலா
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (SPC, NSS, Scout, NCC)

குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு இதுபோன்ற அமைப்புகள் இன்றியமையாதனவாகும்..

## 1.6. கலைக்கல்வியும் பணிஅனுபவக் கல்வியும்

### கலைக்கல்வி

படைப்பாற்றல், உற்றுநோக்கும் திறன், மாற்றுச் சிந்தனை போன்றவை குழந்தைகளிடம் வளரச் செய்யக் கலைக்கல்வி இன்றியமையாதது. புதிய பாடத்திட்ட அணுகுமுறையில் பொதுவான பாடங்களைப் போன்ற முக்கியத்துவம் கலைக்கல்விக்கும் அளிக்கப் பட்டுள்ளது. பள்ளிப் பாடத்திட்டத்தில் கலைக்கல்வியில் இசை, நடனம், படம் வரைதல், சிற்பங்கள் உருவாக்குதல், நாடகம், திரைப்படம் போன்றவை உட்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளின் இந்தத் துறைகளிலுள்ள திறமைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை வளரச் செய்ய வேண்டும்.

### *கலைக் கல்வியின் பொதுவான இலக்குகள்.*

- குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலைத்திறன்களைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும்.
- கலைகளைப் பிரித்தறியவும் குழந்தைகளின் திறமைகளுக்கேற்பக் கலைகளைப் பயிற்றுவிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.
- பல்வேறு கலைகளை இரசிக்கவும் கலைகளின் அழகை உட்கொள்ளவும் வேண்டும்.
- கலையை இரசித்து சமூக வாழ்க்கையில் மனித நேயத்தை உருவாக்க வேண்டும்.
- பண்பாட்டு வேறுபாட்டைப் பிரித்தறிந்து பண்பாட்டு விழிப்புணர்வை வளர்க்க வேண்டும்.
- கலையின் கருத்தை உட்கொண்டு புதுமையான சிந்தனைகளில் ஈடுபடவும் இணையான சமூகச் செயல்களில் ஈடுபடவும் வேண்டும்.
- கலையைப் பயன்படுத்திப் பிற பாடங்களின் கற்றலைச் சிறப்புடையதாக்க வேண்டும் (art applied learning).

- பன்முக அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு அறிய வேண்டும்.
- பல்வேறு திறமைகள் உள்ள குழந்தைகளைக் கற்றல் செயல்பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபடச் செய்ய வேண்டும்.
- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை வளரச் செய்ய வேண்டும்.

### பணி அனுபவக் கல்வி

உணர்வு, அறிவு போன்ற மண்டலங்களின் ஒருங்கிணைப்பும் முன்னேற்றமும் உருவாகப் பணி அனுபவக் கல்வி (Work Experience) உகந்தது.

ஒவ்வொரு பணி அனுபவக் கற்றல் வகுப்பும் அடிப்படை மனிதவள மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளின் திறன்களும் தனித்தன்மைகளும் நாட்டு நன்மைக்கு ஏற்ற வகையில் வளர வேண்டும் என்பதே மனிதவள மேம்பாட்டின் நோக்கம். தொழிலை நேசிப்பதும் தொழில் செய்பவர்களை மதிப்பதும், சமூக உணர்வுடைய மற்றும் தொழில் பண்பாட்டுடைய புதிய தலைமுறையை உருவாக்குவதும் பணி அனுபவக் கல்வியின் முக்கிய இலக்குகளாகும்.

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்தித் துறையில் தனித்துவம்
- பன்முகத் தனிநபர் வளர்ச்சி

கலைக்கல்விக்கும் பணி அனுபவக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்துப் பாடத்திட்டப் பரிமாற்றம் நடைபெற வேண்டும். இவற்றின் தனித்தன்மைகளையும், வாய்ப்புகளையும் உட்படுத்திப் பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்வது அவசியமாகும்

## 1.7 உடல் நலம் – விளையாட்டுக் கல்வி

உடல் – மன வளர்ச்சியின் அடிப்படை உருவாவது தொடக்க நிலையிலாகும். எனவே இந்தக் கால அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் உடல் நலம் விளையாட்டுக் கல்வியின் அனுபவங்கள் கிடைத்துள்ளன என்பதை உறுதி செய்யவேண்டும். குழந்தையின் ஆரோக்கிய, விளையாட்டு முன்னேற்ற நிலைகளை அறிவியல் முறையில் வளரச் செய்தலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளும் மனநிலைகளும் வளரச் செய்தல் என்பதே உடல்நல விளையாட்டுக் கல்வியின் முக்கிய நோக்கம். உடல் நல விளையாட்டுக் கல்வியில் வாய்ப்புகளை நிலை நிறுத்துவதோடு வெவ்வேறு பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்யவும் வேண்டும்.

**உடல்நல விளையாட்டுக் கல்வியின் முக்கிய இலக்குகள் :**

- பல்வேறு சூழல்களில் பொருத்தமான முறையில் உடலை அசைப்பதற்கான திறனைப் பெற்றுக்கொள்வது.
- உடல் அசைவைக் கட்டுப்படுத்தும் பல்வேறு கட்டங்களைப் பிரித்தறியவும் உடலைப் பன்முக அசைவுகளின் ஊடகமாக முன்னேறவும் செய்வது.
- சமூகக் கடமைகள் குறித்த விழிப்புணர்வு உருவாகவும் மக்களாட்சி முறையிலான வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கவும் இரசிக்கவும் செய்வது.
- குழந்தையின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்வது.

## 1.8. உட்படுத்திய கல்வி

## (Inclusive Education)

*தங்கள் வகுப்பிலுள்ள சக மாணவனுக்கு வீடு இல்லை; வழியோரத்தில் குடிநீர்க்குழாயில் சேர்த்துக் கட்டிய தகரமே அவனுடைய வீடு என்ற தகவலைப் பற்றிக் குழந்தைகள் கலந்துரையாடினார்கள். கவலைகளைப் பங்கிடுவதன் வழியாகத் தீர்வு காண இயலாது எனப் புரிந்துகொண்ட குழந்தைகள் ஆசிரியரின் உதவியுடன் சேகரித்த தொகையை உபயோகித்து நண்பனுக்கு வீடு கட்டிக் கொடுத்து அந்தப் பள்ளிக்கூடம் ஒரு நல்ல மாதிரியாக அமைந்தது.*

*(ஒரு பள்ளி அனுபவம்)*

வகுப்பறையில் எல்லாக் குழந்தைகளையும் உட்படுத்தி யாரையும் புறக்கணிக்காமல் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் எல்லாப் பிரிவினருக்கும் தனிக் கவனமும் கற்றல் உதவியும் அளித்து சமச்சீரான, தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்.

***தனிக் கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேவைப்படுவோர் யார்?***

அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள்

- பல்வேறு பாகுபாடுகளால் சமூகப் பண்பாட்டுக் குடும்பப் பின்னணியில் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள். வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியற்றவர்கள் போன்ற அநேகப் பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் இதில் அடங்குவர்.

இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் கண்டறிந்து அவர்களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளிகளில் குழுச் செயல்பாடுகள் வழியாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்கமுடியும்.

(ஆ) உடல் - மனக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகள்

உடல் - மன அளவிலான குறைபாடுகள் உள்ளவர்களுக்கும், கற்றலில் சிரமம் அனுபவிக்கும் குழந்தைகளுக்கும் சிறப்புக் கவனம் தேவை (Special Education Needs). கேள்விக் குறைவு, பார்வைத் திறன் குறைவு, புத்தி குறைவு, கை, கால் ஊனம், கற்றலில் பின்தங்கிய நிலை, ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு, மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், கவனக் குறைவுள்ளவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

***இவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாளவேண்டியவை எவை?***

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்டமிடல் சீரமைக்கப்பட வேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஐம்புலன்களுக்குட்பட்ட அணுகுமுறையை (Multisensory approach) நடைமுறைப்படுத்துதல்.
- குறை நீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள்

(Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைக்கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்.

- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுடன் (Flexiblity) செயல்படுத்துதல்
- சிறப்பு வள ஆசிரியர்கள் (Resource Teachers) மற்றும் வல்லுனர்களின் உதவியை உ.றுதிசெய்தல்.
- குழந்தையின் கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதிசெய்தல்.

இந்தப்பிரிவுகளிலுள்ள குழந்தைகளைத் தவிர சிறப்பு கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய குழந்தைகளே தனிப்பட்ட திறனும் புத்திக்கூர்மையும் மிகுந்த குழந்தைகள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள குழந்தைகளையும் கவனத்தில் கொண்டு பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்க வேண்டும்.

## 1.9. தகவல் தொழில்நுட்பக் கல்வியின் வாய்ப்பு (ICT)

தகவல்களைப் பரிமாறுவதற்கு ஏராளமான முறைகள் நடைமுறையில் உண்டல்லவா? இதில் மிகவும் முக்கியமானது ICT கல்வி. குழந்தைகள் பல்வேறு வழிமுறைகளில் இந்தத் தொழில் நுட்பத்தை ஏறக்குறைய தெரிந்திருப்பார்கள். இந்த அறிவை வகுப்பறைக் கற்றலில் உபயோகப்படுத்த வேண்டும். கற்றலை எளிமையாக்கவும் உற்சாகமாக்கவும் இதன்வழி இயலும்

### ICTஇன் தேவை

பாடத்திட்டப் பரிமாற்றத்திற்காகப் பொருத்தமான சூழல்களில் ICT துணைக் கருவிகளை தேவைக்கேற்ப உட்படுத்த வேண்டும். பாடப்புத்தகத்தின் நெகிழ்வின்மை / நிகழ்வின்மை, போன்ற குறைகளை ICTஇன் வாய்ப்புகள் மூலம் எதிர்கொள்ள முடியும். ICTஇன் தேவை எந்தெந்தச் சூழல்களில் வேண்டும் என்பதையும் அதை எப்படிச் செயல்படுத்தலாம் என்பதையும் திட்டமிட ஆசிரியர் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

### பொருத்தம்

குழந்தையின் படைப்பாற்றலையும் அறிவின் பன்முகத் தன்மைகளையும் ஊக்குவிக்க ICT வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பாடங்களில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நிலைநிறுத்துவதாக ICT வாய்ப்புகளை அமைக்க வேண்டும். ICTஇன் உபயோகம் ஐம்புலன்களில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அதிகமான பயனளிக்கிறது. ஒலி வழியாகவும் பார்வை வழியாகவும் கருத்துகளை அதிகமாக உட்கிரகிக்க ICT பயன்படுகிறது. வெவ்வேறு கற்றல் திறனுடைய குழந்தைகளைக் கருத்திற்கொண்டு கற்றல் அனுபவங்களை ICT மூலம் அளிப்பதற்கும் இது உதவுகிறது.

### நம்பகத்தன்மை

தகவல் தொடர்பு ஊடகங்களின் நம்பகத்தன்மையை உறுதிசெய்ய வேண்டும். அரசு வலை தளங்கள், கல்வி வலை தளங்கள், Portal, Blog, Social Network போன்றவற்றிலுள்ள தகவல்களை அதிகாரபூர்வமாக உறுதிசெய்து உபயோகிக்க வேண்டும். வகுப்பறை பரிமாற்றத்திற்கு உபயோகிக்கக்கூடிய கருவிகளின் செயல்பாட்டுத் தன்மையை உறுதி செய்யவேண்டும். இத்தகைய கருவிகள் செயல்படுவதற்குப் பொருத்தமான மென்பொருள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் உபயோகிக்க இயன்றதாகவும் இருக்கவேண்டும். ICT வாய்ப்புகள் குழந்தைகளின் வயது, மனநிலை போன்றவற்றிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

# 1. 10 மேன்மைகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலங்கள்

குழந்தைகள் மனித நேயத்தைப் பற்றியும் அரசியலமைப்பின் மேன்மைகளைப் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளர வேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல், சமூக கடமையுணர்வை வளர்த்தல் போன்றவை பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவற்றை வளரச் செய்ய மேற்கூறிய கருத்துமண்டலங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### மக்களாட்சி உணர்வு

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும்போது மக்களாட்சித் தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்ட மிடுதலிலும் பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமைய வேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி இடங்கள் (மக்களாட்சி அரங்குகள்) மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

### அரசியலமைப்பு மேன்மைகள்

நம்முடைய அரசியலமைப்பு கூறும் மேன்மைகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு மேன்மைகளை மாணவன் அடைவதற்கு உகந்த உள்ளடக்கத்தையும் பரிமாற்றுச் செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

### மதச்சார்பற்ற மனநிலை

மதச்சார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக் கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்க்கவும். அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

### சகிப்புத் தன்மை

பொருத்தமானவர்கள் மட்டுமல்ல பொருத்தமற்றவர்களோடும் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்டம் இலக்காகக் கொள்ள வேண்டும்.

### செயலாக்க - படைப்பாற்றல் சிந்தனை

மாணவர்களிடம் செயலாக்கமும் படைப்பாற்றலுமான சிந்தனையையும் தேடலையும் வளரச் செய்ய வேண்டும். பாடத்திட்டத்தின் உள்ளடக்க மண்டலங்களிலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாற்றல் வழியான தேடலுக்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) தலங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

### பண்பாட்டுடனும் பாரம்பரியங்களுடனும் உள்ள ஆதரவு

நமது பண்பாடு, பாரம்பரியம், வரலாறு இவற்றிற்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையை உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

### சமத்துவம் என்ற கருத்து

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் சமத்துவம், சமநிலை போன்றவற்றை உறுதி செய்யவேண்டும்.

## தலைமைப் பண்பு

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளவும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் தகுந்த தலைவர்களை உருவாக்கப் பொருத்தமான கற்றல் உத்திகளை உருவாக்க வேண்டும். வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளின் பங்கேற்பையும் உறுதி செய்து தலைமையேற்கும் திறனை வளர்க்க உதவும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

## வாழ்க்கைத் திறன் கல்வி

அன்றாட வாழ்க்கையில் தனிநபர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள உதவும் சாதகமான மற்றும் திறமையான பண்புகளே வாழ்க்கைத் திறன்கள். தன்னை அறிதல், சக ஈடுபாடு, கருத்துப் பரிமாற்றத்திறன், தனிமனித உறவு, படைப்பாற்றல், விமர்சிக்கும் திறன். முடிவுகளை எடுத்தல், தீர்வு காணுதல், உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல், மன அழுத்தத்தை எதிர்கொள்ளுதல் போன்றவை முக்கியமான வாழ்க்கைத் திறன்களாகும். குழந்தைகளின் சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி இந்த மண்டலங்களின் காரணிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் அணுகவும் முன்னேறவும் இத்திறன்கள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

## குடிமகனின் கடமை

நாட்டிற்கு மக்களிடம் உள்ளதைப் போன்று, குடிமக்களும் நாட்டிற்காகச் சில கடமை களையும் பொறுப்புகளையும் கடைபிடிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சி என்பது மனிதத் திறனின் வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தக் காலகட்டத்தில் நாட்டிற்கு உதவும் நல்ல குடிமகனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்குவதுடன் ஒழுங்கானப் பொறுப்புள்ள சமூகத்தை உருவாக்கும் குடிமக்களைப் படைப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

## மனித உரிமைகள்

தனிமனிதன் என்ற நிலையில் மதிப்புடன் வாழ்வதற்கான உரிமையே மனித உரிமை. ஐக்கியநாட்டுச் சபையின் மனித உரிமை விளம்பரத்தின் மூலம் உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்குப் பாடத்திட்ட உருவாக்கத்திலும் அதன் பரிமாற்ற வேளையிலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

## குழந்தைகளின் உரிமைகள்

குழந்தைகளின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாப்பது  நமது கடமையாகும்.

## இயற்கை – இயற்கைப் பாதுகாப்பு – சுற்றுப்புறத் தூய்மை

இயற்கை – இயற்கைப் பாதுகாப்பு, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைக் கண்ணோட்டங்களை ஆரம்ப வகுப்பு முதலே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போன்று முக்கியமானதே சுற்றுப்புறத் தூய்மை என்பதையும் தூய்மையுணர்வு குடிமகனின் கடமைகளில் அடிப்படையானது என்றதுமான உணர்வை மாணவர்களிடயே  ஏற்படுத்த வேண்டும். இயற்கை மனிதனின் தேவைக்கு மட்டுமுள்ளதல்ல என்பதை இயற்கையின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்காலத்தில் சீரழிவுகள் ஏற்படக் காரணமாகும் என்ற மனப்பான்மையையும் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். இயற்கைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் உருவாவதற்குத் தகுந்த செயல்பாடுகளை அளிக்க வேண்டும்.

## சமாதானக் கல்வி

தனிப்பட்ட முறையிலும் பிறரோடு சமாதானமாகவும் அன்பாகவும் பழகும் திறனையும் மனப்பான்மையையும் உருவாக்குவதே சமாதானக் கல்வியின் நோக்கம். கலவரங்களையும் கலவரங்களைத் தூண்டும் சூழல்களைத் தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் சமாதானம், அன்பு இவற்றின் வாய்ப்புகளைப் பாடத்திட்டத்தில் பல்வேறு பாடங்களின் வழியாகச் செயல்படுத்த வேண்டியது சமாதானக் கல்வியின் நோக்கமாகும்.

## சட்ட அறிவு

சட்டங்கள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஒரு குடியரசு நாட்டில் வாழும் பொதுமக்கள் கொண்டிருக்க வேண்டும். சட்ட அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்கும் விதத்தில் பாடப்பகுதிகளில் இவற்றை உட்படுத்த வேண்டும். சட்ட உதவி மன்றம், சட்ட மையம், சட்ட ஆலோசனை, சட்ட விழிப்புணர்வு போன்ற பல்வேறு செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

## சைபர் குற்றங்கள்

தகவல் தொழில் நுட்பத் துறை வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் அன்றாட வாழ்வில் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதும் குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன. குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமலிருக்க உதவும் விழிப்புணர்வுச் செயல்களைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். இணைய தளம், சமூக வலை தளம், மின்னஞ்சல் போன்றவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான தெளிவான அறிவையும் பகுத்தறிந்து செயல்படும் தன்மையையும் பாடத்திட்டத்தின் மூலம் அளிக்க வேண்டும். சைபர் குற்றங்களுக்கு வழங்கும் தண்டனைகளையும், இணையதளத்தை முறையாகப் பயன்படுத்தும் அறிவையும் பாட ஏற்பாட்டில் உட்படுத்த வேண்டும்.

## ஊடக விழிப்புணர்வு

நமது சமூகம் ஒலி, ஒளி ஊடகங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. குழந்தைகளிடம் ஒளி ஊடகம் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. எனவே, ஊடக விழிப்புணர்வை உருவாக்கும் பல்வேறு கூறுகளைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

## நிலைமுன்னேற்றக் கண்ணோட்டம்

நாம் வாழும் பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையானதன்று என்ற சுற்றுப்புற விழிப்புணர்வைப் பாடத்திட்டம் அளிக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும் மனிதனின் பழக்க வழக்கங்களிலிருந்து  சுற்றுப்புறத்தை எப்படிக் காப்பாற்றலாம் என்று அறிதல் இக் காலகட்டத்தில் முக்கியமானதாகும். சுற்றுப்புறமும் முன்னேற்றமும் எப்படி ஒருங்கிணைந்து செல்லலாம் என்ற ஆராய்ச்சியும் நிலைமுன்னேற்றம் தொடர்பான கண்ணோட்டமும் ஆராய்ச்சிகளும் பாடத்திட்டம் வெளிக் கொணர வேண்டியதாகும். ஒருங்கிணைந்த சுற்றுப்புற விழிப்புணர்வு உருவாக்குவதென்பது பாடத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

## இளைஞர் கல்வி

குழந்தை உளவியல் வல்லுநர்கள் சுகாதார சேவையாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சிகள் வழியாக இளைஞர் கல்விக்குப் பொருத்தமான உள்ளடக்க மண்டலங்கள் பல்வேறு பாடங்களில் உட்படுத்துவதற்கான வாய்ப்பைக் கருத்திற்கொள்ள வேண்டும். கற்பவர்களின் உடல் நிலை, தூய்மை போன்றவை தொடர்பான சந்தேகங்களும் தெளிவின்மையும் அறிவியல் நிலையில் கருத்தில் கொள்ளவது   பொருத்தமானதாகும்.

## நுகர்வோர் பண்பாடு - விளைவுகள்

நுகர்வோர் பண்பாட்டின் தீய விளைவுகள் குறித்த உண்மைகள் தொடக்க வகுப்புகள் முதலே பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். நுகர்வோர் என்ற நிலையில் நமது உரிமைகளையும் நுகர்வோர்ச் சட்டங்களையும் பாடத்தோடு தொடர்புடையனவாக அமைக்க வேண்டும்.

## போதைப் பொருள் எதிர்ப்பு மனப்பான்மை

மது, போதை மருந்துகள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் ஆரோக்கியத்தைப் பாதிப்படையச் செய்கிறது என்பதை நாம் உணர வேண்டும். வருங்கால தலைமுறையை இவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்காகப் போதைப் பொருள் உபயோகத்தின் உடல் - மன உளைச்சல்களையும் விபத்துகளையும் சித்தரிக்கும் படங்கள், சிறுகுறிப்புகள், காட்சிகள் போன்றவற்றை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதை எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

## ஆண், பெண் சமத்துவம்

பாட ஏற்பாடு ஆண், பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆண் - பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் இருத்தல் கூடாது. பாடநூலில் உள்ள படங்களில் கூட ஆண் - பெண் சமத்துவம் இருக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை நடத்தும்போது ஆண் பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

## சேமிப்பு மனப்பான்மை

ஆரம்பக் கல்வி முதலே குழந்தைகளுக்குச் சிக்கனமாகச் செலவு செய்து சேமிக்கும் மனப்பான்மையைப் பற்றிக் கற்பிக்க வேண்டும். சிக்கனத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சிக்கனப் பண்பினைக் கடைபிடிப்பதற்கான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.

## சாலைப் பாதுகாப்பு

சாலை விதிகள், சாலை விபத்தைத் தடுப்பதற்கான அறிவுரைகள், செயல்கள் போன்றவை சாலைப் பாதுகாப்பின் காரணிகளாகும். சாலை என்பது ஒரு பொது இடமென்பதையும் நம்மை போலவே மற்றவர்களுக்கும் சாலையைப் பயன்படுத்துவதற்குச் சுதந்திரம் உண்டு என்ற மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். சாலைப் பாதுகாப்போடு தொடர்புடைய செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பாட ஏற்பாட்டில் இந்தத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவங்களை உறுதிப்படுத்த வேண்டும். பலவித பாடபாகங்களின் உட்கருத்துக்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் இதற்கான செயல்பாடுகளை முறைப்படுத்தும் போதும் தேவையான முன்னுரிமை கிடைக்க வேண்டும். கற்றல் செயல்பாட்டின் போது இது தொடர்பான அறிவு, நற்பண்புகள் மனப்பாங்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வேண்டும். தொடர் மதிப்பீடு மூலம் இந்த இலட்சியங்களை அடைய முடிந்ததா என்று பார்க்க வேண்டும். பலவித மன்றங்களின் செயல்பாடுகள் SPC, NCC, Scout & Guides, JRC வித்யாரங்கம் - கலை இலக்கிய மன்றம் காந்தி தர்ஷன் ஆகிய இயக்கங்கள் மாணவர்களிடையே நல்ல மனப்பான்மைகளும், கடமை உணர்வும், நற்பண்புகளும் வளர வழிவகுக்கின்றன.

## 1.11. உரிமை அடிப்படையிலான கல்வி

## (Right based Education)

குழந்தைகளின் உரிமைகளைத் தீர்மானித்து அவற்றை உலகமெங்கிலும் நடைமுறைப் படுத்துவதற்காக ஐக்கியநாட்டுக் கல்வி, சமூகம் மற்றும் பண்பாட்டு அமைப்பு UNESCO) முன்வந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசியக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வு ஆகும். குழந்தைகளின் எல்லா விதமான உரிமைகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பு பெரியவர்களின் கடமையாகும். கல்வி உரிமைச் சட்டத்தைப் பற்றிக் கூறும்போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தலாம்.

- பங்கேற்பு (Participation)
- வாய்ப்பு (Provision)
- பாதுகாப்பு (Protection)

### பங்கேற்பு (Participation)

- குழந்தைகளோடு தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களைப் பற்றியும் என்னிடம் கலந்தாலோசிப்பது உண்டு.
- எடுக்கக்கூடிய முடிவுகளில் எனது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கிடைப்பதுண்டு
- என்னுடைய திறன்களையும் வரைமுறைகளையும் அறிந்து செயல்பாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கின்றன.
- எனது திறன்கள் வளரவும் வரைமுறைகளுக்கு அப்பாற்செல்லவும் உதவும் கற்றல் செயல்முறைகள் எனக்குக் கிடைக்கிறது.
- எனது கருத்துகளுக்கு முன்னுரிமை கிடைக்கிறது.
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பில் நடக்கும் செயல்பாடுகளில் நல்ல முறையில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கிறது
- எனது திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

### வாய்ப்பு (Provision)

- தகுந்த கல்வித் தகுதியுடைய, காலத்திற்கேற்ப அறிவை வளர்க்கும் ஆசிரியர்களின் சேவை எங்களுக்குக் கிடைக்கிறது.
- ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முழுவதும் கற்றல் அனுபவங்கள் எங்களுக்குக் கிடைக்கின்றன.
- உடல், மன வளர்ச்சிக்குப் பொருத்தமான வகுப்புச் சூழல் எங்களுக்கு கிடைக்கிறது.
- எங்கள் ஆசிரியர்களால் கற்றல் செயல்பாடுகளுக்கு உகந்த கற்றல் கருவிகளைப் பொருத்தமான நேரத்தில் அளிக்க முடிகிறது.

- கலை, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கத் தேவையான கருவிகளும் வாய்ப்புகளும் எங்களுக்குக் கிடைக்கின்றன.

**கல்வி உரிமைச் சட்டம் RTE (2009)**

- 1 முதல் 5 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 200 வேலைநாட்களும், 800 மணிநேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.
- 6 முதல் 8 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 220 வேலை நாட்களும் 1000 மணிநேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.

### பாதுகாப்பு (Protection)

- பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் நான் எந்த விதமான பாகுபாடுகளையும் அனுபவிப்பதில்லை.
- என்னை யாரும் எந்தவொரு வகையிலும் புறக்கணிப்பதில்லை.
- உடல், மன ரீதியில் யாரும் என்னைத் துன்புறுத்துவதில்லை.
- பயமின்றி ஆசிரியர்களுடன் பழக முடிகிறது.
- குழந்தை என்றாலும் எனக்குத் தனித்துவம், உரிமை உண்டு என்று அனைவரும் அங்கீகரிக்கின்றனர்.
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

**கேரள மாநில பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்**

2002இல் மே மாதம் சேர்ந்த ஐக்கிய நாட்டுச் சபையின் குழந்தைகளுக்கான சிறப்பு மாநாட்டில் குழந்தைகளுக்கேற்ற ஓர் உலகம் எனும் தலைப்பில் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2005-ஆம் ஆண்டில் மத்திய அரசு உருவாக்கிய பாலர் உரிமைப் பாதுகாப்புக் குழு சட்டம், 2012-இல் கேரள மாநிலப் பாலர் உரிமைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கேரள மாநிலப் பாலர் உரிமை ஆணையம் செயல்படுகிறது. அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தும் பாலர் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த ஆணையத்தின் முக்கிய கடமையாகும்.

குழந்தைகளின் உரிமைகளை உறுதிபடுத்த என்னால் என்ன செய்ய முடிந்தது. நான் இனி என்னென்ன செய்ய வேண்டும் என ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டும்.

## 1.12. நெறிப்படுத்துதல்

தேசியக் கல்வி உரிமைச் சட்டத்தில் ஆசிரியர் / ஆசிரியை ஒரு நெறியாளர் (Mentor) என்று கருதுப்படுகின்றார். பள்ளியின் முழுமையான வளர்ச்சிக்கு நெறியாளர் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த நல்ல வழிகாட்டுதல் தேவை.

கற்பித்தல் செயலில் முக்கிய காரணிகளான ஆசிரியர் – குழந்தை உறவில் இன்று நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியரை அறிவை அளிக்கும் நபராகக் கருதாமல் குழந்தைகள் தாமாகவே அறிவை அடைய உகந்த பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தும் நபராகக் கருதுமாறு அவர் செயல்பட வேண்டும்.

சரியாகக் கூறினால் பள்ளிக்கூடம் என்பது ஆசிரியருக்கு தனது வீடு போன்று இன்னொரு வீடாகும். ஆசிரியர்கள் பெற்றோர்களைப் போலச் செயல்பட வேண்டும். வீட்டிலிருந்து கிடைக்கும் அன்பு, அரவணைப்பு, முக்கியத்துவம், பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் இவை ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். இவற்றைக் கண்டறிந்து ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையின் அடிப்படையில் ஆசிரியர் அளிக்கும்போது தான் அவரது பொறுப்பு முழுமையடைகிறது. அப்போது தான் பள்ளி வீடாக மாறுகிறது.

ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குடும்பச் சூழலைத் தெரிந்துகொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை ஆசிரியர்கள் செய்தல் வேண்டும்.

- குழந்தைகளின் வீடுகளுக்குச் செல்லுதல்
- பெற்றோர்களுடனான கருத்துப் பரிமாற்றம்
- குழந்தையைத் தொடர்ச்சியாகக் கவனித்தல்
- குழந்தைகளின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல். பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு அளித்தல்.

இவ்வாறு குழந்தைக்கு அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பு உணர்வும் அங்கீகாரமும் அளித்து ஒரு பெற்றோர் போல் நடந்துகொண்டு குழந்தைகளுக்குக் கற்றல் அடைவுகள் கிடைக்க உதவும் நபராக நாம் மாறும்போது தான் இந்தப் புதிய கால கட்டத்தின் ஆசிரியராக மாறுகிறோம்.

நெறிப்படுத்துதல் (Mentoring) மூலமாக வழிகாட்டுதல், அறிவுரை வழங்குதல், ஆதரவு கொடுத்தல், மேம்படுவதற்கான வாய்ப்பளித்தல் இவற்றை ஆசிரியர் குழந்தைகளுக்கு அளிக்கிறார். அனுபவம் வாய்ந்த நபர் என்ற முறையிலும் பின்பற்றத் தகுந்த மாதிரி நபர் என்ற முறையிலும் நெறியாளர் குழந்தைகளுடன் பழக வேண்டும். கற்றலுக்குத் தேவையான உதவிகளும் ஆலோசனைகளும் அளிக்க வேண்டும். குழந்தைகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவர ஒரு நல்ல நெறியாளரால் மட்டுமே முடியும்.

**நெறிப்படுத்துதல் வாயிலாக,**

- ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன.
- ஆசிரியர் மற்றும் குழந்தைகளின் அறிவு மண்டலம் வளர்ச்சியடைகிறது.
- குழந்தை, பள்ளி உறவு வலுவடைகிறது.
- குழந்தையின் கற்றல் வளர்ச்சியும், ஆளுமை வளர்ச்சியும் உறுதிப் படுத்தப்படுகின்றன.
- ஒன்று சேர்ந்து சிந்திக்கவும், முடிவு எடுக்கவும், செயல்பாடுகள் செய்யவும் இயலுகின்றது.
- பெற்றோருக்கும் பள்ளிக்குமிடையே தொடர்பு வலுப்படுகிறது. குழந்தையின் கற்றல் நிலை பற்றிய அறிவு பெற்றோருக்குக் கிடைக்கிறது.
- கலை, விளையாட்டு, சுகாதாரம், பணி அனுபவக் கல்வி போன்ற மண்டலங்களில் குழந்தையின் பங்கேற்பும் மதிப்பிடலும் வலுப்படுகின்றன.

நெறிப்படுத்துதல் நடக்க உதவும் விதத்தில் பதிவேடுகளை உருவாக்கிப் பதிவு செய்ய வேண்டும்.

பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களையும் நெறியாளர்களாகவும் எல்லாக் குழந்தைகளையும் நெறிப்படுத்தப்படுபவர்களாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும். வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சிறு குழுக்களாகக் கருதி ஒவ்வொரு குழுவின் வளர்ச்சியை உறுதிப்படுத்த அந்த வகுப்பாசிரியருக்குப் பொறுப்பை அளிக்கலாம்.

## 1.13. ஆசிரியர் தொழில் ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் (Code of Professional Ethics for School Teachers)

### 1. ஆசிரியர்களின் கடமைகள்

*1.1. எல்லா மாணவ மாணவியரிடமும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்.*

- எல்லாக் குழந்தைகளுடனும் ஒரே போல் அன்புடன் பழகவேண்டும்.
- கல்வியில் பின்தங்கிய குழந்தைகளுக்குத் தனிப்பட்ட கவனம் அளிக்கவேண்டும்.
- குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு உருவாகும் விதம் நடந்துகொள்ள வேண்டும்.

*1.2. ஜாதி, மதம், இனம், நிறம், பொருளாதார நிலை, மொழி, ஆண் - பெண் வேறுபாடு, பிறந்த இடம் இவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் நீதியுடன் பாரபட்சமின்றி நடந்துகொள்ளுதல்*

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை, சமூகநீதி மீதான நம்பிக்கை ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந்தால் அது பள்ளிக்கூடத்தை மிகவும் பாதிக்கும்.

*1.3. குழந்தையின் உடல், உள, உணர்வு, பண்பாடு, சமூக, ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்.*

- உடல், உள திறன்கள் முழு வளர்ச்சியடையும் காலம்தான் பள்ளிக் காலம்.
- கல்வியால் அறிவு மண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது.
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் முக்கிய நோக்கம்.

*1.4. பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலையிலும் குழந்தையின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப்படுகிறது*

- மனிதன் என்ற நிலையில் ஒரு குழந்தையின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் குழந்தைகளின் தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்திக் கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் எல்லாக் குழந்தைகளின் முழுமையான ஈடுபாட்டை ஊக்குவிக்க வேண்டும்.
- ஐக்கிய நாட்டுச் சபை அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் அளித்த குழந்தைகளின் உரிமை விளம்பரத்தையும் குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கையையும் ஆசிரியர்கள் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கிய சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகளை மறுக்கக் கூடியனவாக இருக்கக் கூடாது.

***1.5. குழந்தைகளின் பரம்பரைத் திறன்களும் சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்ட ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.***

- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் அடைவுகளை மட்டுமன்றிக் குழந்தையின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்துகொள்வது ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.
- ஒரு குழந்தையின் எல்லாத் திறன்களும் வளரத் தேவையான செயல்பாடுகளை அவர் அளிக்க வேண்டும்.

***1.6. அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும் மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடஏற்பாடு அமைய வேண்டும்.***

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாடஏற்பாட்டின் முக்கிய கூறுகளாக அமைய வேண்டும்.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் பிரிவு 51 A புரிந்துகொண்டு அதில் A முதல் K வரையுள்ள பிரிவுகளை புரிந்துகொண்டு அதன்படிச் செயல்பட வேண்டும்.

***1.7. குழந்தைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர் / ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது.***

- தொடர் மதிப்பீட்டின் அடிப்படையில் குழந்தைகளின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றை கருத்தில் கொண்டு கற்பித்தல் உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்நது செய்ய வேண்டும்.

***1.8. குழந்தைகளின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தத் தகவல்களைச் சட்டப்படியாக யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ அவர்களிடம் தெரிவித்தல்.***

- ஒரு ஆலோசகராகச் செயல்படும் ஆசிரியருக்குக் குழந்தைகளின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும்
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காக மட்டும் அறிவுபூர்வமாக பயன்படுத்த வேண்டும்

***1.9. குழந்தைகளைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.***

- குழந்தைகளைப் பாலியல் கொடுமைகளிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் குழந்தைகள் நன்றாகப் படிப்பார்கள் எனும் தவறான கருத்தை மாற்ற வேண்டும்.
- இவ்வாறான சூழலில் குழந்தைக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்புப் பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

***1.10. எல்லாவிதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும்.***

- எல்லா விதமான பாலியல் கொடுமைகளும் உடல் காயங்களை மட்டுமின்றி நீண்ட காலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசியக்குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் (National Children Protection Rule) விதித்துள்ள விதிகளை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்.

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

### *2.1. பெற்றோர்களுடன் அன்புடனும், ஆதரவுடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.*

- ஆசிரியர்கள் குழந்தையைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள அவர்களின் பெற்றோர்களுடன் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு குழந்தைக்கு ஆசிரியருடன் கூடுதலாக நெருங்க உதவும்.
- பெரும்பாலான பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பார்கள்.
- குழந்தையின் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற்றோர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது பெரிய ஆபத்துகளைக் கூடத் தடுக்க முடிகிறது.

### *2.2. குழந்தைகளின் தன்மானத்திற்குத் தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது.*

- பிற குழந்தைகளின் முன்னிலையில் குழந்தைகளின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பேசக் கூடாது. அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது.
- ஏதாவது ஒரு பிரிவுக் குழந்தைகளின் சூழலை (ஜாதி, மதம், பொருளாதாரம்) புகழ்வது மற்ற குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

### *2.3. குழந்தைகள் இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட ஆவன செய்ய வேண்டும்.*

- பலவிதப் பண்பாடு, மொழி, மதம், நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா இது ஒவ்வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்.
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத்தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மையும் வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயற்சிக்க வேண்டும்

### *2.4. பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்,*

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும் மொழிகளையும் சமமாக மதிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு முதலில் இந்தியன் பின்னரே ஒரு பிரிவின் உறுப்பினர் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி/வகுப்பறையைப் பயன்படுத்தக் கூடாது.
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும் போது ஆசிரியர்/ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக் கூடாது.

## 3. ஆசிரியர் என்ற தொழிலோடும், சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டியக் கடமைகள்

### *3.1. தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.*

- ஒரு குழந்தைக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதேபோன்று கற்க வேண்டும்.
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தகவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தனக்குப் புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

### *3.2. பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்தவேண்டும்*

- கல்வித் தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கு அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும் வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமின்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

### *3.3. சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழக வேண்டும்.*

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களிடமும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

### *3.4. ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்தவோ தனியார் நிறுவனங்களில் கற்பிப்பதோ இல்லை.*

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூடச் செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியுசன் கொடுக்கும்போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்று ஆகிறது

### *3.5. தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் ஆதிக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் எந்த விதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை.*

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

### 3.6. பிற ஆசிரியர்கள் குறித்தோ, பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவையற்ற குற்றம் கூறுவதில்லை.

- ஒருவருக்கொருவர் குற்றம் கூறுகின்ற வழக்கம் ஆசிரியர்களுக்கிடையில் தேவையற்றதாகும்.
- பிற ஆசிரியர்களுக்கு எதிராக நீருபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.
- ஏதாவது ஒரு பிற ஆசிரியர் / ஆசிரியையிடமிருந்து தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்,

***3.7. பிற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரியரைக் குறை கூறுவதில்லை.***

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- பிற ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குறை கூறும் விதம் பேசக்கூடாது.

***3.8. பிற ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளை மதிக்க வேண்டும்.***

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைபடுத்தவும் அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை முழுவதும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

**3.9. பிற ஆசிரியர்கள் குறித்த தனிநபர் விபரங்களை இரகசியமாக வைக்கவும், சட்டரீதியாகத் தேவைப்படும்போது மட்டும் வெளிப்படுத்தவும் வேண்டும்.**

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனி நபர் விபரம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்டரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளியிடுதல் வேண்டும்..

## 1.14. கற்பித்தல் கையேடு (Teaching Manual)

கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் சுயமான முறையில் செயல்பாடுகள் உருவாக்க இயல வேண்டும். பாடநூலிலும், ஆசிரியர் பனுவலிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளைத் தன்னுடைய வகுப்பறையில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படையச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கற்றல் அடைவை அடையவும் தேவையான செயல்களைத் திட்டமிடலில் உட்படுத்த வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக்கத்தில் எழுத வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விபரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும்.

அடுத்துவரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேட்டை, பள்ளி வளக்குழு (SRG) பாடக்குழு (Subject Councils) இவற்றில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியிலுள்ள விபரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்பு குறிப்பு (Reflection Note) தயாராக்கவும் SRGயில் விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர்திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

*கற்பித்தல் கையேட்டின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

**கற்பித்தல் கையேடு**

பாடத்தின் பெயர் :

நாள் :

நேரம் :

மையக்கருத்து.... :

கற்றல் அடைவுகள் :

கருத்துகள் :

திறன்கள் :

மொழி உண்மைகள் (மொழிக்கு மட்டும்) :

மொழி வடிவங்கள் (மொழிக்கு மட்டும்) :

மதிப்புகள், மனப்பான்மைகள் :

கற்றல் கருவிகள் :

எதிர்பார்க்கும் படைப்புகள் :

| ***செயல்முறை பக்கம்*** | **மதிப்பீட்டுப் பக்கம்** |
|---|---|
| *செயல்பாடுகளும் மதிப்பிடலும் அடங்கிய செயல்முறை* | *மதிப்பிட்ட தகவல்களை இங்கு எழுத வேண்டும்* |

தலைமை ஆசிரியரின் ஒப்பம் ஆசிரியர் ஒப்பம்

## பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note)

எனது கண்டடைதல்களும், பகுத்தறிவும்.

(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பிடல் செயல்வழி கிடைத்த விபரங்களின் அடிப்படையில்)

- 
- 
- 
- 

தொடர் செயல்பாடுகளும், தீர்வு காணும் செயல்பாடுகளும்

- 
- 
- 
- 

### பிரதிபலிப்புக் குறிப்பு .... எதற்கு?

குறிப்பிட்ட கற்றல் அடைவுகளுக்கேற்ப கற்றல் செயல்பாடு முழுமையாக நிறைவடைந்த பின்னரே பிரதிபலிப்பு தயாராக்குதல் வேண்டும்.

- இந்தக் குறிப்புகளை SRG கூட்டத்தில் வெளிப்படுத்தலாம்.
- தொடர் திட்டமிடலுக்கு வழி வகுக்கலாம்.
- பருவ மதிப்பீட்டின் ஒருங்கிணைப்புக்குப் பயன்படுத்தலாம்.

# 2 செயல்வழிக்கல்வி

கல்வியின் இலக்கு மாணவரின் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சியே. இவ்வளர்ச்சிக்குஉரிய திறன்களையும் கருத்தாக்கங்களையும் பெறுகின்ற முறையிலேயே செயல்வழிக்கல்வியின் பாட ஏற்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. அனுபவத்தினையும் தேடலையும் மையப்படுத்திய கற்றல் முறையே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனையின் பன்முகத் தளங்கள், அறிவுஉருவாக்கம் என நவீன உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இன்றைய கல்வி அமைப்பு நிலை கொள்கிறது. உடல், உணர்வு, அறிவியல் எனும் மண்டலங்களின் ஒருங்கிணைப்புடன் கூடிய அறிவு வளர்ச்சியினை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்காகப் பாட ஏற்பாட்டில் உட்படுத்தப்பட்டுள்ள பாடப் பொருளே செயல்வழிக்கல்வி.

## செயல்வழிக்கல்வி என்றால் என்ன? எதற்காக?

பாரததேசத்தின் மிகப்பெரிய செல்வம் மானிடத்திறன் அல்லவா? இந்த ஆற்றலைப் பயன்தரும் முறையில் உபயோகித்து, படைப்புத்திறனையும் உற்பத்தித்திறனையும் பெருக்கினால் மட்டுமே நமது தேசம் முன்னேறும். அத்தகைய முறையில் சமூகத்துக்குப் பயன்படுமாறு சேவைகளில் ஈடுபடுவதற்கும் உற்பத்தி உருவாக்கத்தில் செயல்படுவதற்கும் மாணவர்களை ஊக்குவிக்கின்ற செயல்முறையே செயல்வழிக்கல்வி.

நம்முடைய இலக்கு பள்ளிக்கூடச் செயல்வழிக்கல்வி வாயிலாக மானிட ஆக்கத்தி றன் வளர்ச்சியைப் பெருக்குவது மட்டுமன்று. கச்சாப் பொருட்கள், கருவிகள் ஆகியனவற்றைக் கையாள்வதற்கு உரிய திறன்களைப் பெற்று மேம்பட்ட ஒரு தொழில் கலாச்சாரத்திறனையும் அதன் வழியே மன ஊக்கமும் குழந்தைகளிடம் வளர்ப்பது ஆகும். இத்தன்மை அவர்களின் பல்வகை மதிப்புகளையும் / விழுமியங்களையும் மனப்பான்மைகளையும் வளர்ப்பதுடன் தொழிலிலும் தொழில்செய்பவர்களிடமும் ஆர்வத்தையும் பிறப்பிக்கிறது. அதனால் சமூக உறவு மேம்பட்டு கூட்டுறவுணர்வு வளர்வதுடன் தனிநபர் ஆளுமை வளர்ச்சியும் பெற முடிகிறது. அறிவு பெறுதல் போன்றே

இன்றியமையாதன அதற்கு உரிய வழிகளைக் கண்டுபிடிப்பதும் ஆகும். நடைமுறை அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு மேன்மைமிக்கத் தொழில்கலாச்சாரத்தை வடிவமைப்பதற்கு உரிய திறன்களைப் பெறுதலும் செயல்வழிக்கல்வியினால் செயல்படுத்த இயல்கிறது. வாழ்க்கைத்திறன்களின் விரிவாக்க வளர்ச்சி வாயிலாக ஒருவரால் தேசிய வளர்ச்சிக்கு நன்கொடைகள் பல அளிக்கவும் செயல்வழிக்கல்வி துணை புரிகிறது.

## செயல்வழிக்கல்வியின் இலக்குகள்

ஒவ்வொரு செயல்வழிக்கல்வி வகுப்பின் அடித்தளம் மானிடத்திறன் விரிவாக்க வளர்ச்சியே ஆகும். அனைத்துக் குடிமக்களின் திறன்களையும் திறமைகளையும் தேசத்தின் உருவாக்கத்திற்குப் பயன்படும் முறையில் வளரச் செய்வதையே மானிடத்திறன் விரிவாக்க வளர்ச்சி வாயிலாகக் கருதப்படுகிறது. தொழிலில் ஆர்வம் உள்ள, தொழில் செய்கின்றவர்களை ஆதரிக்கின்ற சமூக உணர்வுமிக்க ஒரு புதிய தொழில்கலாச்சாரத்தின் உரிமையாளர்களாக புதிய தலைமுறையினரை வடிவமைத்தெடுப்பதே செயல்வழிக்கல்வி யின் மிக முக்கிய இலக்காகும்.

செயல்வழிக்கல்வியின் பிற இலக்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

- மானிடத்திறன் விரிவாக்க வளர்ச்சி
- தொழில் ஆர்வம்
- உற்பத்தித்துறையில் தன்னிறைவு
- சமநிலை ஆளுமை வளர்ச்சி
- மதிப்புகளையும் / விழுமியங்களையும் மனப்பான்மைகளையும் வளர்த்தல்

## செயல்வழிக்கல்வி பாடஏற்பாடு - உள்ளடக்கம்

செயல்வழிக்கல்வி உட்படுத்தப்பட்டுள்ள கற்றல் மண்டலங்கள் அன்றாட வாழ்க்கையில் குழந்தைக்கும் சமூகத்துக்கும் அவசியமான அடிப்படை வாழ்க்கைக் கூறுகளுடன் தொடர்புள்ளனவாகவும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குப் பயன்படுமாறும் அமைதல் வேண்டும். செயல்வழிக்கல்வியைப் பாட ஏற்பாட்டில் உட்படுத்துவதனால் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி தொழில்களில் ஈடுபட வைக்கவில்லை என்றும் இது கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் தடையாக அமையவில்லை என்றும் உறுதிப்படுத்துதல் வேண்டும். பக்குவமற்ற வயதில் எதிர்காலத்தொழிலை உறுதிப்படுத்துதல் நோக்கி

செயல்வழிக்கல்வி வழிநடத்துதல் கூடாது. மாறாக, தொழில் ஆர்வம் பெருக்கும் அனுபவங்களாக மாற்றம் பெறுதல் வேண்டும். அதற்கு ஏற்ப நெகிழ்வு மிக்க ஓர் அணுகுமுறையையே உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதி - இனம் - பால் வேறுபாடின்றி தொழில்கலாச்சாரத்தை உருவாக்குவதாகச் செயல்வழிக் கல்வி வடிவம் பெற வேண்டும். இத்தகைய வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டே செயல்வழிக்கல்வியின் பாடப்பொருள் ஆறுமண்டலங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது.

## பாடப்பொருளின் மண்டலங்கள்

1. உணவும் வேளாண்மையும் (Food and Agriculture)
2. உடல்நலமும் சுகாதாரமும் (Health and Hygene)
3. உடை (Clothing)
4. உறைவிடம்/ வாழ்விடம் (Shelter)
5. பொழுதுபோக்கு (Recreation)
6. சேவைகள், பயன்படும் பொருட்களின் உருவாக்கம் (Social service, Socialy useful Productive Work)

இம்மண்டலங்களைச் சார்ந்தே ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் பெற வேண்டிய திறன்களும் கருத்தாக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. உடல் சார்ந்ததும் ஆரோக்கி யம் மிக்கதுமான நன்மைகளைப் பெறுவதற்கும் வேளாண்மையில் முன்னேற்றம் அடை வதற்கும், ஆர்வத்துடன் கற்றலை நடைமுறைப்படுத்துவதற்கும் செயல்வழிக்கல்வியின் பல்வகை மண்டலங்களின் வழியான கற்றல் வாயிலாக இயல்கிறது.

மேலே கூறப்பட்டுள்ள ஆறு மண்டலங்களிலும் குழந்தைகள் பெற வேண்டிய கற்றல் அடைவுகள் Learning Outcomes (LOs) வரையறுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மண்டலங்களுக்கு ஏற்ப கற்றல் அடைவுகள் எவை என அலகு 4 இல் தரப்பட்டுள்ளன.

## செயல்வழிக்கல்வி அணுகுமுறை

சமூகத்தின் ஓர் அலகு என்ற நிலையில் ஒவ்வொரு மனிதரும் தேசிய விரிவாக்க வளர்ச்சியில் அவரவர்க்கு உரிய நன்கொடை அளிக்க வேண்டியுள்ளது. இதனைச் செயல்படுத்தும் திறன்மிக்கவர்களை உருவாக்குவதற்காகச் செயல்வழிக்கல்வியின்

வாய்ப்புகளைச் சரியான தளத்தில் பங்கிட்டு அளிக்க வேண்டும். சமூகத்தின் அறிவுமண்டலத்தில் ஈடுபட்டுச் செயல்படுகின்ற அனுபவத்தைப் பெறுதலே கல்வி. மாணவர்களுக்குப் பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் தேடலுக்கும் பகுத்தாராய்தலுக்கும் உரிய சூழலை நிறுவுதலும் வேண்டும். அவ்வாறு அமைந்தால் மட்டுமே முழுமையான வளர்ச்சியைப் பெற முடியும். இத்தகைய ஓர் அணுகுமுறையே செயல்வழிக்கல்வி பரிமாற்றத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அனுபவம் சார்ந்த செயல்முறை தொடர்புடைய அணுகுமுறை மட்டுமே செயல்வழிக் கல்விக்கு உரியதாக அமைகிறது. இதற்காக அவசியத்துக்கு ஏற்பவும் சூழல் சார்ந்தும் பிற பாடங்களுடன் தொடர்புள்ளதுமான ஒருங்கிணைந்த கற்றல் முறையினையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பன்முக அறிவுவிரிவாக்க வளர்ச்சி சமூகத்திற்குப், பயன்படும் படைப்புகளின் உருவாக்கம், சேவை மனப்பான்மை என்பன உருப்பெறும் முறையில் படைப்புசார் செயலாக, செயல்வழிக் கல்வி மாற்றம் பெறுதல் வேண்டும். பிற பாடங்களின் கற்றல் வாயிலாகவும் சுய அனுபவங்களின் வாயிலாகவும் ஏராளமான அறிவுகளும் கருத்தாக்கங்களும் குழந்தைக்கு கிடைத்துள்ளன. அவற்றைப் படைப்பு சார்ந்து பயன்படுத்துகின்ற முறையில் செயல்வழிக்கல்வியை வடிவமைக்க வேண்டியுள்ளது.

கீழ்க்காணும் காரணிகளில் வேரூன்றியதே செயல்வழிக்கல்வி அணுகுமுறை.

- அனுபவம் சார்ந்தது
- அவசியம் சார்ந்தது
- செயல்முறை சார்ந்தது
- சுற்றுச்சூழல் தொடர்புடையது
- ஒருங்கிணைக்கும் பண்புடையது
- பன்முக அறிவு விரிவாக்க வளர்ச்சிக்குப் பயன்படுவது
- படைப்புத்திறன் மிக்கது.
- உற்பத்தித்திறன் மிக்கது.

## வாழ்க்கைத்திறன்கள், மனப்பான்மைகள், மதிப்புகள் / விழுமியங்கள்

ஒருங்கிணைந்த செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகளைத் தனியாகவும் குழுவாகவும் செய்வதன் வாயிலாகப் பெற இயல்கின்ற வாழ்க்கைத் திறன்களும் (Life skills), மனப்பான்மைகளும் (Attitudes), மதிப்புகளும்/ விழுமியங்களும் (Values):

## வாழ்க்கைத் திறன்கள் (Life Skills)

### Thinking Skills

- Self awareness
- Problem solving
- Decision making
- Critical Thinking
- Creative Thinking

### Social Skills

- Interpersonal Relationships
- Effective Communications
- Empathy

### Emotional Skills

- Managing Feelings/ emotions
- Dealing with stress

## மனப்பான்மைகள் (Attitudes)

### Attitude towards

- Teachers
- Elders
- Schoolmates
- School Programmes
- Environment
- Society

### Attitude towards Work

- Dignity of Labour
- Respect for work and workers
- Intiative and interest
- Social commitment
- Discipline
- Co-operation
- Accepting even bluecollared jobs

**தனிநபர் மேன்மைகளும் மதிப்புகளும்**
**(Personal qualities and values)**

- Professional Values
- Social Values
- Ethics

- Self estem
- Sociability
- Self Management
- Integrity/honesty

- To promote harmony and spirit of unity and brotherhood
- to value and preserve the rich heritage of our culture
- to protect and improve natural environment
- to safeguard public property
- to strive towards excellence which leads to higher level of performance

## பரிமாற்ற முறை

செயல்வழிக்கல்வியினை ஒருங்கிணைந்த அணுகுமுறை வழியாகவே பரிமாறுதல் வேண்டும். செயல்வழிக்கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளையும் பிற பாடங்களுடன் ஒருங்கிணைக்கும் வேளைகளில் பள்ளிவளக்குழு (எஸ்.ஆர்.ஜி) தீர்மானத்தின்படி அந்தப் பாடங்களுக்குக் கிடைக்கின்ற பிரிவேளைகளையும் செயல்வழிக்கல்வியின் செயல்பாடுகளை அளிப்பதற்குப் பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சூழலுக்கு ஏற்ப செயல்பாடுகளின் நேர வரிசையினைத் தீர்மானிக்கலாம். சில செயல்பாடுகள் ஆண்டு முழுவதுமாகத் தொடர்வதும், தொடர வேண்டியனவும் ஆகும். எடுத்துக்காட்டாக, சுகாதாரச் செயல்பாடுகள், கற்றல் கருவிகளை உருவாக்குதல் என்பனவற்றுக்குக் காலநிலை, பொருள்வளங்களைப் பெறுதல், மானிடத்திறனைப் பெறுதல் ஆகியன கவனிக்க வேண்டிய காரணிகளாக உள்ளன. காய்கறிகள் பயிரிடுவதற்கு மழைக்காலம் கழிந்த காலமே உகந்தது. தண்ணீர் பாய்ச்சும் வசதி அமைந்தால் மட்டுமே வேனிற் காலத்தின் காய்கறிகள் பயிரிட முடியும். உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மிகக் குறைந்த செலவில் விளைப்பொருட்கள் கிடைக்கின்ற வேளைகளிலேயே செயல்படுத்த வேண்டும் என எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை அல்லவா. வீட்டு அலங்காரச் செயல்பாடுகள், வாழ்த்து அட்டைகள் உருவாக்குதல் என்பனவற்றை விழாக்காலங்களின் அண்மையில் செயல்படுத்துவதே நல்லது.

செயல்வழிக்கல்வியைப் பரிமாற்றம் செய்யும் போது கீழ்க்காணும் உத்திகளையும் செயல்பாடுகளையும் பின்பற்றலாம்.

- கலந்துரையாடல்
- குழு, தனிநபர் செயல்பாடுகள்
- நேர்காணல்
- உற்றுநோக்கல்கள்
- தொழிற்சாலை களப்பயணம்
- செயல்முறைப்பயிற்சி
- பார்வைக்கு உரியன
- பட்டறைகள்
- செயல்நாட்குறிப்பேடு தயாராக்குதல்
- அறிக்கைகள்
- செயல்திட்டங்கள்
- கருத்தரங்கங்கள்

ஒரு வகுப்பில் ஒரு மண்டலத்தின் ஒன்றோ இரண்டோ மாதிரிச் செயல்பாடுகள் மட்டுமே கருத்து வளநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. பிற செயல்பாடுகள் பற்றிக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. சுயமாகச் செயல்பாடுகளைக் கண்டுபிடிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு. ஆனால் ஒவ்வொரு மண்டலத்தின் கற்றல் அடைவுகள் நிறைவேறுவதற்கு உரிய செயல்களை உறுதிப்படுத்த அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். செயல்பாடுகளைச் செய்வதுடன் பணி செயல் நாட்குறிப்பேடு எழுதுவதற்கும் குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் பரிசோதிக்கவும் வேண்டும். படைப்புகளைப் பாதுகாத்து வைப்பதற்கும் வெளியிடுவதற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

## செயல்நாட்குறிப்பேட்டின் மாதிரிப் படம்

வரிசை எண் :

தேதி :

மண்டலம் :

செயல்பாட்டின் பெயர் :

பயன்படுத்திய கருவிகளும் பொருட்களும் :

செயல்பாட்டின் விளக்கம்

பயன்பாட்டு வரிசை : :

# 3 செயல்வழிக்கல்வி- மதிப்பீடு

செயல்வழிக்கல்வி மதிப்பீடு நிகழ்த்துவதற்குத் தொடர்ச்சியான முழுமை மிக்க ஓர் அணுகுமுறை யினையே பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு கற்றல் அடைவினையும் (Learning Outcome - LO) பெறுவதற்குக் குழந்தை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அந்தந்த வேளைகளில் தீர்வு கண்டு கற்றல் முன்னேறுகிறது என உறுதிப்படுத்துதல் வேண்டும். இத்துடன் இடைவேளைகளில் அதுவரை பெற்றுக்கொண்ட மேன்மைகள் ஒவ்வொன்றையும் உட்படுத்தியுள்ள மதிப்பீடுகள் அவசியமாகும்.

செயல்வழிக்கல்வியில் குழந்தைகளின் திறன்கள் (Life skills and motor skills), மனப் பான்மைகள் (Atitudes), மதிப்புகள்/விழுமியங்கள் (Values), செயல்/செயல்முறைப்ப டுத்துதல் (Performance), கருத்துகள்/கருத்தாக்கங்கள்/ எனும் காரணிகளை மதிப்பிட வேண்டும். இவற்றின் மதிப்பெண்கள்/என்பனவும் மேல்வகுப்புத் தேர்வுக்கு உட்படுத்து தல் வேண்டும்.

## மதிப்பீடு என்றால் என்ன?

கற்றல் கற்பித்தல் செயல்முறையிலிருந்து பிரிக்க முடியாத காரணியே மதிப்பீடு. செயல்வழிக்கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகள் (Learning outcomes - LOs) எந்த அளவில் நிறைவாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன? மாணவரின் ஆர்வங்களைக் கண்டுபிடிப்பதற்கும் கற்றலை ஆனந்தமயமாக்கவும் இயன்றுள்ளதா? என்பனவற்றை மதிப்பீடு வாயிலாகச் செயல்படுத்த வேண்டும். செயல்வழிக்கல்வியின் மதிப்பீடு தொடர்பான விளக்கக் கூறுகளே இங்கே விரித்துரைக்கப்படுகின்றன.

மாணவர்கள் பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் செயல்வழிக்கல்வியுடன் தொடர்புள்ள பல்வேறு திறன்களையும் திறமைகளையும் எந்த அளவில் ஆக்கப்பூர்வ மாகப் பெற்றுள்ளனர் என்ற தேடலே மதிப்பீடு. இதனைக் கற்றல் அடைவுகளைச் சார்ந்தே நடைமுறைப்படுத்துதல் வேண்டும். மதிப்பீடு செயல்வழிக்கல்வி வளர்ச்சியின் மதிப்பீடாகவும் அமைதல் வேண்டும். குழந்தையைக் கற்றலை நோக்கி மதிப்பீடு அழைத்துச் செல்ல வேண்டும். எந்த அளவில் மாணவருக்கு முன்னேற முடிந்தது என்ற சுயமதிப்பீடாகவும் அமைதல் வேண்டும்.

# மதிப்பீடு எவ்வாறு

கற்றல் அடைவுகளில் (Learning Outcomes - LOs) மையப்படுத்தப்பட்டுள்ள பாடஏற்பாடு 2013இல் சீரமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மதிப்பீடும் கற்றல் அடைவுகளை மையப்படுத்தியே செயல்பட வேண்டும். செயல்வழிக்கல்வியுடன் தொடர்புள்ள பல மண்டலங்களிலிருந்து ஒவ்வொரு வகுப்புடன் தொடர்புள்ள கற்றல் அடைவுகள் (Learning Outcomes - LOs) எந்த அளவில் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது என மதிப்பிடுவதையே ஆசிரியர் செயல்படுத்த வேண்டும். அதற்காக நிரந்தரமான முழுமையான தொடர் மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இத்தகைய ஒரு மதிப்பீடு முறையை நடைமுறைப்படுத்தும் போது செயல்வழிக்கல்வியின் ஒவ்வொரு மண்டலத்துடனும் இணைந்து கொண்டு இருவகை மதிப்பீடுகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

I. வகுப்பறையின் கற்றல் செயல்பாடுகளுடன் கூடிய மதிப்பீடு

II. செயல் / செயல்படுத்துதலில் மதிப்பீடும் அறிவியல் சார் மதிப்பீடும்

இவற்றுள் ஒவ்வொன்றினையும் விளக்கமாகச் சோதித்துப் பார்க்கலாம்.

## செயல்வழிக்கல்வி நாட்குறிப்பேடு (Work Diary)

குழந்தையின் செயல் நாட்குறிப்பேடு நோட்டுப்புத்தகத்தினைச் செயல்முறை வாயிலான மதிப்பீடு நிகழ்த்துவதற்கு உரிய கற்றல் சான்றாகப் பயன்படுத்தலாம். இதனை இடையிடையே பரிசோதனை செய்வதுடன் அறிவுரைகள் அளிக்கவும் வேண்டும். இது தொடர்பான குறிப்புகளைக் கற்பித்தல் கையேட்டில் (TM) பதிவு செய்ய வேண்டும்.

## படைப்புத்தொகுப்பு

கற்றலைப் பற்றிக் குழந்தைக்கும் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் பின்னூட்டம் அளித்தல் என்ற பணியினையே படைப்புத் தொகுப்பு செயல்படுத்துகிறது. இது கற்றலை விரைவுபடுத்துகிறது. கற்றல் செயல் வாயிலாகச் செல்லும் போது உருவாகும் அனைத்தும் படைப்புகளையும் படைப்புத் தொகுப்பினுள் உட்படுத்தி மதிப்பீடு செய்தல் வேண்டும். பாடப் பொருள் சார்ந்த கற்றல் சான்றுகளும் இதில் உட்படுகின்றன.

**படைப்புத் தொகுப்பின் உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

- செயல்நாட்குறிப்பேடு / நோட்டுப்புத்தகம்

- பிற படைப்புகள்
- ஓவியங்கள்/ திரட்டியவை
- பயிற்சித் தாள்

இத்தகைய மதிப்பீடுகளை மிக மேம்பட்டது / மேம்பட்டது / சராசரி / இனியும் மேம்பட வேண்டும் எனத் தரம் செய்து முறையே 4/3/2/1 என மதிப்பெண்களைக் கணக்கிடலாம்.

## கற்பித்தல் கையேடு (TM)

செயல்முறை மதிப்பீடுக்காக கற்பித்தல் கையேட்டினைப் (TM) பயன்படுத்தலாம். கற்பித்தல் கையேட்டில் மதிப்பீடுப் பக்கத்தில் பதிவு செய்கின்ற பிரதிபலிப்புக் குறிப்புகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.

## வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடன் கூடிய மதிப்பீடு (தொடர் மதிப்பீடு)

கற்றல் செயல்முறையை நிகழ்த்தும் வேளையில் ஆசிரியரின் உற்றுநோக்கல், வகுப்பறையில் மாணவரின் வெளியீட்டுத்திறன், செயல்வழிக்கல்வியுடன் தொடர்புள்ள தகவல்களைத் திரட்டுதல், செயல்வழிக்கல்வியின் நாட்குறிப்பேடு, படைப்புத்தொகுப்பு, அலகு (செயல்வழிக்கல்வியின் மண்டலம்) மதிப்பீடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயல்முறையுடன் இணையாக நிகழும் மதிப்பீடினை மேற்கொள்ளலாம்.

செயல்முறை மதிப்பீடுக்கு எனப் பொதுவாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

1. செயல்பாட்டில் பங்களிப்பு
2. கருத்தாக்கம்
3. திறன்களைப் பெறுதல்
4. செயல் / செயல்படுத்துதல்/ வெளியீடு
5. பதிவு செய்தல் / தயாராக்குதல்

சமூக, உளம் சார் மண்டலங்களில் உள்ள திறன்களை மதிப்பீடு செய்தலையும் செயல்முறை மதிப்பீட்டின் பகுதியாக நிகழ்த்த வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள திறன்களை அதற்கேற்ற குறிப்புகளை உட்படுத்தும் வேளைகளில் மதிப்பீடு செய்து கற்பித்தல் கையேட்டில் (TM) பதிவு செய்ய வேண்டும்.

| எண் | குறிப்புகள் | திறன்கள் |
|---|---|---|
| 1 | செயல்பாட்டில் பங்களிப்பு | சுயஅறிதல்<br>தலைமையேற்கும் திறன்<br>தனிநபர் திறன்<br>பொறுப்புணர்வு. |
| 2 | கருத்துத்தெளிவு | கற்றல் திறன்கள் |
| 3 | திறன்களைப் பெறுதல் | தீர்மானித்தல் பிரச்சினைத் தீர்வுத்திறன், படைப்புத்திறன் |
| 4 | செயல்/செயல்படுத்துதல் /வெளியீடு | கருத்துப்பரிமாற்றத்திறன் |
| 5 | பதிவு செய்தல் / தயாராக்குதல் | திறனாய்வுச் சிந்தனை |

## செயல்/வெளிப்படுத்துதல் செயல்படுத்துதலின் மதிப் பீடும், அறிவியல் சார் மதிப்பீடும் (பருவமதிப்பீடு - TE)

செயல்வழிக்கல்வியில் செயல் / செயல்படுத்துதலின் மதிப்பீட்டிற்கே மிக முக்கியத்துவம் உள்ளது. ஒவ்வொரு மண்டலத்துடன் தொடர்புபடுத்தி வகுப்பறை சார்ந்து செயல்/ செயல்படுத்தலின் வாய்ப்புகளைக் கற்றல் அடைவுகளுக்குச் சிறப்பிடம் அளித்தே கண்டுபிடிக்க வேண்டும். எப் பொருள் சார்ந்ததுடனும் தொடர்பு கொண்டு அவசியமாக அறிந்திருக்க வேண்டிய அடிப்படை அறிவியல் சார் கருத்தாக்கங்களையும் இத்துடன் சோதித்துப் பார்க்கலாம்.

இத்தகைய செயல்சார்ந்த அறிவியல் சார் மதிப்பீட்டின் மாதிரிகளை எஸ்.இ.ஆர்.டி மேம்படுத்தி அளிக்க உள்ளது.

## மதிப்பீட்டுப் படிவம்

தொடர்மதிப்பீடு (CE) பருவ மதிப்பீடு (TE) என்பனவற்றை ஒவ்வொரு பருவத்திலும் பதிவு செய்தலுக்கு உரிய படிவம்.

Term : I / II / III

பாடப்பொருள் : .................................... வகுப்பறை : ....................... பிரிவு : .......................

| எண் | மாணவர் மாணவி பெயர் | CE பிரிவுகள் | | | CE | TE | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்முறை மதிப்பெண் | படைப்புத் தொகுப்பு மதிப்பெண் | அலகு மதிப்பீட்டில் மதிப்பெண் | தரம் | மதிப்பெண் | தரம் | |
| | | | | | | | | |

## அலகுசார் (கற்றல் மண்டலம்) மதிப்பீடு

செயல்வழிக்கல்வி மண்டலத்துடன் தொடர்புள்ள வாய்மொழி மதிப்பீடு, செயல் மதிப்பீடு, கருத்து கருத்தாக்கம் மதிப்பிடுதலுக்கு உரிய வினாடி வினா போட்டிகள் ஆகியவற்றின் வாயிலாக அலகு (கற்றல் மண்டலம்) மதிப்பீட்டினை நிகழ்த்தலாம்.

## தொடர்மதிப்பீடு (CE) தரம் கண்டுபிடிக்கும் முறை

1. செயல்வழிக்கல்வியின் செயல்முறை மதிப்பீடு (செயல்வழிக்கற்றல் நாட்குறிப்பேடு, கற்பித்தல் கையேடு ஆசிரியரின் உற்றுநோக்கல் என்பனவற்றின் அடிப்படையில்)
2. படைப்புத் தொகுப்பு மதிப்பீடு

3. அலகு மதிப்பீடு (கற்றல் மண்டலம்) என்பனவற்றில் ஒவ்வொன்றின் மதிப்பெண்களை 10இல் கண்டுபிடித்த பின்னர் அவற்றின் தொகையினைக் காண்க. இத் தொகைக்கு ஏற்ப தரம் அளிக்கவும். இதற்காகக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| மதிப்பெண் (புள்ளி) | விழுக்காடு | தரம் |
|---|---|---|
| 23 - 30 | 75 - 100 | A |
| 18 - 22 | 60 - 74 | B |
| 14 - 17 | 45 - 59 | C |
| 10 - 13 | 33 - 44 | D |
| 10 க்குக் கீழ் | 33 க்குக் கீழ் | E |

சான்றாக, ஒரு குழந்தைக்குச் செயல்வழிக்கல்வியில் செயல்முறை, படைப்புத் தொகுப்பு, அலகு (கற்றல் மண்டலம்) சார் மதிப்பீடு என்பனவற்றின் மதிப்பெண்கள் 10-க்கு முறையே 8, 7, 7 என இருக்கட்டும். அப்படியாயின் மொத்த மதிப்பெண் 8 + 7 + 7 = 22 ஆகும். அட்டவணைக்கு ஏற்ப இந்தக் குழந்தையின் CE தரம் B ஆகும்.

## தரம் நிர்ணயிக்கும் முறை

தொடக்கப்பள்ளி நிலையில் தொடர்மதிப்பீடுக்கும் பருவ மதிப்பீடுக்கும் தனிப்பட்ட தரம் நிர்ணயிக்கும் முறையே பயன்படுத்தப்படுகிறது. அதற்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| விழுக்காடு | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 - 44 | D |
| 33 க்குக் கீழ் | E |

# மதிப்பீடு - ஒருங்கிணைப்பு

பருவ மதிப்பீடாக இருக்கின்ற மதிப்பெண்/ தரம் என்பன உட்படுத்துவதன் முன்னர் பருவ மதிப்பீட்டில் குழந்தைக்குக் கிடைத்த மதிப்பெண்/ தரம் என்பனவே CE-இன் ஆண்டு சார்ந்த தரம் ஆகும்.

இவ்வாறு CE தரம், TE தரம் ஆகியனவற்றைப் பதிவு செய்வதுடன், சமூக, உளம் சார் மண்டலங்களின் பயன்மிக்கப் பதிவுகளையும் ஆண்டுப் படிவத்தில் பதிவு செய்யலாம்.

சமூக, உளம் சார் மண்டலங்களில் மாணவரின் அறிவுத்திறனுடன் தொடர்புடைய பயன்மிக்கப் பதிவுகளைக் வகைகளைக் கண்டுபிடித்துப் பதிவு செய்தால் போதும். பய னற்றவற்றைப் பதிவு செய்ய வேண்டாம்.

# 4 செயல்வழிக் கல்வி- தொடக்கநிலைப் பள்ளிப் பிரிவு

செயல்வழிக்கல்வி தொடக்கநிலைப்பள்ளிப் பிரிவின் கற்றல் மண்டலங்களும் கற்றல் அடைவுகளும் (Learning Outcomes - LOs) கீழே தரப்பட்டுள்ளன. தொடர்ந்து ஒவ்வொரு வகுப்பிற்கும் உள்ள செயல்திட்ட வலைச்சட்டமும் (Syllabus Grid) அதனை அடியொற்றி ஒவ்வொரு மண்டலத்திலும் ஒவ்வொரு கற்றல் அடைவுகளைப் பெறுவதற்கு உரிய ஒன்றோ இரண்டோ மாதிரிச் செயல்பாடுகளின் விளக்கக்கூறுகளும் விரித்துரைக்கப் பட்டுள்ளன. குழந்தைகளுக்கு அறிமுகம் உள்ள பல்வேறு கற்றல் பொருள்களின் கருத்து மண்டலங்களுடன் ஒருங்கிணைத்து அனுபவ வாய்ப்புகளைக் கண்டுபிடித்துச் செய்கின்ற முறையே இங்கே விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கற்றல் அடைவினையும் ((Learning Outcomes - LOs)) பெறுவதற்கு உரிய கூடுதலான செயல்பாடுகளைக் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்த வேண்டும். செயல்பாடுகளைச் செய்யும்போது பாடப்பொருளுடன் ஒருங்கிணைத்து வாழ்க்கைத் திறன்கள், மனப்பான்மைகள் மதிப்புகள் / விழுமியங்கள் என்பன பெறுகின்றனர் என்று உறுதிப்படுத்துதல் வேண்டும். இவற்றைத் தொடர் மதிப்பீடு வாயிலாக பெறுகின்றனர் என்று சோதித்துப் பார்க்க வேண்டும்.

## செயல்வழிக்கல்வி மண்டலங்களும் கற்றல் அடைவுகளும் (LOs)

## வகுப்பு - 1

### மண்டலம் 1 - உணவும் வேளாண்மையும்
### Learning Outcomes - LOs

1.1.1 புள்ளிகளை இணைத்துப் பல்வேறு காய்கறிகள், பழவகைகள் என்பனவற்றின் ஓவியங்கள் வரைகின்றனர்.

### மண்டலம் 2 - உடல்நலமும் சுகாதாரமும்
### Learning Outcomes - LOs

**1.2.1** வகுப்பினையும் சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்துகின்றனர்.

### மண்டலம் 3 - உடை
### Learning Outcomes - LOs

**1.3.1** பல்வேறு உடை அணிதல் முறைகளைப் பற்றிய ஓவியங்களைத் திரட்டுகின்றனர்.

## மண்டலம் 4 – உறைவிடம்/வாழ்விடம்

### Learning Outcomes - LOs

1.4.1 பல்வேறு உறைவிடங்களின் ஓவியங்களைத் திரட்டுகின்றனர். காகிதங்களால் பல்வேறு வீடுகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு

### Learning Outcomes - LOs

1.5.1 பயனில்லாதவை எனக் கருதும் மிட்டாய் காகிதங்கள், முத்துகள் என்பனவற்றால் மாலைகள் பொம்மைகள் ஆகியவற்றை உருவாக்கின்றனர்.

## மண்டலம் 6 – சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

### Learning Outcomes - LOs

1.6.1 விழாக்காலங்களில் தோரணங்களை உருவாக்கி அலங்கரிப்பதில் ஈடுபடுகின்றனர்.

# வகுப்பு – 2

## மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்

### Learning Outcomes - LOs

2.1.1 உணவுத்தயாரித்தலில் பயன்படுத்துகின்ற பல்வேறு பொருட்களைத் திரட்டி வகைப்படுத்துகின்றனர். பாதுகாக்கின்றனர். , சமையலறைக்கு உரியவற்றை களிமண் பயன்படுத்தி உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 2 – உடல்நலமும் பாதுகாப்பும்

### Learning Outcomes - LOs

2.2.1 சுகாதாரச் செயல்பாடுகளுக்கு அவசியமான பொருட்களை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 3 – உடை

### Learning Outcomes - LOs

2.3.1 மனம்கவரும் முறையில் கைக்குட்டைகளில் சாயத்தினால் வடிவங்களை அச்சிடுகின்றனர்.

## மண்டலம் 4 – உறைவிடம்/வாழிடம்

### Learning Outcomes - LOs

2.4.1 பல்வகை வீடுகளின் ஓவியங்களைத் திரட்டி ஆல்பம் தயாரிக்கின்றனர்.

2..4.2 பல்வகை வீடுகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு
## Learning Outcomes - LOs

2.5.1 சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கின்ற பொருட்களால் பல்வேறு விநோதப் பொருட்களை உருவாக்குகின்றனர்.

2.5.2 எளிய ஒறிகாமி வடிவங்களை (ஜப்பானியக் கலை) உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 6 – சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்
## Learning Outcomes - LOs

2.6.1 காகிதங்களால் காகிதக் கூடுகளை உருவாக்குகின்றனர்.

# வகுப்பு - 3

## மண்டலம் 1 – உணவும் பயிர்த்தொழிலும்
## Learning Outcomes - LOs

3.1.1 வட்டாரத்தில் கிடைக்கின்ற பொருட்களால் செலவு குறைந்த மேன்மைமிக்க எளிய உணவுகள் எளிய பானங்கள் ஆகியன தயாரிக்கின்றனர்.

3.1.2 தானியங்களைக் கண்டுபிடித்து அவற்றை உண்பதற்குத் தகுதியுடையனவாக மாற்றுகின்றனர்.

3.1.3 காய்கறித்தோட்டத்திற்கு அவசியமான வித்துகளை முளைப்பிக்கின்றனர்.

## மண்டலம் 2 – உடல்நலமும் பாதுகாப்பும்
## Learning Outcomes - LOs

3.2.1 சுகாதாரச் செயல்பாடுகளுக்கு அவசியமான கருவிகளை உருவாக்குகின்றனர். (தூசிதட்டி, குப்பைத் தொட்டி போன்றன)

## மண்டலம் 3 – உடை
## Learning Outcomes - LOs

3.3.1 பல்வேறு காகிதங்களால் ஆடைகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 4 – உறைவிடம்/வாழிடம்
## Learning Outcomes - LOs

3.4.1 பல்வகை உயிரிகளின் உறைவிடங்களின் ஓவியங்களைத் திரட்டுகின்றனர். ஓவியங்கள் வரைகின்றனர். மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு
## Learning Outcomes - LOs

3.5.1 ஒறிகாமி வடிவங்களை (ஜப்பானியக் கலை) உருவாக்குகின்றனர் (இயங்குவன)

## மண்டலம் 6 – சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்
## Learning Outcomes - LOs

3.6.1 விழாக்காலங்களில் அவசியமான அலங்காரப் பொருட்களை உருவாக்குகின்றனர்.

# வகுப்பு – 4

---

## மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்
## Learning Outcomes - LOs

4.1.1 பல்வேறு கால அளவில் கிடைக்கின்ற உணவுப்பொருட்களைக் கேடுவராமல் பதப்படுத்துகின்றனர்.

4.1.2 காய்கறித்தோட்டம், மூலிகைத்தோட்டம், மீன் அருங்காட்சியகம் என்பன உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 2 – உடல்நலமும் பாதுகாப்பும்
## Learning Outcomes - LOs

4.2.1 கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி பயன்பாடுடையதாக மாற்றும் பணியில் ஈடுபடுகின்றனர். சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்துகின்றனர்.

## மண்டலம் 3 – உடை
## Learning Outcomes - LOs

4.3.1 பல்வேறு காய்கறிகள், நிறம் ஆகியன பயன்படுத்தி மேசைவிரிப்பு, கைக்குட்டை கர்ட்டன், சால்வை என்பன அலங்கரிக்கின்றனர்.

## மண்டலம் 4 – உறைவிடம்/வாழிடம்
## Learning Outcomes - LOs

4.4.1 சரியான பொருட்களைப் பயன்படுத்தி வீடுகளின் பல்வேறு மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு
## Learning Outcomes - LOs

4.5.1 முகமூடி பொம்மைகள், இசைக்கருவிகள் ஆகியன உருவாக்குகின்றனர்.

4.5.2 எளிய ஒறிகாமி வடிவங்களைத் தயாரிக்கின்றனர்.

4.5.2 களிமண், மைதாமாவு ஆகியன பயன்படுத்தி வினோதப் பொருட்களைச் செய்கின்றனர்.

## மண்டலம் 6 – சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்
## Learning Outcomes - LOs

4.6.1 வாழ்த்து அட்டைகள், காகிதப்பைகள் அலங்காரங்கள் ஆகியனவற்றைப் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்குகின்றனர்.

# செயல்வழிக் கல்விச் செயல்பாடுகள்

## வகுப்பு 1

# செயல்வழிக்கல்வி பாட ஏற்பாடு

## பாடத்திட்ட வலைச்சட்டம்

### மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 1.1 | புள்ளிகளை இணைத்துப் பல்வகைக் காய்கறிகளின் ஓவியங்களை வரைகின்றனர். | பல்வகைக் காய்கறிகள்<br>புள்ளிகள் இணைக்கப்பட்டு வரைந்த ஓவியங்கள் ஓவியம் வரைதல் | பல்வகைக் காய்கறிகளின் ஓவியங்களை உற்றுநோக்கு கின்றனர்.<br>புள்ளிகளை இணைத்து ஓவியங்களை முழுமைப் படுத்துகின்றனர். | உற்றுநோக்கல்<br>படைப்பு மதிப்பீடு |

### மண்டலம் 2 – உடல்நலமும் சுகாதாரமும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.1 | வகுப்பறை, சுற்றுப்புறம் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துகின்றனர். | தனிநபர் சுகாதாரம்<br>சுற்றுப்புறச் சுகாதாரம்<br>உடலைத் தூய்மைப்படுத்தும் திறன் | சுகாதாரப் பாடலைப் பாடுகின் றனர் சைகைப்பாடல் சுகாதாரக் கருவிகள் – துடைப்பக் கட்டை – குப்பைக் கூடை ஆகியன பயன்படுத்து கின்றனர். | உற்றுநோக்கல்<br>வினாக்களோடு எதிர் வினையாற்றுதல்<br>பங்களிப்பு |

### மண்டலம் 3 – உடை

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.1 | பல்வகை உடை அணியும் முறைகள் பற்றிய ஓவியங்களைத் திரட்டுகின்றனர். | பல்வகை உடை அணியும் முறைகள் (ஆண், பெண் வேறுபாடு, காலநிலைக்கு ஏற்ப) | பல்வகை ஆடைகளை உற்றுநோக்குகின்றனர்.<br>எளிய கலந்துரையாடல்<br>பல்வகை ஆடைகளின் ஓவியங்களைத் திரட்டு கின்றனர். | உற்றுநோக்கல்<br>படைப்பு |

## மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 1.4.1 | பல்வகை உறைவிடங்களின் படங்களைத் திரட்டு கின்றனர். காகிதங்களைப் பயன்படுத்திப் பல்வகை வாழிடங்களின் மாதிரிகளை உருவாக்குகின்றனர். | பல்வகை உறைவிடங்களின் மாதிரிகளை அறிதல். | காகிதங்களைப் பயன்படுத்தி பல்வேறு உறைவிடங்களின் மாதிரிகளைக் குழந்தைகளைக் கொண்டே செய்விக்கின்றனர். | செயல்பாட்டில் பங்களிப்பு உற்றுநோக்கல் |

## மண்டலம் 5 - பொழுதுபோக்கு

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 1.5.1 | பயன்படாத மிட்டாய் காகிதங்கள், முத்துகள் ஆகியனவற்றால் மாலைகள், பொம்மைகள் செய்கின்றனர். | பயன்படாத பொருட்களைப் பயன்படும் முறையில் மாற்றும் திறன் | பல்வகை மிட்டாய் காகிதங்களைத் திரட்டு கின்றனர். நூலினால் காகிதப்பைகளை மாலையாகக் கட்டுகின்றனர். | படைப்பு |

## மண்டலம் 6 - சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 1.4.1 | விழாக்காலங்களில் தோரணங்களை உருவாக்கி அலங்கரிக்கின்றனர். | பல்வேறு விழாக்கள் அலங்கரிக்கும் செயல்பாடுகள் தோரணங்கள் | பல்வேறு பொருட்களைப் (குருத்தோலை, சைனாகாகிதம்) பயன்படுத்தி தோரணங்களை உருவாக்குகின்றனர். விழாக்கா லங்களில் பயன்படுத்துகின்றனர். வகுப்பறைகளை அலங்கரிக்கின்றனர். | பங்களிப்பு<br>படைப்பு மதிப்பீடு செய்தல் |

# செயல்பாடுகள்

## மண்டலம் 1 - உணவும் வேளாண்மையும்

நம்முடைய உணவின் முக்கியக்கூறுகளில் சில காய்கறிகளும் பழவகைகளும் உள் ளன. இவற்றை அறிவதற்கும் அவற்றின் படங்களை வரைவதற்கும் உரிய திறனைப் பெறுவதற்கும் அவசியமான செயல்பாடுகளும் உத்திகளும் இம்மண்டலத்தில் உள்ளன. இம்மண்டலத்தின் பரிமாற்றம் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

**LO** : 1.1.1 புள்ளிகளை இணைத்துப் பல்வகை காய்கறிகளின் ஓவியங்கள் வரைகின்றனர்.

**செயல்பாடு :** ஓவியத்தை முழுமைப்படுத்துதல்

**செயல்முறை :** வினாக்கள், ஓவியக்கண்காட்சி, ஓவியங்களைத் திரட்டுதல், ஓவியத்தை முழுமைப்படுத்துதல்


**செயல்பாட்டுமுறை :** தனிநபர் செயல்பாடு


**பொருட்கள்:** பழம், காய்கறிகளின் ஓவியங்கள், புள்ளிகள் போட்ட ஓவியங்கள் பென்சில் / கிரையான்கள்


## செயல்பாட்டின் வரிசை

- பல்வகை காய்கறிகள், பழவகைகள் ஆகியவற்றின் ஓவியக்கண்காட்சியினை நடத்துகின்றனர்.
- குழந்தைகள் படங்களை உற்றுநோக்கி பெயர்களைச் சொல்கின்றனர். (மாங்காய், வாழைப்பழம், வழுதனை எலுமிச்சை)
- புள்ளிகள் உள்ள ஓவியங்கள் அளித்து நிகழ்த்தும் செயல்பாடு
- வெள்ளைக் காகிதத்தில் புள்ளிகள் போட்ட படங்களில் உள்ளவர் எவர் எனக் கண்டுபிடிக்கின்றனர்.
- ஆசிரியர் புள்ளிகளை இணைத்து ஓர் ஓவியத்தை முழுமைப்படுத்துகிறார். ஓவியம் எதனைக் காட்டுகிறது என்று குழந்தைகள் சொல்கின்றனர்.
- குழந்தைகளுக்குத் தனிப்பட்ட முறையில் புள்ளிகள் போட்டுள்ள ஓவியங்கள் கொடுக்கப்படுகின்றன.
- புள்ளிகளை இணைத்து மறைந்திருப்பவரைச் சுயமாகக் கண்டுபிடிக்கின்றனர்.

  சுய மதிப்பீடு செய்கின்றனர்.







ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.

## தரம் நிர்ணயித்தல்

- கிடைக்கின்ற பழங்கள், காய்கறிகள் ஓவியங்கள் ஆகியன சேகரித்தல், பெயர் எழுதுதல்.

- படைப்பு

### தொகுப்பு

- இயற்கையில் உண்டாகும் பல்வகைக் காய்கறிகள் பழவகைகள் ஆகியவற்றை அறிந்து கொள் கின்றனர்.
- இவற்றின் சரியான நிறங்கள், வடிவம் என்பன வற்றைத் தெரிந்து கொள்கின்றனர்.

# மண்டலம் 2 - உடல்நலமும் பாதுகாப்பும்

வாழ்க்கையில் சுகாதாரப் பழக்கவழங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் உலகத்தினரின் வாழ்க்கைமுறைகளிலும் சுகாதாரப் பழக்க வழக்கங்களிலும் சீரமைப்புகள் செய்ய வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள், தனிநபர் சுகாதாரம், சுற்றப்புறச் சுகாதாரம் என்பன சுற்றுச் சூழலுடன் இணைவதோடு கற்றல் செயல் முறையின் பகுதியாகவும் அமைதல் வேண்டும். குழந்தைகளிடம் அமைந்திருக்க வேண்டிய சிறந்த உடல்நலச் சிந்தனைகளுக்குக் கீழ்க்காணும் கற்றல் செயல்பாடுகள் பயன்படும்.

**LO** : 1.2.1 வகுப்பறையினையும் சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்து கின்றனர்.

## செயல்பாடு : சுகாதார உணர்வு வளர்கிறது.

- தனிநபர் சுகாதாரம்
- சுற்றுப்புறச் சுகாதாரம்
- உடல் தூய்மையினை வளர்க்கும் திறன்

## செயல்பாட்டின் வரிசை

- முன்னர் வகுப்பில் தேர்வு செய்து தயாராக்கிய சுகாதாரப் பாடல்களை ஆசிரியர் பாடும்போது குழந்தைகளும் ஏற்றுப் பாடுகின்றனர்.

**சுகாதாரத்தின் இன்றியமையாமை - கலந்துரையாடல்**

- சுகாதாரத்துடன் தொடர்புள்ள அனுபவங்களைப் பங்கிடுகின்றனர்.
- சுகாதாரமின்மையினால் எதிர்கொள்ளும் உடல் நலப்பிரச்சினைகள்
- சுகாதாரத்துடன் தொடர்புள்ள கதைகள்
- உணவு உண்பதன் முன் கைகளைத் தூய்மைப்படுத்துவதன் அவசியம் அறிந்து கொள்ளப்படுகிறது.

**திட்டமிடுதல்**

- சுகாதாரம எங்கெல்லாம்?
- வகுப்பறை, வீடுகள் என்பன சுத்தப்படுத்துவதற்கு உரிய செயல்பாடுகள் யாவை? எத்தகைய பொருட்கள் அவசியம் எனக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர்.
- கருவிகள் யாவை?
  சுத்தப்படுத்துவதற்கு உரிய கருவிகளின் பட்டியலை ஆசிரியர் தயாராக்குகிறார்.
- செயல்படுத்துவது எவ்வாறு?
  கருவிகள் - துடைப்பக்கட்டை, தூசித்தட்டி, குப்பைக்கூடை

## செயல்படுத்துதல்

சுகாதாரப் பாடல்கள், கதைகள் என்பன முன்னரே தயாராக்கியதன் அடிப்படையில் வெளியீடு. சுகாதாரப் பழக்கவழக்கங்கள் நடைமுறையில் கடைபிடிக்க வேண்டியன என்றும் நல்லொழுக்கங்கள் வளர்வதற்கு உரிய ஊக்கம் அளிப்பதுடன் சிறுசெயல்பாடுகளை வகுப்பறையில் செயல்படுத்தவும் வேண்டும்.

## தரம் நிர்ணயித்தல்

- குழந்தையின் சுகாதாரப் பழக்க வழக்கம்
- செயல்பாடுகளில் பங்களிப்பு

### தொகுப்பு

- தனிநபர் சுகாதாரமும் சுற்றுப்புறச் சுகாதாரமும் இன்றியமையாதன என்ற அறிவினைக் குழந்தைகள் பெறுகின்றனர்.

## மண்டலம் 3 - உடை

நம் தேசத்தின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்வகைத் தொழில் மண்டலங்களில் வேறுபட்ட உடை அணிதல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. இவை காலநிலைக்கு ஏற்ப உபயோகிக்கப்படுகின்றன. அதனால் இந்தப் பாடப்பகுதி வாயிலாக உடை அணிதல்களின் கருத்துகள் குறித்துள்ள விழிப்புணர்வினைக் குழந்தைகள் பெறுகின்றனர்.

**LO** : 1.3.1 பல்வேறு உடை அணிதல் முறைகள் பற்றிய ஓவியங்களைத் திரட்டுகின்றனர்.

## கருத்துகள் திறன்கள்

- பல்வகை உடை அணிதல் முறைகள்
  - ஆண், பெண் வேறுபாடு
  - காலநிலைக்கு ஏற்ப
  - பல்வேறு தொழில் துறைகளில்

**செயல்பாடு** : சுவர் பத்திரிக்கை தயாரித்தல்

**செயல்முறை** :
- உற்றுநோக்கல்
- எளிய கலந்துரையாடல்
- வேறுபட்ட முறைகளிலான ஓவியங்களைத் திரட்டுதல்
- வேறுபட்ட உடை அணிதல்களைக் காட்டும் படங்களை ஆசிரியரின் கூற்றுப்படிக் குழந்தைகள் கொண்டு வருகின்றனர்.

  எ.கா.: (காவலர் சீருடை, இரயில் நிலைய அதிகாரி உடை, தபால்காரர் உடை, தாதியர் உடை ஓட்டுனர் உடை போன்றவை.
- பல்வேறு மாநிலங்களின் ஆடை அலங்காரம்.

**செயல்பாடின் முறை :** தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** : அட்டைக்காகிதம், பசை, கத்தரிக்கோல், பல்வகை உடைகளின் படங்கள்.

## செயல்பட்டின் வரிசை

முன்னரே ஆசிரியர் கூற்றுப்படிக் குழந்தைகள் படங்களைத் திரட்டுகின்றனர் அவற்றைப் பற்றிப் புரிந்து கொண்டு வகைப்படுத்தி அட்டைக் காகிதத்தில் பசை தேய்த்து ஒட்டி சுவர் படங்களாக மாற்றவும் செய்கின்றனர். படங்களை வகைப்படுத்தி வெட்டி ஒட்டுவதற்கு ஆசிரியரின் உதவி வேண்டும். படங்களின் பெயர்களை ஆசிரியரின் உதவியுடன் எழுதி முழுமைப்படுத்துகின்றனர். வகுப்பறையைச் சுவர் பத்திரிக்கையால் அலங்கரிக்கின்றனர்.

## தரம் நிர்ணயித்தல்

படைப்பு, குழந்தையின் பங்களிப்பு

### தொகுப்பு

- பல்வகை உடை அணிதல் முறைகள் பற்றியும் தொழிலுடன் தொடர்புள்ள பல்வகைச் சீருடைகள் உள்ளன என்பது பற்றியும் கருத்தாக்கங்கள் உருவாக்குகின்றன.

# மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

கூடுகள் உருவாக்கும் உயிரிகள் குறித்தும் கூடுகள் உருவாக்காத உயிரிகள் குறித்தும் கலந்துரையாடல் நிகழ்கிறது. குழந்தைகள் பல்வகையான கூடுகளின் படங்களைப் பத்திரிகைகளிலிருந்தும் இதழ்களிலிருந்தும் வெட்டியெடுத்து சேகரிக்கின்றனர். இவற்றைப் பயன்படுத்தி ஆல்பங்கள் தயாரிக்கின்றனர்.

காகிதங்கள், தீப்பெட்டி, சிறுபெட்டிகள் என்பன பயன்படுத்திப், பல்வகையான வீடுகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர். அவற்றுக்கு வண்ணம் தீட்டவோ பொருத்தமான வண்ணக் காகிதங்களை ஒட்டவோ செய்யலாம்.


**LO :** 1.4.1 காகிதங்களைப் பயன்படுத்தி பல்வகை உறைவிடங்களின் மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு :** வீடுகளின் மாதிரிகளை உருவாக்குதல்.

**செயல்முறை :**
- கலந்துரையாடல் - கூடுகள் உருவாக்கும் உயிரிகளும் கூடுகள் உருவாக்காத உயிரிகளும்
- படங்கள் திரட்டுதல்
- ஆல்பம் தயாரித்தல்


**பொருட்கள்:** அட்டைக்காகிதம், பசை, கத்தரிக்கோல், தீப்பெட்டிக்கூடு, சிறுபெட்டிகள்.

## செயல்பாட்டின் வரிசை





கட்டம் (1)

(சதுரக் காகிதத்தில் வாசல் வரையப் பட்டுள்ளது)




கட்டம் (2)

(முக்கோணக் காகிதத்தில் மேற்கூரை)




கட்டம் (3)

**சதுரக்காகிதத்தின் மேல் முக்கோணக் காகிதம் ஒட்டப்பட்டுள்ளது.**

## தொகுப்பு

- பல்வகை வீடுகள் பற்றிய கருத்தாக்கம்
- படைப்பு

## மண்டலம் 4 - பொழுதுபோக்கு

பயனில்லாப் பொருட்கள் என்று கருதுகின்ற மிட்டாய் காகிதங்கள், முத்துகள் என்பனவற்றைப் பயன்படுத்தித் தோரணங்களும் பிற அலங்காரப் பொருட்களும் விளை யாட்டுப் பொருட்களும் உருவாக்கலாம் எந்த ஒரு பொருளையும் வீணடிக்காது அதன் மறுபயன்பாட்டின் வாய்ப்பினை அறிந்து கொள்கின்றனர். அவற்றைச் சேகரிப்பதுடன் மறு பயன்பாட்டிற்குச் சீரமைக்கும் மனப்பான்மை குழந்தைகளிடம் வளர்கிறது.

**LO : 1.5.1** பயனில்லாப் பொருட்கள் எனக் கருதுகின்ற மிட்டாய் காகிதங்கள், முத்துகள் ஆகியன பயன்படுத்தி மாலைகள் பொம்மைகள் என்பன உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு** : மிட்டாய்கூடு மாலை தயாரித்தல்

**செயல்முறை** :


- திரட்டுதல்
- கலந்துரையாடல் - பயனற்றவை எனக் கருதி எறிந்துவிடும் பொருட்கள் யாவை?

**பொருட்கள்** : அட்டைக் காகிதம், பசை, கத்தரிக்கோல், தீப்பெட்டிக்கூடு, சிறுபெட்டிகள்

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

## செயல்படுத்தும் வரிசை

- பலநிற மிட்டாய் கூடுகளைத் திரட்டுகின்றனர். (படம் B)
- இரண்டாக மடக்குகின்றனர் (படம் C)
- இரு பகுதிகளையும் மீண்டும் இரண்டாக மடக்குகின்றனர். (படம் D)
- ஸிக்ஸாக் ஆக மடக்கவும்.
- நடுப்பகுதியில் கட்டிப் போடவும் (படம் இ)
- கட்டிய பின் இரு பக்கங்களையும் பிடித்து நேராக வைக்கவும் (படம் 7)
- மாலை போன்று ஒன்றின் மீது ஒன்றாக நூலால் கட்டி வைக்கவும் (படம் ஜி)



# மண்டலம் 6 - சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

குழந்தைத் தின விழாவின் கொடிகளை உருவாக்கி அணிவகுப்பில் கலந்து கொள்ளலாம்.

**LO** : 1.6.1 விழாக் காலங்களில் தோரணங்களை உருவாக்கி அலங்கரிக்கின்றனர்.

**செயல்பாடு :** கொடிகள் உருவாக்குதல்


**பொருட்கள்:**
- சைனா காகிதம் / வெண்ணெய் காகிதம்
- ஈர்க்கில்
- பசை
- கத்தரிக்கோல்

## செயல்பாட்டின் முறை

ஆசிரியரின் உதவியுடன் தனிநபர்

## உருவாக்கும் முறை

- ஆசிரியரின் உதவியுடன் தனிநபராக
- கொடியின் வடிவத்தில் ஆசிரியர் காகிதத்தை வெட்டியெடுக்கிறார்.
- கொடிக்குத் தேவைப்படும் நீளத்தில் ஈர்க்கிலை ஒடிக்கின்றனர்.
- ஈர்க்கிலின் முனைப்பகுதியில் பசையினைத் தேய்க்கின்றனர்.
- வெட்டியெடுத்த கொடியை ஆசிரியரின் உதவியுடன் குழந்தைகள் ஒட்டுகின்றனர்.



இந்தக் கொடிகளைக் குழந்தைகள் தினவிழா அணிவகுப்பில் பயன்படுத்தலாம்.

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- குழந்தைகளின் பங்களிப்பு

# செயல்வழிக்கல்விச் செயல்பாடுகள்

## வகுப்பு 2

# செயல்வழிக்கல்விப் பாடஏற்பாடு

## பாடத்திட்ட வலைச்சட்டம்

### மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.1.1 | உணவு தயாரிப்பதற்குப் பயன்படுத்துகின்ற பல்வேறு பொருட்களைச் சேகரித்து வகைப்படுத்து கின்றனர். பாதுகாக்கின்றனர். | உணவிற்காகப் பயன்படுத்தும் பல்வகையான பொருட்களைச் சேகரித்தல், வகைப்படுத்துதல் பாதுகாக்கும் முறை | பல்வகை உணவுப் பொருட்கள் பற்றிய கலந்துரையாடல் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களைச் சேகரிக்கின்ற னர், சிறப்புத் தன்மைகளின் அடிப்படையில் தானியங்கள், பயறு வகைகள் என்பனவற்றைக் காகிதக் கூடுகளில் நிறைக்கின்றனர். பெயர் எழுதுகின்றனர். | கலந்துரையாடலில் வெளியீடுகள் செயல்பாட்டின் நிலைகள் படைப்பினை மதிப்பீடு செய் கின்றனர். |

### மண்டலம் 2 – உடல்நலமும், உடல்நலப்பராமரிப்பும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.2.1 | சுகாதாரச் செயல்பாடுகளுக்குத் தேவையான பொருட்களை உருவாக்குகின்றனர். | தனிநபர் சுகாதாரம்<br>சுற்றுப்புறச் சுகாதாரம்<br>சமூகச் சுகாதாரம்<br>சுகாதார அறிவு<br>சுத்தப்படுத்துவதற்கு உரிய பல்வேறு கருவிகள் (துடைப்பக்கட்டை, தூசிதட்டி போன்றன) உருவாக்கும் முறை உபயோகிக்கும் வரிசை | சுகாதாரத்தின் தேவை கலந்துரையாடல்<br>சுகாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்<br>உற்றுநோக்கல்<br>தனிநபர் சுகாதாரத்தைக் கடைபிடித்தல் சுத்தப்படுத்தும் கருவிகளை உற்று நோக்குதல் உருவாக்கத்தின் போது பயன்படுத்துதல் சுயமதிப்பீடு ஒருவருக்கொருவர் தங்களுக்குள் மதிப்பீடு | உற்றுநோக்கல் செயல்பாடுகளைப் பல நிலைகளிலும் மதிப்பீடு<br>உருவாக்கும் திறன் படைப்பு மதிப்பீடு . |

## மண்டலம் 3 - உடை

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.3.1 | கைக்குட்டைகளில் துணிசாயத்தினால்( Fabric Paint) வடிவங்கள் பதித்து மனம் கவரும் முறையில் அழகுபடுத்துகின்றனர். | காய்கறிகளை வெட்டி வடிவங்கள் உண்டாக்குதல். துணியில் பயன்டுத்துவது தனிப்பட்ட வகை சார்ந்த வண்ணங்கள் என அறிதல். | வடிவங்கள் பதித்த கைக்குட்டைகள் பரிசோதிக்கப்படுகின்றன மதிப்பீடு நிகழ்கிறது. சுய மதிப்பீடுகள் | உருவாக்கும் திறன் பங்களிப்பு படைப்பு, மதிப்பீடு |

## மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.4.1 | பல்வகை வீடுகளின் படங்களைச் சேகரித்து ஆல்பம் தயாராக்குகின்றனர். | பல்வகை உயிரிகள் உறைவிடங்கள் படஆல்பம் | பல்வகை உயிரிகள் வசிக்கும் இடங்கள் உற்றுநோக்கப்படுகின்றன. உறைவிடங்களின் படங்கள் சேகரிக்கப்படுகின்றன. திரட்டிய படங்களைப் பயன்படுத்தி ஆல்பம் தயாரிக்கப்படு கிறது. | படைப்பு மதிப்பீடு பங்களிப்பு |

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.5.1 | சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு விநோதப் பொருட்களை உருவாக்குகின்றனர். | பல்வகை விநோதப் பொருட்களின் உருவாக்கம்<br>பயன்பாடுடையதும் கவர்கின்றதுமான பொருட்களின் உருவாக்கம் | பயன்பாடுடையதும் கவர்கின்றதுமான விநோதப் பொருட்களை அட்டவணைப்படுத்துகின்றனர். இத்தகைய பொருட்களின் உருவாக்கத்தில் ஈடுபடுகின்றனர். | குழுச் செயல்பாட்டுத்திறன்<br>படைப்பு மதிப்பீடு |
| 2.5.2 | எளிய ஒறிகாமி வடிவங்களை உருவாக்குகின்றனர். | ஒறிகாமிவடிவங்கள் காகிதத்தைப் பயன்படுத்தி,பல்வேறு வடிவங்களை உரு வாக்கும் முறை | காகிதத்தை மடக்கி ஒறிகாமி வடிவங்களை உருவாக்குகின்றனர். | படைப்பு மதிப்பீடு |

## மண்டலம் 6 – சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 2.6.1 | காகிதத்தைப் பயன்படுத்திக் காகிதக் கூடுகளை உண்டாக்குகின்றனர். | காகிதக்கூடு மருந்துக் கூடுகள் கருவிகள் | காகிதத்தை மடக்கி பல்வகைக் கூடுகளை உருவாக்குதல் | கலந்துரையாடல்<br>படைப்பு மதிப்பீடு |

# செயல்பாடுகள்

## மண்டலம் 1 - உணவும் வேளாண்மையும்

நம்மைச் சுற்றி உணவுக்குப் பயன்படுகின்ற ஏராளமான பழங்களும் காய்கறிகளும் உள்ளன. இவற்றைச் சேகரிப்பதுடன் ஒவ்வொன்றின் சிறப்புத்தன்மைகளையும் கண்டுபிடித்து அவற்றை வகைப்படுத்துவதே இச்செயல்பாட்டின் நோக்கமாக உள்ளது. இச்செயல்பாடு வாயிலாக மிகச் சிறுவயதிலேயே வேளாண்மையில் ஆர்வத்தை வளரச் செய்ய இயல்கிறது.

**LO** : உ.1.1 உணவுக்குப் பயன்படுத்துகின்ற பல்வகைப் பொருட்களைத் திரட்டி வகைப்படுத்துகின்றனர். பாதுகாக்கின்றனர்.

**செயல்பாடு** : வித்துகளைத் திரட்டுதல்

**செயல்முறை** :

- கலந்துரையாடல் - சுற்றுப் புறங்களில் காணப்படும் பயிர்கள், பல்வகை வித்துகள்.
- வித்துகளைத் திரட்டுதல். வகைப்படுத்துதல்.
- வகைப்படுத்தப்பட்ட வித்துகளைத் தனித்தனிக் கூடுகளில் பெயர் எழுதி காட்சிக்கு வைத்தல்.

**செயல்பாட்டின் முறை** : குழுச் செயல்பாடு

**பொருட்கள் :**

- சேகரித்த பல்வகை வித்துகள் கூடுகள்
- நெகழிப் பைகள்
- வித்துகளின் படங்களும் பெயர்களும்

## செயல்பாட்டின் வரிசை

பள்ளிக்கூடம், வீடு என இத்தகைய சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கின்ற வித்துகள் சேகரிக்கப்படுகின்றன. சேகரித்த வித்துகள் வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு இனத்தைச் சார்ந்த வித்துகள் படங்களுடன் தனித்தனி கூடுகளில் காண்கின்ற தரத்தில் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

இதிலிருந்து எவ்வகைப் பயிர்கள் நமக்குச் சுற்றிலும் உள்ளன என்று கண்டுபிடிக்கப் படுகிறது. பரவலாக எந்தப்பயிர்கள் பயிரிடப்படுகிறது என்று புரிந்து கொள்ளப்படுகிறது. அதன் சிறப்பும் அறிந்து கொள்ளப்படுகிறது.

இதுவரை நிகழ்ந்துள்ள செயல்பாடுகளை நோட்டுப்புத்தகத்தில் குறித்து வைக்கவும்.

## தரம் நிர்ணயித்தல்

- குழந்தையின் பங்களிப்பு
- உற்றுநோக்கல்திறன்
- படைப்புகள்

**LO** : உ.1.உ புள்ளிகளை இணைத்து, பழங்களினுடையவும் காய்கறிகளினுடை யவும் படங்களுக்கும் வண்ணம் தீட்டுகின்றனர்.

**செயல்பாடு** : படம் முழுமையடைதல்

**செயல்முறை** :

- கலந்துரையாடல் – நமது நாட்டில் நீங்கள் எவ்வகை பழங் களைப் பார்த்திருக்கிறீர்கள்?
- படங்கள் வாயிலாகப் பழங்களைத் தெரிந்து கொள்கின்றனர்.
- படம் முழுமையடைதல்


**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள் :**


- காய்கறிகளினுடையவும் பழங்களினுடையவும் புள்ளிகள் உள்ள கோட்டுப் படங்கள்.
- வண்ணங்கள் தூரிகைகள்
- தண்ணீர் எடுக்கும் பாத்திரம்( Mug), தண்ணீர்

## செயல்பாட்டின் வரிசை

- காய்கறிகளினுடையவோ பழங்களினுடையவோ படங்களை ஆசிரியர் சேகரிக்கிறார்.
- சேகரித்துள்ள படங்களின் வெளிக்கோடு வழியாக ஒன்றாக்கிக் கட்டும் ஊசியினைப்( பைண்டிங் ஊசி எண் 6) பயன்படுத்தி 1/2 செ.மீ. தூரத்தில் புள்ளிகள் போடுகின்றனர்.
- புள்ளிகள் போட்டுத் தயாராக்கிய படமும் வரைவதற்கு வேண்டிய காகிதங்களும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. வரையும் போது இரு காகிதங்களும் விலகிப் போகாது பலப்படுத்தி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.







- ஆசிரியர் புள்ளிகள் போட்டுத் தயாராக்கிய படத்தின் கீழே வரைய வேண்டிய காகிதம் வைத்ததன் பின்னர் துணிச்சாயத்தில் ஸ்பாஞ்சை நனைத்து புள்ளிகளில் அமர்த்திச் செல்லுமாறு கூறுகிறார்.
- புள்ளிகள் அனைத்தும் முழுமையடைந்ததன் பின்னர் மேலே உள்ள படத்தை விலக்கிவிட்டுப் பார்த்தால் புள்ளிகள் போட்ட பழங்களின், காய்களின் படங்கள் அச்சடித்தது போன்றே கிடைக்கின்றன.
- இப்புள்ளிகள் உள்ள படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டி நிறைவு செய்யுமாறு ஆசிரியர் குழந்தைகளிடம் கூறுகிறார்.
- படங்களை வெளியிடுகின்றனர்.

## செயல்பாடு - ஓவியங்களுக்கு வண்ணம் தீட்டுகின்றனர்

ஆசிரியர் பழங்களினுடையவோ காய்கறிகளினுடையவோ படங்களைத் திரட்டியதன் பின்னர் குழந்தைகளுக்கும் கரிமன் காகிதமும் வரைவதற்குரிய படமும் கொடுக்கிறார்.

வரைய வேண்டிய காகிதத்தின் மேலாக கரிமன்காகிதத்தைக் கவிழ்த்தி வைத்ததன் பின்னர் சேகரித்துள்ள படங்களைக் கரிமன் காகிதத்தின் மேலே வைக்கின்றனர். இந்தப் படங்கள் விலகிப் போகாமலிருக்க மொட்டு ஊசியுடன் இணைக்குமாறு அறிவுறுத்தப் படுகிறது. இனி நன்கு கூர்மையுள்ள பென்சிலால் படத்தின் மேலே வரைகின்றனர். வரையும்போது படத்தின் மேலே இடது பகுதியிலிருந்து தொடங்கி கீழே வலது பகுதி யில் வந்து முடிக்க வேண்டும்.

படம் வரைந்து முடிந்தால் மொட்டு ஊசிகளை எடுத்து மாற்றி படத்தையும் கரிமன் காகிதத்தையும் மாற்றியதன் பின்னர் முழுமைபெற்ற படத்திற்குப் பொருந்துமாறு வண்ணம் தீட்டிப் படத்தை நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- செயல்பாட்டில் பங்களிப்பு

## மண்டலம் 2 - உடல்நலமும் பாதுகாப்பும்

சுகாதாரச் செயல்பாடுகளுக்கு அவசியமான கருவிகளும் பொருட்களும் அறிமுகமா கவும் - எளிய முறையில் உருவாக்கவும் உள்ள செயல்பாடுகளே இந்த அலகில் கொடுக்கப்பட்டுள்ளன. வீடு, கல்விக்கூடம், சுற்றுப்புறம் எனும் இடங்களைச் சுத்தமாகப் பாதுகாக்கும் மனப்பான்மை குழந்தைகளிடம் உண்டாகிறது.

**LO** : உ.உ.1 சுகாதாரச் செயல்பாடுகளுக்கு அவசியமான பொருட்களை உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு** : குப்பைக் கூடை உருவாக்கம் (ஒறிகாம முறை)

**செயல்முறை** :


- கலந்துரையாடல் - பல்வகைக் குப்பைக் கூடைகள் தொடர்பாக, குப்பைகள் எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன?
- அவசியமான பொருட்களின் ஒருங்கிணைப்பு
- குப்பைக் கூடை உருவாக்கம்

## செயல்பாட்டின் முறை : தனிநபர் செயல்பாடு

## பொருட்கள் : பழைய பத்திரிகைத்தாள்

## உருவாக்கும் முறை

- ஒரு பத்திரிகைத்தாளின் முழுப் பக்கத்தையும் எடுக்கின்றனர்.
- அதனை நேர்பாதியாக மடிக்கின்றனர்.
- கோணுகளை நடுக்கோட்டினை நோக்கி மடிக்கின்றனர். இந்த மடிப்புகளைக் காகிதங்களை உயர்த்தி உள்ளே மடக்குகின்றனர்.
- இரு பக்கங்களையும் படத்தில் காண்பதுபோன்று நடுக்கோடினை நோக்கி மடக் குகின்றனர்.
- படம்e இல் காண்பது போன்று அடிப்பகுதி படி போன்று மேல் நோக்கி மடிக்கப்படுகிறது (இரு பக்கங்களிலும்) இந்த மடக்கியபகுதி படம் (7) இல் காண்பது போன்று இருபக்கங்களிலும் மீண்டும் மேல் நோக்கி மடக்கப்படுகிறது.
- முனைப்பகுதியைப் படத்தில் காண்பது போன்று கீழ்நோக்கி மடிக்கின்றனர்.
- திருப்பிப் பிடித்து முனைப்பகுதியைத் தரையில் நன்றாக அழுத்தி கைகளால் பெட்டிவடிவில் ஆக்குகின்றனர்.



- படம் இல் காண்பது போன்று ஒரு சதுரப்பெட்டியினை உண்டாக்குகின்றனர்.

## மதிப்பீடு

- படைப்பு
- மனப்பான்மை
- உருவாக்கத் திறன்

## அடைவுகள்

- தசை விரிவு
- எண் அறிவு
- சரி சரி தன்மை, நுட்பப்பார்வை
- வகுப்பறையும் சுற்றுப்புறமும் / வீடும் சுற்றுப்புறமும் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற உணர்வினை வளரச் செய்ய இயல்கிறது.

## மண்டலம் 3 - உடை

துணி வகைகளில் அலங்காரப் படங்களைப் பதிக்கின்ற செயல்பாடுகள் குழந்தை களிடம் அழகுணர்வினை வளர்க்கிறது. இயற்கையில் காணப்படும் பொருட்களில் இயல் பாகவே அலங்கார வடிவங்கள் உண்டு. இத்தகைய அலங்கார வடிவங்களைப் பல்வேறு வண்ணங்களால் துணிவகைகளில் அச்சு செய்யும் முறையே இந்த அலகில் தரப்பட்டுள்ளது. இயற்கை சார்ந்த பொருட்களில் காணப்படும் அலங்காரச் சிறப்புத் தன்மைமிக்க அலங்காரங்களைச் சுவைக்கவும் நிறங்களின் அளவினைப் பற்றிய தெளிவினை ஏற்படுத்திவும் இந்தச் செயல்பாடுகள் துணைபுரிகின்றன.

**LO** : 2.3.1 கைக்குட்டைகளில் துணிச் சாயத்தினால் அச்சு ஏற்றி மனம் கவரும் முறையில் உருவாக்குகின்றனர்.

## கருத்துகள் கருத்தாடல்கள்

- இயற்கை சார்ந்த பொருட்களின் இயல்பான வடிவங்களின் வாய்ப்புகளை அறிந்து கொள்கின்றனர்.
- காய்கறிகளின் வடிவங்களை அச்சு செய்ய முடிந்த துணிவகைகளைத் தெரிந்து கொள்கின்றனர்.

- வண்ணங்களையும் வண்ணங்களின் கலவையினையும் சேர்க்கையினையும் புரிந்து கொள்கின்றனர்.
- பயன்பாட்டின் தரத்தினை அறிந்து கொள்கின்றனர்.
- கற்பனை வளர்ச்சியும் இரசனையும்

**செயல்பாடு** : கைக்குட்டையில் காய்கறி அச்சேற்றுதல்

**செயல்முறை** :
- கலந்துரையாடல் - காய்கறியின் அச்சேற்றும் முறை பற்றி
- பொருட்களை ஒருங்கிணைத்தல்
- காய்கறி அச்சேற்றுதல்

**செயல்பாட்டுமுறை** : குழுச்செயல்பாடு

**பொருட்கள்** :
- பருத்தித் துணி
- கத்தி
- துணிச்சாயம் (பலவண்ணங்களில்)
- பல்வகைக் காய்கறிகள்
- வாழைத்தண்டு, சேம்புத்தண்டு
- பரந்த பாத்திரம்
- செய்தித்தாள், ஸ்பாஞ்ச்

## செயல்பாட்டின் முறை
## செயல்பாட்டின் வரிசை

- பொருத்தமான காய்கறிகளைத் தேர்வு செய்து (எகா. வெண்டைக்காய், பீன்ஸ், சேம்புத்தண்டு) காய்கறிகளின் வடிவத்துக்கு ஏற்ப வெட்டியெடுக்கின்றனர். வெட்டிய பகுதியைக் காகிதத்திலோ பயனில்லாத் துணியிலோ தேய்த்து காய்கறியின் கறையினை அகற்றுகின்றனர். அச்சு செய்ய நினைக்கும் துணியை சமதளமான இடத்தில் பத்திரிகையினை விரித்துப் போட்டு பின்னர் அதன் மேலே சுருக்கம் ஏற்படாதவாறு விரிக்கின்றனர். பரந்த பாத்திரத்தில் ஸ்பாஞ்ச் வைத்ததன் பின்னர் அதில் துணிச்சாயத்தை கொஞ்சம் ஊற்றி அவசியமான சாயத்தினை வெட்டி யெடுத்த காய்கறியில் பதியுமாறு மூழ்கச் செய்து எடுத்து அச்சேற்றுகின்றனர்.

## அடைவுகள்

- சுயமாக உருவாக்கிய ஆடைகளைப் பயன்படுத்தும்போது சுயமதிப்புணர்வு வளர்கிறது.

- சுயச் சார்பு வளர்கிறது.
- அளவு, நிறம் என்பன பற்றிய கருத்தாக்கம்
- சுத்தமாகவும் அழகாகவும் செயல்படும் பழக்கம் ஏற்படுகிறது.
- தொடர் செயல்பாடுகள் வாயிலாகக் கூடுதலான வாய்ப்புகள் கண்டுபிடிக்கப் படுகின்றன.




# பொருட்கள்

A வாழை இலையின் தண்டு

B வெண்டைக்காய்

C பீன்ஸ்

D கோவைக்காய்

# தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- பங்களிப்பு

# மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

பல்வேறு உயிரினங்களின் உறைவடிங்களைக் குழந்தைகள் கண்டுபிடித்துள்ளனர். (பறவைகளின் கூடுகள், எறும்புக்கூடு, மரங்களின் மேலேயுள்ள கூடுகள், பல்வகை குடிகள், வீடுகள்..... ) அவற்றின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறிவதுடன் அவற்றின் படங்களையும் திரட்டி ஆல்பம் தயாராக்கி அதில் படங்களை ஒட்டிப் பாதுகாக்கவும் வேண்டும்.

**LO** : ௨.4.1 பல்வகை வீடுகளின் படங்களைத் திரட்டி ஆல்பம் தயாரிக் கின்றனர்.

**செயல்பாடு 1** : ஆல்பம் தயாரித்தல்

**செயல்முறை** :
- கலந்துரையாடல் - பல்வேறு உயிரினங்களின் உறை விடங்கள், சிறப்புத் தன்மைகள்
- படங்களைச் சேகரித்தல்
- ஆல்பம் தயாரித்தல் (அட்டைக் காகிதம் பயன்படுத்தி) ஆசிரியரின் உதவியுடன்
- படங்களை ஆல்பத்தில் ஒட்டுதல்
- கண்காட்சி


**செயல்பாட்டின் முறை** : குழுச்செயல்பாடு

**பொருட்கள்** :
- வீடுகளின் பிற வாழிடங்களின் படங்கள்
- அட்டைக் காகிதம், நூல், காகிதப்பஞ்சு
- பசை

## உருவாக்கும் முறை

- குழு உறுப்பினர்கள் கொண்டு வந்த படங்கள் வகுப்பில் சேகரிக்கப்படுகின்றன.
- ஓர் அட்டைக் காகிதத்தை நேராக மூன்றாக மடக்குகின்றனர் (படம் a)
- மடித்தது வெட்டியெடுக்கப்படுகிறது (படம் b)
- இவை மூன்று சேர்த்து வைத்து 4 சமப் பகுதிகளாக ஆக்கி மடக்கப்படுகின்றன.
- இது மீண்டும் ஸிக்ஸாக் ஆக மடிக்கப்படுகிறது (படம் e)
- மடக்கியதைச் சேர்த்து வைத்து நீளம் உள்ள ஒரு பக்கத்தில் பஞ்ச் செய்யப்படுகிறது. (படம் d)

- நூலினால் கட்டப்படுகிறது. நேராக உள்ள மறுபக்கம் கத்தியால் வெட்டப்படுகிறது (படம் e) ஆல்பம் தயாராகி விட்டது.
- சேகரித்துள்ள படங்கள் (வாழிடங்களின்) பசை தேய்த்து ஆல்பத்தில் ஒட்டப்படுகின்றன.
- பட ஆல்பத்தின் கண்காட்சி



## மதிப்பீடு

- செயல்பாட்டில் பங்களிப்பு
- கருத்தாக்கங்கள்
- படைப்பு

## செயல்பாடு 2 - விளையாட்டு வீடுகளின் உருவாக்கம்


குழந்தைகள் விளையாட்டு வீடுகள் கட்டுவதில் ஆர்வம் உள்ளவர்கள். பல்வகை வீடுகளின் வடிவங்களையும் சிறப்புத்தன்மைகளையும் அவர்கள் உற்றுநோக்கியுள்ளனர். குழந்தைகளின் கற்பனையில் தோன்றும் வீடுகளின் மாதிரிகளைக் காகிதங்களால் உருவாக்கும் செயல்பாடுகளே இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. இவை குழந்தைகளின் கற்பனையையும் சிந்தனையையும் அழகுணர்வினையும் வளரச் செய்வதற்குத் இவை துணை புரிகின்றன.

## கருத்துகள், திறன்கள் :

- பல்வகை வீடுகளை உருவாக்குகின்றனா்
- வீடுகளின் சிறப்புத்தன்மைகளை அறிந்து கொள்கின்றனர்.
- பல்வேறு கணித வடிவங்களைப் பயன்படுத்தி வீடுகளின் மாதிரிகளை உருவாக்கு கின்றனர்.

## உருவாக்கும் முறை

- ஒரு ஏ4 காகிதம் எடுத்து அதன் அகலத்தின் பக்கத்தில் படம் (1) இல் காண்பது போன்று கோண்கள் உள்ளே சமமாக மடக்கி வைக்கப்படுகின்றன.
- காகிதத்தை வெட்டியெடுத்து வீட்டின் மேற்கூரை வடிவில் ஓடுகளின் மாதிரியில் படம் (2) இல் காண்பது போன்று வரையப்படுகிறது.
- காகிதத்தின் அடிப்பகுதியினைச் சிறிது மடக்கி படம் (3) இல் காண்பது போன்று மடிப்பினைப் போட்டதன் பின்னர் மடிப்பு வழியாக ஸ்கெட்ச் பேனா பயன்படுத்தி வரையவும் கட்டிடத்தின் தரைக்குப் பொருத்தமான வடிவத்தை அளிக்கலாம் படம் (4)
- ஜன்னலினுடையவும் வாசலினுடையவும் படங்கள் வரைந்து செயல்பாட்டினை முழுமைப்படுத்தலாம்.



## கற்றல் அடைவுகள்

- பல்வகை வீடுகளை உற்றுநோக்குகின்றனர்.
- கணித வடிவங்களைப் பயன்படுத்தி வீடுகளை உருவாக்கலாம் எனக் கண்டுபிடிக் கின்றனர்.
- உற்றுநோக்கல் திறன்
- வீடுகளின் சிறப்பியல்புகள், தனித்தன்மைகள் என்பன அறிகின்றனர்.

# மண்டலம் 5 - பொழுதுபோக்கு

கணிமண்ணால் பல்வேறு சிற்பங்களும் மாதிரிகளும் உருவாக்கப்படுகின்றன. இதற்குப் பதிலாக மைதாமாவு, உப்பு என்பன பயன்படுத்தி குழந்தைகளுக்கு அறிமுகம் உள்ளதும் சுவை மிக்கதுமான பலகாரங்களின், பழங்களின் வடிவங்களைக் குழந்தைகள் தயாராக்குகின்ற செயல்பாடுகளே இதில் உள்ளன. இயற்கையை உற்றுநோக்கும் உணர்வும் அவசியமான பொருட்களின் அளவுவிகிதங்கள் சரியான தன்மை எனும் செயல்முறைத்திறன்களும் குழந்தைகளிடம் வளரச் செய்வதற்கு இயல்கிறது. கைவிரல்களின் தசைஇயக்கம். மூளை வளர்ச்சி, கற்பனைத் திறன் போன்றவற்றுக்குத் துணைபுரிகிறது. சமையலறைக் களிமண் பயன்படுத்தியுள்ள செயல்பாடு. பல்வகை விநோதப் பொருட்களைச் சமையலறைக் களிமண்ணால் உருவாக்கலாம்.

**LO** : 2.5.1 சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு விநோதப் பொருட்களை உருவாக்குகின்றனர்.

## கருத்துகள், திறன்கள்:

- வட்டாரம் சார்ந்ததும் அல்லாததுமான பல்வகைப் பலகாரங்கள் / பழங்கள் என்பனவற்றின் வடிவங்கள் பற்றியும் சிறப்பியல்புகள் பற்றியும் அறிந்து கொள்கின்னர்.
- மென்மைத்தன்மையுடைய உணவுப்பொருட்களைத் தெரிந்து கொள்கின்றனர்.
- உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்காதப் பொருட்களைப் பயன்படுத்தும் செயல்பாடுகள் பற்றிய கருத்தாக்கங்கள் உருவாகின்றன.
- உடலின் பல்வேறு தசை இயக்கங்களுக்கு உதவுகின்றன.

## செயல்முறை :

- சமையலறைக் களிமண்ணால் பல்வகைப் பலகாரங்களின், பழவகைகளின் வடிவங்கள் வடிவமைக்கப்படுகின்றன.
- மாதிரிகளை அறிமுகப்படுத்தி உருவாக்கலாம்.
- பழவகைகள் பற்றிய கலந்துரையாடல்


## செயல்பாட்டின் முறை :

- அவசியத்திற்கு ஏற்ப மைதா மாவினை எடுக்கவும். அதற்கு ஏற்றவாறு உப்புத் தூளும் சேர்த்து பிசையவும். தண்ணீர் தெளித்து உரட்டிக்கு மாவு குழைக்கும் பருவத்தில் குழைத்து எடுக்கவும். (தண்ணீர் கூடிப் போகாது புட்டுக்கு மாவு நனைப்பது போன்று கையில் வைத்து அழுத்தி எடுப்பதே நன்று)

- ஒவ்வொரு மாதிரிக்கு அவசியமான குழைத்த மாவினை எடுத்து அதற்குப் பொருத்தமான உணவுச் சாயம் (பிரியாணி நிறம்) சேர்த்து மீண்டும் குழைத்துப் பயன்படுத்தலாம்.
- வெவ்வேறு மாதிரிகளுக்குச் சேர்கின்ற நிறங்களைத் தேர்வு செய்து சேர்த்து பல்வேறு மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## பொருட்கள் :

- மைதா
- உப்பு - தண்ணீர்
- நிறம் (உணவுச் சாயம்)



## கற்றல் அடைவுகள்

- தசை இயக்கத்திற்கு உதவும் செயல்பாடுகள்
- பல்வகைக் காய்கறிகள், பழவகைகள் என்பனவற்றின் பல்வகை வடிவங்களைப் புரிந்து கொள்கின்றனர்.

**LO : 2.5.2** எளிய ஒறிகாமி வடிவங்களை உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு :** ஒறிகாமி வடிவம் - கைப்பொம்மைகள்


**செயல்முறை :**
- கலந்துரையாடல் - ஒறிகாமி வடிவங்களை உருவாக்கும் முறை, கைப்பொம்மைகளின் பயன்பாடு
- ஒறிகாமி வடிவத்தை உருவாக்குதல்
- கண்காட்சி, மதிப்பீடு

**செயல்பாட்டின் முறை :** தனிநபர் செயல்பாடு

**பொருட்கள் :**
- ஒரு துண்டுக்காகிதம் (புத்தகக் காகிதத்தின் அளவு)
- ஸ்கெட்ச் பேனா
- பசை

## உருவாகும் கட்டங்கள்

- காகிதம் சதுரவடிவத்தில் வெட்டியெடுக்கப்படுகிறது ( a))
- கோணோடு கோண் மடக்கப்படுகிறது (b)
- படம் (c)இல் காண்பது போன்று இரு முனைகளிலும் ஒரே அளவில் உள்ளே மடக்கி வைக்கப்படுகிறது.
- படம் (d)இல் காண்பது போன்று அடிப்பகுதி இரண்டும் உள்ளே மடக்கி வைக்கப்படுகிறது.
- படம் (e) இல் காண்பது போன்று ஸ்கெட்ச் பேனா கொண்டோ, சாதாரண பேனா கொண்டோ வரையப்படுகிறது.
- கறுத்த நேர்கோடு உள்ள பகுதியில் மட்டும் உள்ளே பசை தேய்த்து ஒட்டப்படு கிறது.
- படம் (7) இல் காண்பது போன்று சுட்டுவிரல் நீட்டி பொம்மையை இயக்கலாம்.



இதுபோன்று பல்வகை கைப்பொம்மைகளை உருவாக்கி பொம்மலாட்டம் நிகழ்த்தலாம்.

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- செயல்பாட்டுத்திறன்

## மண்டலம் 6 - சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

அன்றாட வாழ்வில் மிகவும் பயன்படுவன ஸ்டேசனரி பொருட்களாகும். காகிதக் கூடுகள் / பைகள், மருந்துக்கூடுகள் என்பனவற்றை மிக எளிய முறையில் குழந்தைகளுக்கு உருவாக்கலாம்.

**LO** : உ.6.1 காகிதத்தைப் பயன்படுத்திக் கூடுகள் செய்கின்றனர்.

**செயல்பாடு** : காகிதக் கூடு உருவாக்குதல்


**செயல்முறை** :
- கலந்துரையாடல் - பயன்படும் கூடுகள் குறித்து பல்வேறு பயன்பாடுகள் உருவாக்கும் முறை
- பொருட்களின் ஒருங்கிணைப்பு
- உருவாக்கம்

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** :
- புத்தகத்தின் ஒரு தாள் அளவிலான காகிதம்
- பசை, கத்தரிக்கோல்

## உருவாக்கும் முறை

- புத்தகத்தின் ஒரு தாள் அளவிலான காகிதத்தால் கூடின் டெம்ப்லேட்டினை அசிரியர் உருவாக்குகிறார்.
- டெம்ப்லேட்டினைப் பயன்படுத்தி மொத்தக் குழந்தைகளும் ஒவ்வொரு கூடுக்கு உரிய காகிதத்தை வெட்டியெடுக்கின்றனர்.
- ஒவ்வொன்று வீதம் குழந்தைகளுக்கு அளித்து ஒட்டவேண்டிய இடத்தை மடக்கி பசையினால் குழந்தைகள் ஒட்டுகின்றனர்.
- படைப்புக் கண்காட்சி, சுயமதிப்பீடு, ஒருவருக்கொருவர் மதிப்பீடு



## மதிப்பீடு

- படைப்பு
- பங்களிப்பு

# செயல்வழிக்கல்விச் செயல்பாடுகள்

## வகுப்பு 3

# செயல்வழிக்கல்வி பாடஏற்பாடு

## பாடத்திட்ட வலைச்சட்டம்

### மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.1.1 | வட்டாரப் பொருட்களைப் பயன்படுத்தி செலவு குறைந்த மேன்மை மிக்க எளிய உணவு வகைகள் எளிய பானங்கள் தயாரிக்கின்றனர். | பல்வகை எளிய உணவு வகைகள்<br>வட்டாரப் பொருட்களால் தயாரிக்கின்ற எளிய பானங்கள் என்பன தயாரிக்கும் முறைகளை அறிந்து கொள்கின்றனர். | கலந்துரையாடல்<br>எளிய உணவு, பானியம் என்பன தயாராக்குவதற்குத் திட்டமிடுதல்<br>குழுவாகவும் தனிநபராகவும் தயாரித்தல் | கலந்துரையாடலில் பங்களிப்பு செயல்பாட்டின் நிலைகள் படைப்பு மதிப்பீடு |
| 3.1.2 | உண்பதற்குப் பயன்படுகின்ற தானிய வித்துகளைக் கண்டுபிடித்து அவற்றை உண்பதற்கு உரியதாக மாற்றுகின்றனர். | உண்பதற்குப் பயன்படும் வித்துகளை கண்டுபிடித் தல். | திரட்டுதல், வகைப்படுத்துதல் | பங்களிப்பு<br>படைப்பு |
| 3.1.3 | காய்கறித்தோட்டத்திற்குத் தேவையான வித்துகளை முளைக்க வைக்கின்றனர். | அறிவியல் முறை சார்ந்த தாவர உற்பத்தி முறையினை அறிந்து கொள்ளுதல். | வித்துகளைச் சேகரித்தல்<br>வித்துகளை முளைக்க வைப்பதற்கு உரிய கருவிகளின் சேகரிப்பு | உற்றுநோக்கல்<br>பங்களிப்பு<br>படைப்புகள் |

### மண்டலம் 2 - உடல்நலமும், சுகாதாரமும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.2.1 | சுகாதாரச் செயல்பாடுகளுக்குத் தேவையான கருவிகளை உருவாக்குகின்றனர். (தூசிதட்டி, குப்பைக் கூடை) | தனிநபர் சுகாதாரம், சுற்றுப்புறச் சுகாதாரம், சமூகச் சுகாதாரம் சுகாதார முறைகள், சுகாதார ஒழுக்கங்கள் என்பன பற்றிய விழிப்புணர்வு | பயனில்லாப் பொருட்களைச் சேகரித்தல் | பங்களிப்பு<br>படைப்பு |

### மண்டலம் 3 - உடை

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.3.1 | பல்வேறு காகிதங்களைப் பயன்படுத்தி உடைகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர். | பல்வகை ஆடை வடிவங்களை அறிந்து கொள்கின்றனர்.<br>பொருத்தமான உடைகளைத் தெரிந்து கொள்கின்றனர். | அளவு, கருவிகள் என்பன கையாளுதல்<br>பல்வேறு உடைகளைப் பற்றிய கலந்துரையாடல். | உற்றுநோக்கல்<br>படைப்பு |

### மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.4.1 | பல்வகை உயிரினங்கள் வசிக்கும் இடங்களின் படங்களைச் சேகரிக்கின்றனர். படங்கள் வரைகின்றனர். மாதிரிகளை உருவாக்குகின்றனர். | கணித வடிவங்கள் பற்றிய ஆரம்ப அறிவு, அழகுணர்வு, இயற்கையை நெருங்கி அறிந்து கொள்ளல், பல்வகை உயிரினங்கள் வசிக்கும் இடங்களின் படங்கள், வண்ணங்கள் / நிறங்கள் குறித்துள்ள கருத்தாக்கம். | வாழிடங்களை உற்று நோக்குதல் படங்களைத் திரட்டுதல் திரட்டிய படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் / நிறம் தீட்டுதல் | உற்றுநோக்கல்<br>பங்களிப்பு<br>படைப்பு |

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.5.1 | ஒறிகாமி வடிவங்களை (இயக்குவது உட்பட) உருவாக்குகின்றனர். | ஒறிகாமியின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்கின்றனர்.<br>பல்வேறு வடிவங்கள்<br>அளவுகள், துல்லியம், நுட்பம் | கலந்துரையாடல் – காகிதம் மடக்குதல் | படைப்பு |

## மண்டலம் 6 – சேவை பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 3.6.1 | அலங்காரப் பொருட்களை உருவாக்குகின்றனர். | பல்வகை அலங்காரப் பொருட்கள் அவசியமான பொருட்கள்<br>வெட்டும் கருவிகளைக் கையாளுதல்<br>அளவு<br>கண்காட்சி | கலந்துரையாடல்<br>பொருட்களின் ஒருங்கிணைப்பு<br>செயல்பாடு | பங்களிப்பு<br>படைப்பு |

# செயல்பாடுகள்

## மண்டலம் 1 - உணவும் வேளாண்மையும்

**LO** : உ.1.உ காய்கறித்தோட்டத்திற்கு அவசியமான வித்துகளை முளைக்க வைக்கின்றனர்.

**செயல்பாடு** : வித்துகளை முளைக்க வைத்தல்

**செய்முறை** :

- கலந்துரையாடல் - உண்பதற்கு உரிய வித்துகள் யாவை?
- வித்துகளை முளைக்க வைத்தல்

**செயல்பாட்டின் முறை** : குழுச் செயல்பாடு

**பொருட்கள்** :

- எறிந்துவிடும் தம்ளர் (ஊடுருவிப் பார்க்கக்கூடிய அல்லது ஒரு லிட்டர் மினரல் வாட்டர் வருகின்ற குப்பியின் அடிப்பகுதியிலிருந்து 6 செ.மீ. உயரத்தில் வெட்டியெடுத்தது.
- பத்திரிகை, பஞ்சு அவசியத்திற்கு ஏற்ப
- மரத்தூள், துணி, பஞ்சு இவற்றில் ஏதாவது ஒன்று
- பயறுவிதைகள்

## செயல்பாட்டின் வரிசை

- தயாராக்கிய தம்ளரின் உட்பக்கத்தில் சேர்ந்திருக் குமாறு ஒரு துண்டுக்காகிதத்தை வெட்டியெடுத்து சுருட்டி வைக்கவும்.
- சுருட்டி வைத்த காகிதத்தின் உட்பக்கத்தில் துணியோ, மரத்தூளோ நனைத்த பின் நிறைக்கவும்.
- இதன் பின்னர்பயறு தண்ணீரில் ஊறவைத்து பயறு விதைகளை ஒவ்வொரு நாள் வித்தியாசத்தில் காகிதத்திற்கும் தம்ளருக்கும் இடையில் போடவும். இதனை உற்றுநோக்கவும். மரத்தூளில் ஈரம் நிற்குமாறு கவனிக்க வேண்டும்.



## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- பங்களிப்பு

## கற்றல் அடைவுகள்

- வித்துகள் முளைக்கின்ற பல நிலைகளைக் குழந்தைகள் நேரடியாகக் கண்டு புரிந்து கொள்கின்றனர்.

## நாட்டுப்புற அறிவு

- வித்துகளை எறும்புகள் தின்று விடாமலிருக்க மஞ்சள்தூள் தூவப்படுகிறது.

## மண்டலம் 2 - உடல்நலமும் பாதுகாப்பும்

சுகாதாரச் செயல்பாடுகளுக்காகப் பல்வேறு கருவிகள் அறிமுகமாவதுடன் அவற்றின் பயன்களையும் புரிந்து கொள்கின்றனர். மிகப் பயன்தருவதும் செலவு குறைந்ததும் சுற்றுப்புறங்களில் நின்று கிடைப்பதுமான பொருட்களால் ஒரு தூசி தட்டியை உருவாக்குவதே இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

**LO:** 3.2.1 சுகாதாரச் செயல்பாடுகளுக்கு அவசியமான கருவிகளை உருவாக்கு கின்றனர்.

**செயல்பாடு** : தூசி தட்டியை உருவாக்குதல்

**செயல்முறை** :
- கலந்துரையாடல் - நம் சுற்றுப்புறங்களில் உள்ள மறுபயன்பாட்டிற்குத் தகுதியான பொருட்களை எவ்வாறு பயன்தருபவையாக உருப் பெறச் செய்யலாம்.
- சேகரிப்பு

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** :
- காலியான பிளாஸ்டிக் குப்பி (ஆப்பிள் சாறு வருகின்ற)
- பழைய குடைத்துணி, போர்வை
- கத்தரிக்கோல்
- நூல்

# செயல்பாட்டின் வரிசை

- ஆப்பிள் சாறு வரும் குப்பி சேகரிக்கப்படுகிறது. படம் (1)
- படத்தில் காண்பது போன்று வெட்டி மாற்றவும்
- பழைய குடைத்துணியோ பழைய துணியோ (போர்வை, லுங்கி) எடுத்து 1 செ.மீ. அகலத்திலும் 50 செ.மீ நீளத்திலும் தேவைக்கு ஏற்ப வெட்டி யெடுத்துதுண்டுகளைச் சேர்த்து வைத்து நடுப்பகுதியினை நூலினால் இறுகக்கட்டி அதன் பின்னர் குப்பி யின் வெட்டிமாற்றிய பகுதியின் வாயிலாக நூலினை மூடிப் பகுதியில் இழுத் தெடுத்து கட்டுப்போட்ட பகுதியைக் குப்பியின் கழுத்து வரையில் கொண்டு வரவும். நூலின் முனைப் பகுதியினை வெளியில் சேர்த்துப் பிடித்து மூடி நன்றாக இறுக்கப் படுகிறது. தூசிதட்டியைப் பயன்படுத்தலாம்.



## கற்றல் அடைவுகள்

- சுயமாக படைப்பினை உருவாக்கியதால் தன்னம்பிக்கை வளர்கிறது.
- சுகாதார உணர்வு தோன்றுகிறது.

# மண்டலம் 3 - உடை

நம் சுற்றுப்புறங்களில் பல்வேறு உடைகளும் உடைகள் அணியும் முறைகளும் உள்ளன என்று அறிவதுடன் காகிதங்களைப் பயன்படுத்தி இவற்றின் வேறுபட்ட மாதிரிகளை உருவாக்குதலே இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளது.

**LO : 3.3.1** பல்வேறு காகிதங்களைப் பயன்படுத்தி ஆடைகளின் மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன.

**பொருட்கள் :** வைக்கோல் பலகை ,அட்டைக் காகிதங்கள், இதழ்களின் காகிதங்கள், பத்திரிகை, பசை, குழந்தைகளின் படங்கள், கத்தரிக்கோல்


## உள்ளடக்கம்

- பல்வகை ஆடை வடிவங்களை அறிந்து கொள்கின்றனர்
- பாலின வேறுபாடுக்கு ஏற்ப வேறுபட்ட உடைகள் உள்ளன என்று அறிந்து கொள்கின்றனர்.

## செயல்பாடு - காகிதத்தைப் பயன்படுத்தி ஆடைகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர்.

## செயல்பாட்டின் வரிசை

சிலுவை வடிவில் அட்டைப் பெட்டித் துண்டுகளை வெட்டியெடுக்கவும் படம் (1) படம்(2) இல் காண்பது போன்று ஆண்குழந்தையினுடையவும் பெண் குழந்தையினுடையவும் தலைகளின் படங்களைப் பத்திரிகைகளிலிருந்தோ இதழ்களிலிருந்தோ வெட்டியெடுத்து படம் (3) இல் காண்பது போன்று ஒட்டவும். இதழ்களின் காகிதங்கள், பத்திரிகையின் காகிதங்கள் என்பன பயன்படுத்தி படம் (4) இல் காண்பது போன்று இரு மடக்காக ஆக்கி படம் (5) a,b,c,d இல் காண்பது போன்று வெட்டியெடுக்கவும். இதனைக் குழந்தைகள் முன்னர் தயாராக்கிய வடிவத்தில் ஒட்டினால் பல்வகை ஆடைகளாக மாறுகின்றன. ஆண் குழந்தைகளின் படத்தில் அதற்குப் பொருந்துமாறு ஆடைகள் தயாராக்கினால் ஆண்குழந்தைகளினுடையவும் பெண் குழந்தைகளினுடையவும் ஆடைகளின் வேறுபாடுகளை அறிந்து கொள்ளலாம்.



## கற்றல் அடைவுகள்

- வெவ்வேறு உடைகள் வேறுபட்ட காலங்களில் உபயோகிக்கப்படுகின்றன என்று தெரிந்து கொள்கின்றனர்.
- வேறுபட்ட பணிகளுக்குப் பொருந்துமாறு ஆடைகள் உள்ளன என்றும் புரிந்து கொள்கின்றனர்.

## மண்டலம் 4 - உறைவிடம்/வாழிடம்

பறவை, விலங்கு, மனிதர்கள் என வெவ்வேறாக உறைவிடங்கள் உள்ளன என்பது பற்றி அறிவதுடன் அவற்றை உருவாக்குவதற்கு உரிய கச்சாப்பொருட்கள் பற்றியும் தெரிந்து கொள்கின்றனர். இவற்றில் சிலவற்றின் மாதிரிகளைச் செய்வதன் வாயிலாகக் குழந்தைகள் இயற்கையினை நன்கு புரிந்து அறிவதுடன் உயிரினங்களிடம் நட்புணர்வினை வளரச் செய்தலையும் இந்த அலகு இலக்காகக் கொண்டுள்ளது.

**LO** : 3.4.1 பல்வேறு உயிரினங்கள் வசிக்கும் இடங்களின் படங்கள் சேகரிக்கப் படுகின்றன. படங்கள் வரையப்படுகின்றன. மாதிரிகள் உருவாக்கப்படு கின்றன.

**செயல்பாடு** : தூக்கணாம் குருவிக்கூடு உருவாக்குதல்

**செயல்முறை** :
- கலந்துரையாடல் - உறைவிடம் எதற்காக? மனிதர்களுக்கு மட்டுமா உறைவிடம்?
- மாதிரி உருவாக்குதல்


**செயல்பாட்டின் முறை** : தனிநபராக

**பொருட்கள்** :
- ஒரு லிட்டர் மினரல் தண்ணீர் குப்பி
- சகிரி
- நூல்
- கத்தரிக்கோல், கத்தி

## உள்ளடக்கம்

- இயற்கையில் உள்ள உயிரினங்கள் வசிக்கும் இடங்கள் பற்றி நன்கு அறிய இயல்கிறது.
- சக உயிரிகளிடம் நட்புணர்வு வளர்கிறது.
- வசிக்கும் இடங்களின் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## செயல்பாட்டின் வரிசை



குப்பியை இரண்டாக வெட்டவும் படம் (1) படம் (2) இல் காண்பது போன்று ஒன்றின் உள்ளே வெட்டியெடுத்த இரண்டாவது பகுதியை உள்ளேவிட்டு குப்பியின் நீளத்தைக் குறைக்கவும் குப்பியின் நடுப் பகுதியில் கத்தரிக்கோலைப் பயன்படுத்தி குருவிக்கு உள்ளே செல்ல முடிந்தவாறு வாசல உண்டாக்கவும். படம் (3) இல் காண்பது போன்று சகிரியைக் குப்பியின் மேல் கட்டி இறுக்கி வாசலின் பகுதியைக் கத்தரிக் கோலால் உபயோகித்து சுத்தமாக்கவும்.

## கற்றல் அடைவுகள்


- உற்றுநோக்கல் திறன்
- உயிரினங்களிடம் நட்புணர்வு
- இயற்கையை நன்கு அறிதல்

## செயல்பாடு 2 - வீட்டின் மாதிரி உருவாக்கம்

## பொருட்கள் : 

- அட்டைக்காகிதம், கத்தி, ஸ்கெட்ச் பேனா

## செயல்பாட்டின் வரிசை




- சதுரக் காகிதத்தை எடுத்து கோணோடு கோண் மடக்கப்படு கிறது. (படம் A) முக்கோண வடிவில் கிடைக்கிறது (படம் B) இது போன்று இரண்டினை உருவாக்கி முக்கோ ணம் நேர்பாதியாக மடக்கி வைக்கப்படுகிறது. (படம் C)
- உருவாக்கிய இரு முக்கோணங் களில் ஒன்றின் உள்ளே மற்றொன்று செலுத்தப்படுகிறது. (படம் E)

- ஒரு நீள் சதுரக் காகிதம் எடுத்து நேர் பாதியை மடக்கி (படம் F) முன்னர் உருவாக்கிய முக்கோணத்தின் (படம் D) மேலே கவிழ்த்து வைக்கப்படுகிறது.
- படம் (G)இல் காண்பது போன்று வாசல், ஜன்னல் என்பன வரைந்து அழகுபடுத்த வேண்டும்.

## குறிப்பு

கூடுகளை உருவாக்கும் உயிரிகள் குறித்தும் கூடுகளை உருவாக்காத உயிரிகள் குறித்தும் கலந்துரையாடல் நிகழ்த்தப்படுகிறது. குழந்தைகள் பல்வகை கூடுகளைப் பத்திரிகைகளிலிருந்தும் இதழ்களிலிருந்தும் வெட்டியெடுத்து சேகரிக்கின்றனர். இவற்றை உபயோகித்து ஆல்பம் தயாராக்கலாம்.

காகிதங்கள், தீப்பெட்டி, சிறுபெட்டிகள் என்பனவற்றைப் பயன்படுத்திப் பல்வகை வீடுகளின் மாதிரிகளை உருவாக்குகின்றனர். அவற்றிற்கு வண்ணம் தீட்டவோ பொருந்தும் நிறத்திலான காகிதத்தை ஒட்டவோ செய்யலாம்.

## தரம் நிர்ணயித்தல்

- பல்வகை வீடுகள் பற்றிய கருத்தாக்கங்கள்
- படைப்பு

## மண்டலம் 5 - பொழுதுபோக்கு

The art of paper folding- origami அறிமுகமாகிறது. எந்தக் கருவியினையும் பயன்படுத்தாது காகிதத்தை மடக்கி ஒறிகாமி வடிவங்களை உருவாக்குகின்றனர். இயங்குகின்ற ஒறிகாமி வடிவத்தின் சில மாதிரிகள் இந்தப் பகுதியில் அறிமுகமாகின்றன.

**LO** : **3.5.1.** ஒறிகாமி வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. (இயங்குவன உட்பட)

**செயல்பாடு** : • இயங்கும் ஒறிகாமி வடிவங்களை உருவாக்குதல்

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** :
- ஏ4 காகிதம்
- பசை


## உள்ளடக்கம்

- கணித வடிவங்கள் அறிமுகமாகின்றன.
- கருவிகளைப் பயன்படுத்தாமல் காகிதத்தை மடக்கி மட்டுமே படைப்புகளைத் தயாரிக்கின்றனர்.

## செயல்பாட்டின் வரிசை

ஏ4 காகிதத்திலிருந்து இயன்ற அளவில் ஒரு சதுரம் வெட்டியெடுக்கப்படுகிறது. படம் (1) இல் காண்பதுபோன்ற A,B வழியாக இரண்டாக மடக்கி வைக்கப்படுகிறது. படம் (3) இந்த வடிவத்தை இரண்டாக மடக்கவும் (உள்ளாக) படம் (4) இல் காணப்படும் கோடு வழியாக மேல்நோக்கி மடக்கி வைக்கப்படுகிறது. இம்மடிப்பினை விரித்து படம் (5) வெளியே மடக்கி வைக்கப்படுகிறது. படம் (5) இல் காணப்படும் கோடு வழியாக மீண்டும் மடக்கவும். இம்மடிப்பினை விரித்து வெளியே மடக்கி வைக்கப்படுகிறது.

இனி சதுரத்தை எடுத்ததன் பின்னர் மீதி வந்த காகிதத்தைப் படம் (6) இல் காண்பது போன்று ஒரு முனையிலிருந்து சிறிதாகச் சுருட்டிச் சுருளாக்கி படம் (7) போன்று பசையினால் ஒட்டப் படுகிறது. படம் (8) இல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது போன்று நடுப் பகுதியில் 2 செ.மீ. வீதியில் காகிதச் சுருளின் பாதிவரை இரண்டு வெட்டுகள் உண்டாக்கி இந்தப் பகுதிகளைக் கீழ் நோக்கி மடக்கி வைக்கவும். படம் (9) இல் காண்பது போன்று மடக்கியெடுத்து எடுத்து கிளியின் அடிப்பகுதியில் ஒட்டிச் சேர்க் கவும். காய்ந்த பின்னர் பிடித் துக்கொண்டு அடுத்தப் பகுதி யினை இயக்கலாம். பாத்திரத்தி லிருந்து தானியங்களைக் கொத் தித் தின்பதை காட்சிப்படுத்த இயலும்.




படம்

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- பங்களிப்பு

## கற்றல் அடைவுகள்

- தூல தசை இயக்கம்
- கணித வடிவங்கள் அறிமுகமாகின்றன.

## மண்டலம் 6 - சேவை, பயன்படும் பொருட்களின் உருவாக்கம்

நமது சுற்றுப்புறங்களில் காணப்படுகின்ற பயனற்றன எனக் கருதுகின்ற பொருட்களை உபயோகித்து பயன் மிக்கதும் கையாளக்கூடியதுமான ஏராளமான பொருட்களை உருவாக்கலாம் என அறிந்து கொள்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு சுவர்தூக்கி தொங்கவிடுவது உருவாக்கமே இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

LO : 3.6.1 அலங்காரப் பொருட்களை உருவாக்குகின்றனர்.

- பயனில்லாதவை எனக்கருதும் பொருட்களின் மறுபயன்பாடு
- பறவைகளை உற்றுநோக்கும் திறன்

**செயல்பாடு** : சுவர் தூக்கி உருவாக்குதல்

**செயல்முறை** :

- வீட்டிலும் வகுப்பறையிலும் அலங்கரிப்பதற்கு உரிய பொருட்களின் பட்டியல் தயாரித்தல்
- உருவாக்கம்


**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** :

- ஸ்ட்ரோபோர்டு துண்டுகள் (சட்டை பொதிந்து வரும் அட்டை)
- காகிதத் தம்ளர்
- கத்தரிக்கோல், பசை, பயனற்ற அழகான துணிகள்
- பறவைகளின் இறகுகள்

## உருவாக்கும் முறை

ஸ்ட்ரோ போர்டு துண்டினை அவசியமான அளவில் வெட்டியெடுக்கப்படுகிறது. படம்1 அதன் பின்னர் சேகரித்துள்ள அழகான துணியினால் ஸ்ட்ரோ போர்டு மூடப்பட்டு ஒட்டப்படுகிறது. அதன் முன் பகுதியில் காகிதத் தம்ளர் படம் 3 இல் காண்பது போன்று நேராக வெட்டப்படுகிறது. வெட்டப்பட்ட தம்ளரின் பாதிப்பகுதி படம் 4 இல் காண்பது போன்று முதலில் தயாராக்கிய போர்டில் ஓரளவு பகுதிக்குக் கீழாக தம்ளரின் வாய்ப்பகுதி மேல்நோக்கி ஒட்டப்பட்டு பலப்படுத்தப்படுகிறது. இனி நாம் சேகரித்த இறகுகளை ஒன்றுபோலாக்கி படம் 5 இல் காண்பது போன்று ஒட்டி அழகுப் படுத்தி படம் (6) இல் போன்று சுவர்தூக்கி முழுமை பெறுகிறது. இதனுள் பூக்களையோ பிற அழகுள்ள பொருட்களையோ வைத்து அலங்கரிக்கலாம். செயல் நாட் குறிப்பேடு எழுதவும்.



## தரம் நிர்ணயித்தல்

படைப்பு, உருவாக்கத்திறன்

## கற்றல் அடைவுகள்

- வேறுபட்ட கருவிகளைக் கையாள்வதற்கு உரிய திறனைப் பெறுகின்றனர்.
- பயனில்லாப் பொருட்கள் எனக் கருதுவனவற்றைப் பயன்படுத்தி ஒரு புதிய படைப்பினை உருவாக்குகின்றனர்.

# செயல்வழிக்கல்விச் செயல்பாடுகள்

## வகுப்பு 4

# செயல்வழிக்கல்வி பாடஏற்பாடு

## பாடத்திட்ட வலைச்சட்டம்

### மண்டலம் 1 – உணவும் வேளாண்மையும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.1.1 | பல்வேறு காலஅளவில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களைக் கேடு வராமல் பதப்படுத்து கின்றனர் | பல்வேறு பருவக்காலங்களில் கிடைக்கின்ற உணவுப் பொருட்கள்.<br>உணவுப் பொருட்களுக்குக் கேடு வராமல் பாதுகாக்கும் முறைகள் | கலந்துரையாடல்<br>பல்வேறு கால அளவில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களின் பட்டியலைத் தயாரித்தல்.<br>திரட்டுதல்<br>சமையல் குறிப்புகள் | கலந்துரையாடல், பங்களிப்பு |
| 4.1.2 | காய்கறித்தோட்டம் மூலிகைத் தோட்டம் என்பனவற்றுக்குத் தேவையான பல்வகை பூத்தொட்டிகளை உருவாக்குகின்றனர். | காய்கறித்தோட்டம், மூலிகைத் தோட்டம் என்பனவற்றின் உருவாக்கம், பராமரிப்பு | கருவிகளைப் பயன்படுத்துதல்<br>சரியான தோட்டப் பராமரிப்பு<br>திரட்டுதல் | கலந்துரையாடலில்<br>பங்களிப்பு உற்றுநோக்கல்<br>படைப்பு |

### மண்டலம் 2 – உடல்நலமும், சுகாதாரமும்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.2.1 | சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்தலுக்கும் அழகுமயமாக்குதலுக்கும் உரிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். | பல்வேறு மாசடைதல் சூழல் களை அறிந்து கொள்ளுதல்<br>கழிவுப் பொருட்களை வகைப் படுத்தி அழிப்பதற்கு கழிவுப் பொருட்களை அழிப்பதற்கு வழி முறைகள் பற்றிய விழிப் புணர்வு | கலந்துரையாடல்<br>தூய்மைப்படுத்தும் பல்வேறு கருவிகளும் பொருட் களும் அறிமுகமாகின்றன. | பங்களிப்பு<br>உற்றுநோக்கல் |

## மண்டலம் 3 - உடை

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.3.1 | பல்வகைக் காய்கறிகள், நிறத்தினைப் பயன்படுத்தி மேசைவிரிப்பு சால்வை என்பன அலங்கரிக்கப் படுகின்றன. | ஆடைகளின் அச்சுவடிவம், வண்ணங்களின் கலவை, வடிவங்கள் தயாரித்தல் என்பன குறித்துள்ள விழிப் புணர்வு | கலந்துரையாடல்<br>திரட்டுதல்<br>கண்காட்சி | படைப்பு, பங்களிப்பு |

## மண்டலம் 4 - உறைவிடம்/ வாழிடம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.4.1 | பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்தி வீடுகளின் பல்வேறு மாதிரிகளை உருவாக்கு கின்றனர். | வீட்டின் பல்வேறு மாதிரிகள், வீட்டின் பல்வேறு கட்டிடங்க ளின் கட்டுமான நிலைகள் மாதிரிகளின் உருவாக்கப் பொருட்கள்.<br>அழகுமயமாக்குதல் செலவு குறைந்த பொருட்களின் உருவாக்கம். | கலந்துரையாடல்<br>திரட்டுதல்<br>கண்காட்சி | கலந்துரையாடல்<br>பங்களிப்பு<br>பொருட்களைத் தேர்வு செய்தல், கையாளுதல், உருவாக்கத்திறன் |

## மண்டலம் 5 – பொழுதுபோக்கு

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.5.1 | முகமூடி, பொம்மைகள் இசைக்கருவிகள் என்பன உருவாக்குகின்றனர். | முகமூடி, பொம்மைகள் இசைக் கருவிகள் என்பனவற்றின் மாதிரிகளை உருவாக்கலாம்.<br>உருவாக்கிய பொருட்களைப் பல்வேறு வகையான வெளியீட்டு வடிவங்களுக்குப் பயன்படுத்தலாம். | கலந்துரையாடல், குறுந்தகடு படங்கள்<br>உற்றுநோக்கல் திட்டமிடல்<br>பறவை, விலங்குகளின் முக மூடிகள் உருவாக்குதல் பயன் படுத்தப்படுதல்<br>பல்வேறு இசைக்கருவிகள் மாதிரிகள் உருவாக்குதல்.<br>சுயமதிப்பீடு செய்தல்<br>ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்தல். | கலந்துரையாடல், பங்களிப்பு<br>உற்றுநோக்கல்<br>படைப்புகள்<br>வெளியீடு<br>செயல்நாட்குறிப்பேடு |
| 4.5.2 | எளிய ஒறிகாமி வடிவங்களை உருவாக்குகின்றனர். | கருவிகளைக் கையாள்கின்றனர்.<br>ஒறிகாமி வடிவங்கள். | கலந்துரையாடுதல் காகித மடக்கினால் செய்யும் படைப்பு | பங்களிப்பு<br>படைப்பு |
| 4.5.3 | களிமண், மைதாமாவு என்பனவற்றால் கண்ணைக் கவரும் பொருட்களை உருவாக்குகின்றனர். | விளையாட்டுப் பொருட்களில் எளிய உருவங்கள், அவற்றின் பயன்பாடு, உருவாக்கமுறை, பொருட்கள் | கலந்துரையாடல்<br>திட்டமிடல்<br>உருவாக்கம், பயன்படுத்துதல் சுயமதிப்பீடு செய்தல் ஒருவருக் கொருவர் மதிப்பீடு செய்தல் | கலந்துரையாடலில் பங்களிப்பு<br>உருவாக்கத்திறன் படைப்பு |

### மண்டலம் 6 – சேவை, பயன்பாடும் பொருட்களின் உருவாக்கம்

| எண் | Learning outcomes | Concepts/skills | Process | Assessment |
|---|---|---|---|---|
| 4.6.1 | வாழ்த்து அட்டைகள், கூடுகள் அலங்காரங்கள் என்பனவற்றைப் பல்வேறு பொருட்களைப் பயன் படுத்தி உருவாக்குகின்றனர். | • தின விழாக்கள் / கொண்டாட் டங்கள் வாழ்த்து அட்டைகள் கூடுகள் அலங் காரங்கள்.<br>• செலவு குறைந்ததும் பயன் பாட்டிற்குத் தகுதியானது மான ஸ்டேஷனரி பொருட்க ளின் உருவாக்க முறை<br>தேவையான பொருட்கள் | • கலந்துரையாடல்<br>• செலவு குறைந்ததும் சுற்றுப் புறங்களில் கிடைக்கின் றது மான அலங்காரப் பொருட் களை யும் கருவிகளையும் சேகரிக் கின்றனர்.<br>• வாழ்த்து அட்டைகள் கூடு கள் அலங்காரப் பொருட்கள் என்பன வற்றின் உருவாக் கம் பயன்பாடு<br>• சுயமதிப்பீடு ,<br>ஒருவருக்கொருவர் மதிப்பீடு | கலந்துரையாடலில் பங்களிப்பு<br>உருவாக்க நிலைகள்<br>திறன்<br>படைப்புகள் |

# செயல்பாடுகள்

## மண்டலம் 1 - உணவும் வேளாண்மையும்

பல்வேறு பழவகைகள் காய்கறிகள் என்பன பருவ காலங்களுக்கு ஏற்ப கிடைக்கும். கிடைப்பவற்றை கேடு வராமல் பதப்படுத்தும் எளிய முறைகளே இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

**LO** : **4.1.1.** பல்வேறு கால அளவில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களைக் கேடுவராமல் பதப்படுத்துகின்றனர்.

**செயல்பாடு** : நெல்லிக்காய் உப்பிலிடுதல்

**செயல்முறை** :

- கலந்துரையாடல் - பருவக் காலங்களில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களுக்குக் கேடுவராமல் பிறகாலங் களில் எவ்வாறு பயன்படுத்தலாம்?
- பதப்படுத்தும் முறைகள் யாவை?
- பொருட்களை ஒருங்கிணைத்தல்
- நெல்லிக்காய் உப்பில் போடப்படுகிறது.
- பதப்படுத்தும் முறை குறிப்பு / சமையல் குறிப்பு
- குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் பயன்படுத்துதல்

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்:**

- நெல்லிக்காய்
- காந்தாரி மிளகாய்
- உப்புத்தூள்

## பதப்படுத்தும் முறை

- கொதித்து ஆறிய தண்ணீரில் அவசியத்திற்கு ஏற்ப உப்புத்தூள் போட்டு கலக்கவும்.
- நெல்லிக்காயைக் கழுவித் துடைத்து பெரிய குப்பியில் முக்கால்பகுதி வரை நிறைக்கவும்.
- நெல்லிக்காய் போட்டு வைத்துள்ள குப்பியில் உப்புத் தண்ணீர் ஊற்றவும். உப்புத்தண்ணீர் நெல்லிக்காயின் மேலாக நிற்க வேண்டும்.

- தேவையான காந்தாரி மிளகாய் போடவும்
- குப்பியினை அடைத்து வைத்து ஒரு வாரம் கழிந்து பயன்படுத்தத் தொடங்கலாம். ஈரம் இல்லாத கரண்டியினால் எடுத்தால் போதும்.

## பிறசெயல்பாடுகள்

இதுபோன்று கண்ணிமாங்காய், புளிஞ்சிக்காய், காரைக்காய், லவலோலிக்காய், சாம்பங்காய் என்பனவற்றை உப்பில் போட்டுப் பயன்படுத்தலாம். சமையல்குறிப்பு / செயல்நாட்குறிபேடு தயாராக்கலாம் அல்லவா?

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- உருவாக்கத் திறன்
- நாட்குறிப்பேடு / சமையல் குறிப்பு

**LO** : **4.1.2** காய்கறித்தோட்டம், மூலிகைத்தோட்டம் என்பனவற்றுக்கு அவசியமான பல்வகைப் பூத்தொட்டிகளை உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு** : பூத்தொட்டிகளை உருவாக்கி பூச்செடிகளைப் பாதுகாத்தல்


**செயல்முறை** :
- கலந்துரையாடல், பூச்செடிகள் மூலிகைத்தாவரங்கள் என்பனவற்றைப் பூத்தொட்டிகளில் பாதுகாக்கும் முறை, பூத்தொட்டிகள் உருவாக்கும் முறை
- பூத்தொட்டி உருவாக்கம்
- செடிகளையும் தாவரங்களையும் பூத்தொட்டியில் பாதுகாத்தல்

**செயல்பாட்டின் முறை** : குழுவாக / தனிநபராக

**பொருட்கள்** :
- இரண்டு லிட்டர் குளிர்பானம் வருகின்ற பிளாஸ்டிக் குப்பி
- கத்தி
- பழைய துணி

## உருவாக்கமுறை

- இரண்டு லிட்டர் குப்பி எடுத்து படம் a இல் காண்பது போன்று இரண்டாக வெட்டவும்.



- படம் b இல் காண்பது போன்று அடிப் பகுதியில் பாதி தண்ணீர் நிறைக்கவும்.
- படம் c இல் காண்பது போன்று மேல் பகுதியில் மூடியை மாற்றிப் பின்னர் பழைய துணியைச் சொருகி வைக்கவும்.
- உள்ளே வளம் உள்ள மண்ணை நிறைக்கவும்.
- படம் d இல் காண்பது போன்று துணி முழுமையாகத் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும் முறையில் குப்பியின் அடிப்பகுதியை நோக்கி இறக்கி விடவும். மேலே செடி நடவும். இவ்வாறு செய்தால் வாரங்கள் கழிந்து தண்ணீர் ஊற்றினால் போதும். வளமோ மண்ணோ இழப்பதில்லை. உள்ளரங்கத் தாவரங்களையும் வெளி அரங்கத் தாவரங்களையும் இது போன்று வளரச் செய்து பராமரிக்கலாம்.

செயல்நாட்குறிப்பேடு தயாரிக்கலாம்.

## தரம் நிர்ணயித்தல்

- செயல்நாட்குறிப்பேடு
- பங்களிப்பு
- உற்றுநோக்கல்

## மண்டலம் 2 – உடல்நலமும், பாதுகாப்பும்

வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் பல்வேறு மாசடைதல் சூழல்களைக் கவனித்திருப்பீர்கள். கழிவுப் பொருட்களைத் திரட்டி வகைப்படுத்தி அழித்தால் மாசடைதலை ஓர் எல்லைவரை கட்டுப்படுத்தலாம். பல்வேறு அழித்தல் முறைகளில் ஒன்றே இப்பகுதியில் அறிமுகமாகிறது.

**LO : 4.2.1** சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவதற்கும் அழகுமயமாக்குவதற்கும் உரிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

**செயல்பாடு :** பானை உரம் உருவாக்கம்

**செய்முறை :**
- கலந்துரையாடல் – பல்வேறு மாசுகளை எவ்வாறு கட்டுப் படுத்தலாம்? கழிவுப் பொருட்களை வகைப்படுத்துதல் அழித்தல் முறைகள் என்பன.
- பொருட்களை ஒருங்கிணைத்தல்
- பள்ளிக்கூடவளாகத்தில் பல இடங்களிலும் பானை வளம் உருவாக்கப்படுகிறது.
- நாட்குறிப்பேடு தயாராக்குதல்


**செயல்பாட்டின் முறை :** குழுச் செயல்பாடு

**பொருட்கள் :**
- பானை, கத்தி
- பிளாஸ்டிக் காகிதம்
- கயிறு

## உருவாக்கமுறை

- பள்ளிக்கூட வளாகத்தில் திடக்கழிவுப் பொருட்களை இயற்கைசார் கழிவுப் பொருட்கள், இயற்கை சாராக் கழிவுப்பொருட்கள் என வகைப்படுத்தவும். இயற்கை சார் கழிவுப்பொருட்களை மட்டுமே பானை உரத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.
- ஒரு பெரிய மண்பானை (வீட்டில் பயன்படுத்திய உடைந்த பானையாக இருந்தாலும் போதும்) எடுக்கவும். பானையின் அடிப் பக்கத்தில் ஒன்றோ இரண்டோ துளைகள் போடவும். இதற்காகக் கூர்மையான கத்தியைப் பயன்படுத்தலாம்.
- பானையின் முக்கால் பகுதியை இறக்கி வைக்கின்ற முறையில் பள்ளிக்கூட வளகாத்தில் ஒரு குழி உண்டாக்கவும். இதன் உள்ளே பானையினை இறக்கி வைத்து சுற்றிலும் மண் போட்டுப் பலப்படுத்தவும்.
- பானையின் உள்ளே இயற்கை சார் கழிவுப்பொருட்களைப் போடுவதுடன் இடையிடையே சாணகத் தண்ணீர் தெளிக்கவும் வேண்டும். சர்க்கரைத் தண்ணீர் நல்லது. பானையினைப் பிளாஸ்டிக் விரிப்பால் மூடி கயிறினால் கட்டி அடைத்து வைக்கவும் பானை நிறைந்தால் மூன்று மாதங்கள் ஆகும்போது வளத்தினை எடுத்துப் பயன்படுத்தலாம்.

மழைக்காலத்தில் வெளித்தண்ணீர் பானையினுள் நுழைய அனுமதிக்கக் கூடாது.



- செயல்நாட்குறிப்பேடு எழுத வேண்டும்.

## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- பங்களிப்பு
- உற்றுநோக்கல்

## மண்டலம் 3 - உடை

பல்வகை காய்கறிகளைப் பயன்படுத்தி மேசைவிரிப்பு,சால்வை என்பன அலங்கரிக்கப் படுகின்றன. இதற்காகப் பல்வகை வண்ணக்கலவைகளைத் தயாராக்குவததில் திறன் பெறுவதற்கு உரிய செயல்பாடுகளே இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

**LO** : 4.3.1 பல்வகைக் காய்கறிகள், வண்ணம் ஆகியன பயன்படுத்தி மேசை விரிப்பு, கைக்குட்டை, காட்டன், சால்வை ஆகியன அலங்கரிக்கின்றனர்.

**செயல்பாடு** : துணிச்சாயத்திற்காக எளிய வரைபடங்களைத் தயாராக்குதல்

**செய்முறை** :

- கலந்துரையாடல் - துணியில் அச்சேற்றும் முறைகள்
- காய்கறிகளைச் செதுக்கி வைத்தல்,துணியில் அச்சேற்றுதல்
- பொருட்களை ஒருங்கிணைத்தல்
- நிர்வாகம் செய்தல்

## செயல்பாட்டின் முறை : தனிநபர் செயல்பாடு

## பொருட்கள் :


- துணிச்சாயம் (பல வண்ணங்கள்) தூலிகைகள்
- காய்கறிகள், ஸ்பாஞ்ச், துணி

## உள்ளடக்கம்

- ஆடைகளில் மிக எளியமுறையில் துணிச்சாயத்தைப் பயன்படுத்திக் காய்கறிகளில் வடிவங்கள் உண்டாக்கி அச்சேற்றும் முறையினை அறிந்து கொள்கின்றனர்.
- வண்ணக் கலவை உண்டாக்கும் முறையினைப் புரிந்து கொள்கின்றனர்.
- சுயமாக வடிவங்கள் தயாராக்கும் திறனைப் பெறுகின்றனர்.

## செயல்பாடின் வரிசை

பொருத்தமான காரட் எடுத்து நன்கு கழுவி படம் 1 இல் காண்பது போன்று பன்முகக்கத்தியால் வட்டமாக வெட்டப்படுகிறது. அதன் இரண்டாவது பகுதி படம் (1-2) இல் காண்பது போன்று சாய்த்து வெட்டப்படுகிறது. முதலில் வெட்டிய வட்டவடிவிலான பகுதி படம் 3 இல் காண்பது போன்று வெட்டும் கருவியால் குழிகள் உண்டாக்கப் படுகின்றன. அதுபோன்று படம் 2 இல் காண்பது போன்று காரட்டின் சிறுபகுதியினைச் சாய்த்து அப்பகுதியினை நீளத்தில் வெட்டினால் இலை வடிவம் தோன்றும். ஏதாவது பரந்த பாத்திரத்தில் நனைத்து ஈரத்தைப் பிழிந்து எடுத்த ஸ்பாஞ்ச் வைத்ததன் பின்னர் துணிச் சாயத்தை ஊற்றித் தயாராக்கிய காய்கறி அச்சினை அதில் முக்கித் பின்னர் துணியில் பதித்தால் அழகான படங்கள் தோன்றும்.




## தரம் நிர்ணயித்தல்

படைப்பு, செயல்பாட்டுத்திறன்

## கற்றல் அடைவுகள்

- செலவு குறைந்த அளவில் ஆடைகளில் வடிவங்கள் தயாராக்கலாம்.
- சுயமாக வடிவங்கள் தயாராக்கு வதன் வாயிலாகப் புது வடிவங் களைப் பற்றிய சிந்தனையையும் தேடலும் உண்டாகின்றன.
- தன்னம்பிக்கை பெறுகின்றனர்.

# மண்டலம் 4 - உறைவிடம்/வாழிடம்

நமது சுற்றுப்புறங்களில் பல்வகை முறையிலான வீடுகள் உள்ளன. சுற்றுப்புறங்களில் கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்தி எளிய வீடுகளின் மாதிரிகளை உருவாக்கலாம். இத்தகைய செயல்பாடுகளே இந்த மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

**LO :** 4.4.1 பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்தி வீடுகளின் பல்வகை மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன.

**செயல்பாடு** : வீட்டின் மாதிரி உருவாக்கம்


**செயல்முறை** :
- வீடுகளைப் பற்றிய கலந்துரையாடல்
- வீடு உருவாக்குதலின் பல்வேறு நிலைகள் யாவை?.
- பொருட்களை ஒருங்கிணைத்தல்,செயல் நிர்வாகம் செய்தல்


**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு

**பொருட்கள்** :
- ஏ4 காகிதம், கத்தரிக்கோல், பசை

## செயல்பாட்டின் வரிசை

ஒரு ஏ 4 காகிதம் எடுத்து நேராக (படம் a) இரண்டாக மடக்கிய பின்னர் சுருட்டி படம் (b) படம் (c) போன்று வட்டத்தில் மடக்கி ஒரு பக்கம் அடுத்தப்பக்கத்துடன் சேர்த்து ஒட்டப்படுகிறது. ஒரு ஏ4 காகிதத்திலிருந்து இயன்ற அளவில் பெரிதாக ஒரு சமசதுரத்தினை வெட்டி எடுத்ததன் பின்னர் படம் (d) அதிலிருந்து படம் (e) இயன்ற அளவில் பெரிதாக வட்டம் வெட்டி எடுக்கப்படுகிறது. நடுப்புள்ளியிலிருந்து a-யினை ஒரு கத்தரிக்கோலால் வெட்டுக a என்ற புள்ளியை b (படம் 7) பி-யை நோக்கிச் சுருட்டி மடக்கி ஒட்டவும். படம் (7) இல் காண்பது போன்று முதலில் உருவாக்கிய சிலிண்டர் வடிவத்தின் மேலே ஒட்டவும் படம் (h) இல் காண்பது போன்று ஜன்னல்களும் வாசல்களும் வரைந்து அழகுபடுத்தவும்.





## தரம் நிர்ணயித்தல்

- படைப்பு
- உருவாக்கத்திறன்
- வீடுகள் பற்றிய கருத்தாக்கங்கள்

## கற்றல் அடைவுகள்

- உறைவிடத்தின் முக்கியத்துவத்தினைப் புரிந்து கொள்கின்றனர்.
- பல்வகை வீடுகள் குறித்துள்ள கருத்தாக்கங்களைப் பெறுகின்றனர்.
- காகிதங்களைப் பயன்படுத்தியுள்ள வடிவங்களின் உருவாக்கத்தில் திறன் பெறுகின்றனர்.
- தசை விரிவாக்கம் ஏற்படுகிறது.

# மண்டலம் 5 - பொழுதுபோக்கு

குழந்தைகளுக்குப் பிற பாடங்களை எளிதாகப் படிப்பதற்கு அவசியமான முகமூடிகள் எழுத்துப் படங்கள் பல்வேறு இசைக்கருவிகள் என்பனவற்றின் உருவாக்கமும் இவற்றைப் பொருத்தமான வேளைகளில் பயன்படுத்துகின்ற செயல்பாடுகளுமே இம்மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

LO : 4.5.1 முகமூடி பொம்மைகள், இசைக்கருவிகள் ஆகியன உருவாக்குகின்றனர்.

**செயல்பாடு** : முகமூடி உருவாக்கம்

**செய்முறை** :

- கலந்துரையாடல் - பல்வகை முகமூடிகளைப் பற்றி முகமூடிகளை எவ்வாறு தயாரிக்கலாம்.
- நாடகத்தின் கதையினைத் தயாராக்குதல், நாடக வெளியீடு

**செயல்பாடின் முறை** : குழுச் செயல்பாடு

**பொருட்கள்** :

- அட்டைக்காகிதம்
- கத்தரிக்கோல்
- பசை
- வரைபடப்பேனா


## உள்ளடக்கம்

- வசனப் பழக்கத்திற்கும் ரசனையுடன் கற்கவும் பறவைகளினுடையவும் விலங்குகளினுடையவும் முகமூடிகளை உருவாக்கலாம்.

## செயல்பாட்டு வரிசை

ஓர் அட்டைக்காகிதத்தை இரு சமப்பகுதிகள் ஆக்கவும். அதன் ஒரு பகுதியினை வெட்டி எடுக்கவும். மீதிப் பகுதியை இரண்டாக மடக்கவும். மடக்கியதில் படம் (1) இல் காண்பது போன்று பதிவு செய்யுவம். வெட்டி எடுத்தப் பகுதியின் கீழே உள்ளதை ஸிக்ஸாகாயி மடிக்கவும். படம் (3) இல் அடையாளப் படுத்திய பகுதியினைக் கத்தரிக்கோலால் வெட்டவும் படம் (a,b) இதனைப் பலா இலையைக் கோட்டுவது (ஒரு முனையை மடக்கிச் சொருகுவது - கரண்டி போன்று) மடித்து ஸ்டாப்லர் செய்யவும். படம் (4) பார்க்கவும். படம் (5) இல் காண்பது போன்று பத்திரிகையின் ஒரு துண்டினை நீளத்தில் இரண்டாக மடிக்கவும். மீண்டும் இரணடாக மடிக்கவும். டேப் போல் ஆக்கி முகமூடி

பயன்படுத்துகின்ற குழந்தைகளின் தலையின் அளவுக்கு ஏற்ப ஸ்டாப்லர் செய்யவும். படம் (4) இல் காண்பது போன்று முகமூடியோடு சேர்த்து ஸ்டாப்லர் செய் யவும். வெள்ளைக் காகிதத்தில் கண்ணின் வடிவத்தினை வெட்டி கருமணி வரைந்த முகமூடியில் ஒட்டவும். முகமூடியைப் பயன் படுத்தும் போது குழந்தை காண்பதற்காக இரு துளைகள் போடவும். முகமூடி தயாராகி விட்டால் ஒரு சிறு நாடகக் கதை எழுதி நாடகத்தை நடிக்கலாம்.



## கற்றல் அடைவுகள்

- கருத்துப்பரிமாற்றத் திறன் பெறுகின்றனர்.
- பிறஉயிரிகளைப் போன்று செய்யும் திறனை அடைகின்றனர்.
- வடிவங்களின் / உருங்களின் உருவாக்கம்

## மண்டலம் 6 – சேவை, பயன்பாட்டுக்குதவும் பொருட்களின் உருவாக்கம்

வாழ்த்துஅட்டைகள், கற்றல்கருவிகள், காகிதக்கூடுகள், அலங்காரங்கள் எனும் பொருட்களை இந்த மண்டலத்தில் உருவாக்கலாம். ஒரு கற்றல் கருவி அறிமுகமாவதே இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

**LO : 4.6.1** வாழ்த்துஅட்டைகள், காகிதக்கூடுகள், கற்றல் கருவிகள், அலங்காரங்கள் என்பனவற்றைப் பல்வேறு பொருட்களால் உருவாக்குகின்றனர்.

**செயல்பாடின் முறை :** எழுத்து அரிச்சுவடி – கற்றல் கருவி உருவாக்கம்

**செயல்முறை :**
- கலந்துரையாடல் – கற்றல் கருவி பற்றி உருவாக்க முறை
- பொருட்களை ஒருங்கிணைத்தல், உருவாக்கம்

**செயல்பாட்டின் முறை** : தனிநபர் செயல்பாடு


**பொருட்கள்** :
- அட்டைக்காகிதம்
- ஆப்பிளின் படம்
- கத்தரிக்கோல்
- மார்க்கர் பேனா
- குறுந்தகடு

## செயல்பாட்டின் வரிசை


படம் 1- இல் காண்பது போன்று குறுந்தகடினைப் பயன்படுத்தி இரு சமவட்டங்கள் அட்டைக்காகிதத்தில் வெட்டி எடுக்கப்படுகின்றன. படம் 2- இல் காண்பது போன்று வட்டத்தின் நடுப்புள்ளிகளைக் கண்டுபிடித்ததன் பின்னர் நடுப்புள்ளி வரை கத்தரிக்கோலைப் பயன்படுத்தி வெட்டவும் முதல் வட்டத்தில் வெட்டிய பகுதியோடு சேர்ந்து ஆப்பிளின் படத்தினை வரையவோ படத்தினை ஒட்டவோ செய்யவும். படம் (3) இரண்டாவது வட்டத்தின் வெட்டிய பகுதியின் மேலாக படம் (4) இல் காண்பது போன்று மார்க்கர் பேனாவைப் பயன்படுத்தி ஆப்பிள் என்று எழுதவும். இந்த வட்டம் முதலாவதின் அடிப்பகுதியில் பிடித்ததன் பின்னர் படம் 6 இல் காண்பது போன்று வெட்டி, பிளவின் வழியாக ஆப்பிள் என்று எழுதிய வட்டத்தினைப் பெருவிரலால் மெதுவாகத் திருப்பி வெளியே கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு இந்தச் செயல்பாடினை முழுமைப்படுத்தல சொற்களின் எழுத்துகளைப் படிப்பதற்கு இது பயன்படும்.

## தரம் நிர்ணயித்தல்


- படைப்பு
- செயல்பாட்டுத்திறன்
- கருவிகளைக் கையாளுதல்




படம் -1




படம் 3







படம் 4



- 5




படம் -6

# செயல்நாட்காட்டி (CALENDAR OF ACTIVITIES)

| Class | I | | II | | III | | IV | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **Months** | **Los** | **Periods** | **Los** | **Periods** | **Los** | **Periods** | **Los** | **Periods** |
| June | 1.1.1 | | 2.1.1 | | 3.1.1 | | 4.1.1 | |
| | 1.2.1 | 12 | 2.1.1 | 12 | 3.2.1 | 12 | 4.2.2 | 12 |
| July | 1.2.1 | | 2.2.1 | | 3.1.2 | | 4.1.2 | |
| | 1.3.1 | 12 | 2.3.1 | 12 | 3.1.3 | 12 | 4.2.1 | 12 |
| August | 1.2.1 | | | | | | | |
| | 1.5.1 | | 2.2.1 | | 3.2.1 | | 4.1.2 | |
| | 1.6.1 | 12 | 2.4.1 | 12 | 3.1.3 | 12 | 4.2.1 | 12 |
| September | 1.6.1 | 6 | 2.2.1 | | | | | |
| | | | 2.4.2 | 6 | 3.6.1 | 6 | 4.6.1 | 6 |
| October | 1.2.1 | | 2.2.1 | | 3.2.1 | | 4.2.1 | |
| | 1.4.1 | 12 | 2.5.1 | 12 | 3.4.1 | 12 | 4.1.2 | 12 |
| November | 1.2.1 | | 2.2.1 | | 3.5.1 | | 4.4.1 | |
| | 1.5.1 | 12 | 2.5.2 | 12 | 3.6.1 | 12 | 4.5.1 | 12 |
| December | 1.2.1 | | | | | | | |
| | 1.6.1 | 6 | 2.2.1 | 6 | 3.6.1 | 6 | 4.6.1 | 6 |
| January | 1.2.1 | | 2.2.1 | | 3.2.1 | | 4.2.1 | |
| | 1.5.1 | 12 | 2.6.1 | 12 | 3.1.3 | 12 | 4.5.2 | 12 |
| February | 1.2.1 | | 2.2.1 | | 3.1.3 | | 4.2.1 | |
| | 1.6.1 | 12 | 2.5.1 | 12 | 3.2.1 | 12 | 4.1.1 | 12 |
| March | 1.2.1 | 4 | 2.2.1 | 4 | 3.5.1 | 4 | 4.5.3 | 4 |
| | | **100** | | **100** | | **100** | | **100** |

# பின்னிணைப்பு


# 1. கைப்பொம்மை

## தேவையான பொருட்கள்

பழைய குறுந்தகடு, ஸ்கெட்ச்பேனா, அட்டைக் காகிதம், பசை

## உருவாக்க முறை

குறுந்தகடினைப் பயன்படுத்தி அட்டைக்காகிதத்தில் வட்டம் வரைந்து வெட்டி எடுக்கவும். படம் (c)இல் காண்பது போன்று வெட்டுக. வெட்டிய பகுதியை உள்ளே தள்ளி கோண் வடிவில் ஒட்டி விரும்பிகின்ற விலங்கின் உருவத்தை ஸ்கெட்ச் பேனாவால் வரைக்கவும். படம் (c) இல் காணப்படும் வடிவத்தில் அட்டைக்காகிதத்திலிருந்து ஒரு துண்டினை வெட்டி எடுக்கவும். படம் (d)இல் காண்பதுபோல் ஒட்டவும். படம் (இ) இல் காண்பதுபோன்று கோண் வடிவத்தின் உள்ளே F என எழுதிய பகுதியைப் பசை தேய்த்து ஒட்டவும். இதில் விரலினைச் செலுத்தி பொம்மையை இயக்கலாம்.




# 2. ஸ்ட்ராவால் செய்த பூ


## தேவையான பொருட்கள்

ஸ்ட்ரா, ஊசி, எண்.6 பூ கட்டுகின்ற கம்பி, ஐஸ்க்ரீம்பந்தின் மூடி (பச்சை நிறம்) கத்தரிக்கோல்.

## உருவாக்க முறை

ஸ்ட்ராவை 5 செ.மீ நீளத்தில் 30 துண்டுகளாக வெட்டி எடுக்கவும். (ஒரே நிறத்திலான ரோஸ், சிவப்பு, மஞ்சள் என்பன) படம் (a) இல் காண்பது போன்று இரண்டாக வெட்டவும். (கோணோடு கோண்) படம் (b) இல் காண்பது போன்று அகலமான பகுதியில் ஊசியினால் துளை போட்டு கம்பியில் கோர்க்கவும். கோர்த்ததன் பின்னர் கம்பியின் இரு பகுதியினையும் சேர்ந்து இறுக்கி கீழ்ப்பகுதியில் ஐஸ்க்ரீம் பந்தின் மூடியை நடுப்பகுதியில் துளை போட்டு கம்பியினை அதன் வழியாகச் செல்லவிட்டு கீழ்ப்பகுதியினைச் சிறிதாக மடக்கிவைக்கவும்.





# 3. அசையும் பறவையை உருவாக்கலாம்


பயினில்லாக் குறுந்தகடினைப் பயன்படுத்தி மிகவும் மனம் கவரும் முறையில் அசையும் பறவையினை உருவாக்கலாம். இச்செயல்பாடினைக் குழந்தைகள் மிகவும் இரசிப்பார்கள். மேலும் கற்றலுக்குத் துணை புரியும் ஒரு செயல்பாடும் ஆகும்.

## தேவையான பொருட்கள்

- பயனில்லாக் குறுந்தகடு
- பல்வேறு வண்ணங்களில் அட்டைக் காகிதம்
- Feviquick, Cello tape
- கத்தரிக்கோல், காகிதக் கட்டர், ஸ்கெயில்

## உருவாக்கமுறை


பயனில்லாக் குறுந்தகடின் மின்னும் பகுதியில் ஒரு அளவுகோலைச் சேர்த்துப் பிடித்து இரண்டாக மடக்கவும். படம் 2 குறுந்தகடின் மடக்கிய பகுதிகளின் அடிப்பகுதியில் படம் 4 -இல் காண்பது போன்று சிறிது உள்ளே இருக்க வேண்டும். அதன் பின்னர் பறவையின் தலைப் பகுதியைப் பென்சிலால் வரைந்தோ, படங்களிலிருந்து வெட்டி எடுத்தோ மடக்கி குறுந்தகடின் ஒரு முனையில் பெவிகுக்கினால் ஒட்டவேண்டும். படம் 3 அதன் பின்னர் பறவையின் சிறகின் வடிவத்தில் காகிதத்தை வெட்டி எடுத்து குறுந்தகடின் வெளியே படம் (4) இல் காண்பது போன்று ஒட்டவேண்டும். ஒட்டும்போது சிறகின் குறுந்தகடோடு சேர்ந்து வரும் விளிம்புகளை மட்டுமே ஒட்டினால் போதும். சிறகின் அடிப்பகுதியில் தேவையான நீளத்தில் செல்லோடேப்பினை வெட்டி எடுத்து சிறகினையும் குறுந்தகடினையும் சேர்த்து ஒட்டவும். இது சிறகு அசைவதற்கு உதவிபுரியும். இனி பறவையின் தலையினை ஒட்டியதன் எதிர்பகுதியில் வார்னிஷ் காகிதத்தை மடித்து வாலின் வடிவத்தில் வெட்டி எடுத்து ஒட்டி முழுமைப்படுத்தலாம். படம் (5). இதனை மேசையின் மென்மையான மேல் தளத்தில் வைத்து இயக்கினால் நீண்டநேரம் இது அசைந்து கொண்டிருக்கும்.



படம் 1




படம் 2



படம் 3



படம் 4



படம் 5

## பருவ மதிப்பீடுக்கு உரிய (TE) கருவி - மாதிரி

### செயல் மதிப்பீடு

வகுப்பு : பொருள் : செயல்வழிக்கல்வி

நேரம் : 1 1/2

மதிப்பெண் : 50

---

**செயல்பாடுகள்**

- பல்வகை உயிரினங்களின் வாழிடங்களைப்( உறைவிடம்) பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்குக.
- வாழிடங்களின் முக்கியத்துவம் யாது?
- அவற்றின் சிறப்புத்தன்மைகள் யாவை?
- எந்த உயிரினத்தின் வாழிடத்தை உருவாக்குகிறீர்கள்?

I உருவாக்கப் போகும் வசிக்கும் இடத்தின் பணி / செயல்நாட்குறிப்பேட்டினை 50 சொற்களுக்குக் குறையாமல் தயாராக்குக. (மதிப்பெண் 5)

II எந்த உயிரினத்தின் வாழிடத்தை உருவாக்குகிறீர்கள்? அதன் சிறப்புத்தன்மைகள் யாவை? (மதிப்பெண் 5)

III அதற்குத் தேவையான பொருட்கள் யாவை? ஒவ்வொன்றின் சிறப்புத்தன்மை யாது? (மதிப்பெண் 5)

IV ஒவ்வொரு உயிரினமும் எதற்காக வாழிடத்தை உருவாக்குகிறது? (மதிப்பெண் 5)

V வாழிடங்கள் அழிக்கப்படும் போது நிகழ்வன யாவை? (மதிப்பெண் 2)

VI கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்தி வாழிடத்தினை உருவாக்கி முழுமைப்படுத்தவும். (மதிப்பெண் 25)